# கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திரு செ.ம.வேலுசாமி, B.A.,D.Com., B.L.,**
**வணக்கத்திற்குரிய மேயர்,**
கோயம்புத்தூர் மாநகராட்சி,

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 6117 / 2013 / எம்சி. 8 நாள் : 17.07.2013**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்ற சாதாரணக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற **24.07.2013 புதன்கிழமை பிற்பகல் 3.30** மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி

/உண்மை நகல்/

மாமன்ற செயலாளர்

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற சாதாரணக் கூட்டம் - ஜுலை 2013

## நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| | **பொருளடக்கம்** |
| | அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள்** |
| **1** | பொறியியல் பிரிவு – தெற்கு மண்டலம் - வார்டு எண் 95 – திருமறை நகர் பகுதியில் தார்தளம் அமைத்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **2** | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 59 மகாத்மாகாந்தி சாலையில் தார்சாலை அமைத்தல் - வார்டு எண் 61 குப்பை மாற்று நிலையத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்தல் பணி – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **3** | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 38- பீளமேடு மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் புதியதாக ஆய்வுக்கூடம் கட்டுதல் பணிக்கான மதிப்பீடு ரூ.75,00,000-க்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **4** | Jnnurm - திடக்கழிவு மேலாண்மை, 24x7 குடிநீர் விநியோகம் - போக்குவரத்து மேலாண்மை போன்ற திட்டங்களை வணக்கத்திற்குரிய மேயர் உள்ளிட்ட மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் பிற மாநில மாநகராட்சிகளுக்கு (அகமதாபாத், மும்பை, பூனா, புதுடில்லி, வாரங்கல், ஹுப்ளி, தார்வார், பெல்காம், சூரத், குல்பர்க்கா ) சென்று பார்வையிட்டு வருதல் - மாநகராட்சி நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளுதல் - அரசிடம் அனுமதி பெறுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **5** | பொதுப்பிரிவு - சூன்யா வேஸ்ட் மேனேஜ்மென்ட் (SUNYA - ZERO WASTE MANAGEMENT PROJECT) திட்டத்தின் கீழ் வரும் **22.09.2013** முதல் **28.09.2013** முடிய Brussels, Belgium and Graz, Austria நாட்டில் இத்திட்டம் தொடர்பாக மூன்றாவது கூட்டத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சியின் சார்பில் வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் ஆணையாளர் ஆகியோர் பங்குபெறுதல் **–** அரசின் அனுமதி கோர மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் **–** தொடர்பாக. |
| **6** | பொதுப்பிரிவு – கோயம்புத்தூர் மாநகராட்சி – திரு. என்.தியாகராஜன், உதவியாளர் (ஓய்வு) – உயர்நீதிமன்ற தீர்ப்பு எண்.டபிள்யு.பி.**19038/2010,** நாள்.**22.01.2013–**ன்படி கருத்தியலான பதவி உயர்வு (Notional Promotion) வழங்க மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **7** | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - துடியலூர் வணிக வளாக கடைகள் - வாடகை உயர்வு செய்யப்பட்டது- மாமன்ற தீர்மானத்தை ரத்து செய்து அரசாணையின்படி ஏற்கனவே பேரூராட்சி மூலம் உரிமம் உயர்வு செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவடையப்பட்ட கடைகளுக்கு 01.04.2013 முதல் 31.03.2016 வரையிலான மூன்று ஆண்டுகளுக்கு 15% வாடகை உயர்வு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **8** | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 41க்கு உட்பட்ட கணபதி சக்தி சாலை பகுதியில் உள்ள மராமத்து பணிகள் முடிவுற்ற நவீன கட்டண கழிப்பிடத்தின் உரிமம் ஒப்படை செய்வதற்கு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **9** | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 31க்கு உட்பட்ட சரவணம்பட்டி அம்மன் நகர் குட்டை பகுதியில் சரவணம்பட்டி பேரூராட்சி மூலம் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் இயங்கி வரும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு நியாயவிலை கடைக்கு வாடகை நிர்ணயம் செய்வது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **10** | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 31க்கு உட்பட்ட சரவணம்பட்டி விநாயகா நகர் பகுதியில் சரவணம்பட்டி பேரூராட்சி மூலம் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் இயங்கி வரும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு நியாயவிலை கடைக்கு வாடகை நிர்ணயம் செய்வது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **11** | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம்- வார்டு எண் 57-ற்குட்பட்ட சின்னசாமி லே அவுட் பகுதியில் கட்டப்பட்டுள்ள நான்கு வணிக வளாகக் கடைகள் - வாடகை நிர்ணயம் செய்து ஒப்பந்தப்புள்ளி கோருதல் - ஏலத்தொகை நிர்ணயித்தல்- மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| **12** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம்- ரங்கே கவுடர் வீதி நவீன மலர் அங்காடியில் உள்ள 6 மாதத்திற்கு மேல் நிலுவையில் உள்ள கடைகளை பூட்டி சீல் வைத்தது – மறுபொதுமின் ஏலம் நடத்துதல் - வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டது – மாமன்ற பின்னேற்பு கோருதல் - தொடர்பாக |
| **13** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண்.10, மேட்டுப்பாளையம் ரோட்டில் உள்ள நவீன பேருந்து நிலையத்தில் பொருட்கள் பாதுகாப்பு அறை கட்டணம் வசூலிக்கும் இனம் - வார்டு எண்.24, ரங்கே கவுடர் வீதி நவீன மலர்அங்காடி வணிக வளாகத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் இருசக்கர வாகனம் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் இனம் - வார்டு எண்.24, ரங்கேகவுடர் வீதி நவீன மலர்அங்காடி வணிக வளாகம் கடை எண்.1-A வரிவிதிப்பு எண்.2420596 பூவியாபார அறை – ஆகிய இனங்களை 2013-14-ம் ஆண்டிற்கு குத்தகை இனத்திலிருந்து நீக்கம் செய்வது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| **14** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - 2013-16-க்கான குத்தகை உரிம இனங்கள் மற்றும் வணிக வளாக கடை - வார்டு எண்.22 மேட்டுப்பாளையம் சாலை அண்ணா மார்க்கெட்டில் உள்ள கடை மற்றும் மேட்டுப்பாளையம் ரோடு புதிய பேருந்து நிலையத்தில் இருசக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கரவாகனம் நிறுத்துமிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் - பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது - ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது - உரிமம் ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **15** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - வருடாந்திர உரிமையாணை ரங்கேகவுடர் வீதி, நவீன மலர்அங்காடி, வணிக வளாகத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் இருசக்கர வாகனம் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 2012-13-ம் ஆண்டிற்கு குத்தகை தொகை செலுத்தாததால் உரிமத்தை ரத்து செய்வது, பூ வியாபார அறை, வணிக வளாக கடைகளின் உரிமத்தை ரத்து செய்தல் - மேற்கண்ட இனங்களை மறுஏலம் கொண்டு வருதல் மற்றும் திரு.S.செல்வகுமார் பெயரை கருப்பு பெயர் பட்டியலில் சேர்த்தல் - தொடர்பாக. |
| **16** | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 79 – லாலி ரோடு கடை எண் 2 – ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. உரிமம் ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **17** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - 2013-2016-ம் ஆண்டுக்கான 5 குத்தகை இனங்களுக்கு உயர்ந்த பட்ச ஏலக்கோரிக்கை ஏற்று ஒப்படைப்பு செய்தல் -மாமன்றம் பரிசீலனை செய்து முடிவு செய்தல் - தொடர்பாக |
| **18** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.70- புலியகுளம் சிறுகாளியம்மன் வீதியில் தரை தளத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள இரண்டு கடைகள் - வாடகை நிர்ணயம் செய்து மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் – தொடர்பாக. |
| **19** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.81 - வெரைட்டிஹால் சாலையில் திருமால் வீதியில் உள்ள மாநகராட்சி இடத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு நிதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள கடைக்கு வாடகை நிர்ணயம் செய்து மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் – தொடர்பாக. |
| **20** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.72- வ.உ.சி பூங்கா அருகில் தரைத்தளத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள எட்டு கடைகளுக்கு வாடகை நிர்ணயம் செய்து மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் – தொடர்பாக. |
| **21** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.50 - மாநகராட்சி வணிக வளாக கடைகள் - ராஜீ ரோடு (கிழக்கு) ராஜீ ரோடு (மேற்கு) தரைதளம் மற்றும் ராஜீ ரோடு (மேற்கு) முதல் தளம் - புதியதாக கட்டப்பட்டுள்ள கடைகள் - வாடகை நிர்ணயம் செய்து மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் – தொடர்பாக. |
| **22** | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - குத்தகை இனங்கள் - சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் ஏலமேடை மற்றும் கட்டண கழிப்பிடம் - பொதுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது – உரிமம் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **23** | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 1 - துடியலூர் பகுதியில் மாநகராட்சி மூலம் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு வாடகை நிர்ணயம் செய்து பொதுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் – தொடர்பாக. |

| | |
|---|---|
| **24** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண் 71 – புலியகுளம் ரோட்டில் உள்ள மயான புறம்போக்கு இடம் கடை எண் 2 - வார்டு எண்.83 முத்து விநாயகர் கோயில் வீதி மாதாந்திர வணிக வளாக கடைகள் எண்.3 மற்றும் 4 - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று உரிமம் ஒப்படை செய்யப்பட்டது – மாமன்ற பின்னேற்பு கோருதல் -தொடர்பாக |
| **25** | நகரமைப்புப் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டுஎண் 24 –ரத்தின சபாபதிபுரம், திவான் பகதூர் சாலையில் பலஅடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைத்தல் - அனுமதி வழங்கக் கோரி அரசுக்கு கடிதம் அனுப்புதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **26** | பொறியியல் பிரிவு - புதியதாக இணைக்கப்பட்ட உள்ளாட்சி பகுதிகள் - வார்டு எண் 6, 28, 34 மற்றும் 88 – மறுதார்தளம் அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி – சிப்பங்களாக பிரித்து ஒப்பந்தப்புள்ளி கோருதல் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **27** | பொறியியல் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்தில் புதிய மாமன்றக் கூட்ட அரங்கம் கட்டுதல் - மதிப்பீடு 9.7 கோடி – அரசிடம் நிர்வாக அனுமதி கோருதல் - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக |
| **28** | பொறியியல் பிரிவு - ஒருங்கிணைந்த நகர்புர வளர்ச்சி புனரமைப்புத் திட்டம் (IUDM WORKS) - சிப்பம் 2 மற்றும் 5ல் உள்ள சில பணிகள் வேறு சிப்பங்களிலும் மீதமுள்ள பாதாள சாக்கடை பணி முடிவுற்ற பகுதிகளில் உள்ள சாலைகள் - கூடுதலாகவும் மாற்று பணியாகவும் மேற்கொள்ளப்பட்டதற்கு உரிய பின்னேற்பு வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்புதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **29** | பொறியியல் பிரிவு - வார்டு எண் 80 – ரங்கே வீதி மாநகராட்சி கல்யாணி அறக்கட்டளை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் வகுப்பறைகள் கட்டுதல் மற்றும் அபிவிருத்திப்பணிகள் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **30** | பொறீயல் பிரிவு - தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் குறிச்சி, குனியமுத்தூர், கிணத்துக்கடவு, கவுண்டம்பாளையம், வடவள்ளி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் தலைமையிடங்கள் மற்றும் நீர் சுத்திகரிக்கப்படும் நிலையங்களில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - விரிவான திட்ட அறிக்கையை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயார் செய்யக் கோருதல் - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக |
| **31** | பொறியியல் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண் 73 – திருச்சி சாலை சுங்கம் பகுதியில் உள்ள நேரு பூங்காவை பிரத்யேக மகளிர் பூங்காவாக அமைத்து மகளிர்கான உடற்பயிற்சி சாலை அமைத்தல் மற்றும் அபிவிருத்திப் பணிகள் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **32** | பொது சுகாதாரப்பிரிவு - கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தில் உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் – 54 பயனாளிகளுக்கு வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்குவது - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **33** | பொறியியல் பிரிவு - சிங்காநல்லூர் பேருந்து நிலையத்திற்கு அருகில் தேசிய நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான சாலையில் நடைபாதை மேம்பாலம் அமைத்தல் - மதிப்பீடு ரூ.75.00 இலட்சம் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **34** | பொறியியல் பிரிவு - திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் - பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் - விருப்ப கேட்பு அறிக்கை கோருதல்- மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **35** | பொறியியல் பிரிவு - தெருநாய்களை பிடிப்பதற்கு 2 எண்ணிக்கைகள் தெருநாய்பிடிக்கும் வாகனங்கள் வாங்குதல் - ஒப்பந்தப் புள்ளியினை ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **36** | பொறியியல் பிரிவு - சில்லறை செலவினப் பணியாளர்களாக பணிபுரிந்துவரும் 10 நபர்களை தேர்ச்சி திறனற்ற பணியாளர் பணியிடத்தில் விதி தளர்வு செய்து பணியமர்த்துதல் - அரசிற்கு பரிந்துரை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **37** | நகரமைப்பு பிரிவு – கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் உள்ள பூங்காக்கள் பராமரித்தல் மற்றும் சாலைகளில் உள்ள மையத்திட்டுகளில் செடிகள் வளர்த்து பராமரித்தல் – பொது நிறுவனங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்குதல் – மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் – தொடர்பாக. |

| | |
|---|---|
| **38** | கல்வி பிரிவு - மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் (e-corp) எனப்படும் கணினி வழிக்கல்வி வகுப்புகள் அமைத்திட நிபுணர் குழு அமைத்தல் - மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| **39** | கல்வி பிரிவு - மாநகராட்சி பள்ளிகளில் 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு பயிலும் மாணவ,மாணவியர் பொதுத்தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற ஆலோசனைகள் வழங்க குழு அமைத்தல் - அனுமதி கோருதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| **40** | கல்வி பிரிவு - மாநகராட்சி பள்ளிகளில் 10 முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு உகந்த மற்றும் வேலை வாய்ப்புத் தரக்கூடிய சரியான மேற்கல்வியினை தேர்ந்தெடுக்க தனியார் நிறுவன ஆலோசகர் மற்றும் தமிழக அரசின் வேலை வாய்ப்புத் துறை உதவியுடன் சிறப்பு முகாம்கள் நடத்த குழு அமைத்தல் - ரூ.5.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| **41** | கல்வி பிரிவு - மாநகராட்சி பள்ளிகளின் கல்வித்தரத்தினை தனியார் பள்ளிகளின் கல்வித்தரத்திற்கும் மேலாக மேம்படுத்த ஆலோசனை வழங்க குழு அமைத்தல் - ரூ.25.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| **42** | கல்வி பிரிவு - புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டம் - மாநகராட்சி பள்ளிகளில் சமையல் செய்யும் பழைய பாத்திரங்களுக்கு பதிலாக புதிய பாத்திரங்களை பள்ளி சத்துணவு மையங்களுக்கு வாங்கி வழங்குதல் -மாநகராட்சி நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| **43** | கல்வி பிரிவு - புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டம் - மாநகராட்சி பள்ளிகளில் எல்.பி.ஜி. சிலிண்டர் மற்றும் அடுப்புகள் நிறுவுதல் மற்றும் எரிவாயு சிலிண்டர்களை தொடர்ந்து வாங்கி பள்ளி சத்துணவு மையங்களுக்கு வழங்குதல் - செலவினம் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| **44** | கல்வி பிரிவு - மாநகராட்சி நடுநிலை மற்றும் ஆரம்பப்பள்ளிகளில் உள்ள விளையாட்டு மைதானங்களை சீரமைத்து புதிதாக விளையாட்டு உபகரணங்களை கொள்முதல் செய்து நிறுவுதல் - ரூ.60.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| **45** | பொதுசுகாதாரப்பிரிவு -சுவர்ண ஜெயந்தி திட்டம் - நகர்புற இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டம் – 2012-12 ம் ஆண்டு தேர்வு செய்யப்பட்ட தகுதியுடைய பயனாளிகளின் பெயரை வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் சேர்ப்பது – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **46** | பொறியியல் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கவும் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்யவும் பிளம்பர்கள் உரிமம் வழங்குவது –தகுதிகளில் திருத்தம் செய்தது – மாமன்றத்தின் அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **47** | பொறியியல் பிரிவு - நகர்ப்புற பகுதியில் திறந்த வெளியில் மனித கழிவு கழிக்கும் நிலை இல்லாத நிலையை உருவாக்குதல் - ஐந்து மண்டலங்களில் 19 இடங்களில் ‘‘ நம்ம கழிப்பிடங்கள்’’ கட்டுதல் பணி – ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **48** | பொறியியல் பிரிவு - மத்திய மண்டலம் - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 48, 70, 71, 72, 73, 74, 80, 81, 82, 83, 84, 25, 45, 49, 50, 51, 52, 53, 54 மற்றும் 68 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்தல் பணி - ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு ஈடுபடுத்துதல் - மதிப்பீடு ரூ.69 இலட்சம் - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |
| **49** | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் 60,61,62,63,64,65,66,67,69 மற்றும் 75 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்தல் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு ஈடுபடுத்துதல் - மதிப்பீடு ரூ.51.00 இலட்சம் - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |
| **50** | பொறியியல பிரிவு - கிழக்கு மண்டலம் - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 32,33,34,35,36,37,56,57,58 மற்றும் 59 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்தல் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு ஈடுபடுத்துதல் - மதிப்பீடு ரூ.51.40 இலட்சம் - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |

| | |
|---|---|
| **51** | பொறியியல்பிரிவு - மேற்கு மண்டலம் - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் 5,6,7,8 மற்றும் 9 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்தல் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு ஈடுபடுத்துதல் - மதிப்பீடு ரூ. 70.00 இலட்சம் - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக |
| **52** | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் 10,13,14,15,17,18,21 மற்றும் 23 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்தல் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு ஈடுபடுத்துதல் - மதிப்பீடு ரூ.65.00 இலட்சம் - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |
| **53** | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் 11,12,16,19,20,22 மற்றும் 24 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்தல் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு ஈடுபடுத்துதல் - மதிப்பீடு ரூ.56.00 இலட்சம் - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |
| **54** | பொறியியல்பிரிவு - வடக்கு மண்டலம் - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் 42,43,44,46 மற்றும் 47 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்தல் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு ஈடுபடுத்துதல் - மதிப்பீடு ரூ. 54.30 இலட்சம் - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |
| **55** | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் 31,38,39,40 மற்றும் 41 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்தல் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு ஈடுபடுத்துதல் - மதிப்பீடு ரூ.54.90 இலட்சம் - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |
| **56** | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் 27,28,29,30 மற்றும் 35 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்தல் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு ஈடுபடுத்துதல் - மதிப்பீடு ரூ.54.70 இலட்சம் - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |
| **57** | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் 27,28,29,30 மற்றும் 35 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்தல் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு ஈடுபடுத்துதல் - மதிப்பீடு ரூ.54.50 இலட்சம் - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |
| **58** | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் 76,77,78,79,85,86,87,88,89,90,91 மற்றும் 92 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்தல் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு ஈடுபடுத்துதல் - மதிப்பீடு ரூ.59.50 இலட்சம் - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |
| **59** | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் 93,94,95,96,97,98,99 மற்றும் 100 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்தல் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு ஈடுபடுத்துதல் - மதிப்பீடு ரூ. 58.50 இலட்சம் - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |
| **60** | குடிநீர் விநியோகம் - மாநகராட்சி பிரதான அலுவலகம் மற்றும் ஐந்து மண்டல அலுவலகங்களில் கணினிகளை இயக்கி பராமரித்தல் பணி – 70 கணினி விபர பதிவாளர் உள்ளிட்ட பணியாளர்கள் - ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்துதல் - ஒப்பந்ததாரரை தேர்வு செய்து ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கும் வரை ஏற்கனவே பணியினை மேற்கொண்டு வரும் M/s. KG Information Systems Pvt Ltd., நிறுவனத்திற்கு மேலும் ஐந்து மாத காலத்திற்கு (ஏப்ரல் 2013, முதல் ஆகஸ்ட் 2013 வரை) ஏற்கனவே உள்ள ஒப்பந்த விலை விகிதத்தின்படி ஒப்பந்தக்காலத்தை நீட்டிப்பு செய்தல் - செலவினத் தொகை தோராயமாக ரூ.20,00,000ஐ ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **61** | பொறியியல் பிரிவு - கட்டிட கட்டுமானம், மராமத்து பணிகள் போன்றவற்றிற்கு 2013-2014-ம் ஆண்டுக்கான தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணை - மாநகராட்சியில் நடைமுறைப்படுத்துதல் - மாமன்றம் பதிவு செய்தல் - தொடர்பாக |

| | |
|---|---|
| **62** | பணியமைப்பு – தனியார் ஒப்பந்தம் மூலம் தற்காலிகமாக சுருக்கெழுத்து தட்டச்சர் நியமனம் செய்வது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **63** | பணியமைப்பு – மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்களின் பணித் திறனை மேம்படுத்தும் வகையில் ஓர் புத்தாக்கப் பயிற்சியினை தனியார் அமைப்பு மூலம் வழங்குதல் – மாமன்ற அனுமதி கோருதல் – தொடர்பாக. |
| **64** | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - தற்சமயம் தெற்கு மற்றும் மத்திய மண்டல பகுதிகளுக்குட்பட்ட 26 எண்ணிக்கையிலான பூங்காக்கள் பராமரித்தல் பணி – செலவினத்தொகை ரூ. 49.95 இலட்சம் - மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளதல் - திருவாளர்கள் திரிஷா ரோஸ் கார்டன் பி. லிட் நிறுவனத்தினருக்கு ஒப்பந்தகாலம் நீட்டிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **65** | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - தற்சமயம் கிழக்கு மற்றும் வடக்கு மண்டல பகுதிகளுக்குட்பட்ட 30 எண்ணிக்கையிலான பூங்காக்கள் பராமரித்தல் பணி – செலவினத்தொகை ரூ. 46.00 இலட்சம் -மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளதல் - திருவாளர்கள் திரிஷா ரோஸ் கார்டன் பி. லிட் நிறுவனத்தினருக்கு ஒப்பந்தகாலம் நீட்டிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **66** | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - தற்சமயம் கிழக்கு மற்றும் மத்தியம் மற்றும் வடக்கு மண்டல பகுதிகளுக்குட்பட்ட 24 எண்ணிக்கையிலான பூங்காக்கள் பராமரித்தல் பணி – செலவினத்தொகை ரூ. 44.70 இலட்சம் -மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளதல் - திருவாளர்கள் திரிஷா ரோஸ் கார்டன் பி. லிட் நிறுவனத்தினருக்கு ஒப்பந்தகாலம் நீட்டிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **67** | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - தற்சமயம் மேற்கு மற்றும் தெற்க மண்டல பகுதிகளுக்குட்பட்ட 36 எண்ணிக்கையிலான பூங்காக்கள் பராமரித்தல் பணி – செலவினத்தொகை ரூ. 49.35 இலட்சம் -மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளதல் - திருவாளர்கள் திரிஷா ரோஸ் கார்டன் பி. லிட் நிறுவனத்தினருக்கு ஒப்பந்தகாலம் நீட்டிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **68** | குடிநீர் விநியோகக்கணக்குப்பிரிவு – கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித்திட்டத்தின் (TNUDF) கீழ் உள்ள கடன் தொகையை வட்டி விகிதம் குறைத்து குடிநீர் மற்றும் சுகாதாரக்கூட்டு நிதியம் என்னும் நிறுவனம் (WSPF) மறுகடனாக ரூ. 1,36,57,223/–க்கு வழங்க உத்தேசித்து கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு அளிப்பதை ஏற்றுக்கொள்வது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **69** | பொது கணக்கு பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சியின் பொறுப்பிலிருந்த மின் வாரியம் – 01.11.94 முதல் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் பொறுப்பேற்கப்பட்டது இழப்பீட்டுத் தொகை ரூ.9,09,75,355/–ஐ தமிழ்நாடு மின்சார வாரியத்திடமிருந்து பெறுதல் – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **70** | பொறியியல் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் நான்கு மண்டலங்களில் உள்ள 40 வார்டுக்கு உட்பட்ட தெருவிளக்குகளை அரசு மற்றும் தனியார் கூட்டு ஒப்பந்த முறையில் (PPP) பராமரிப்பு செய்யவும், மின் ஆற்றல் தணிக்கை செய்தல் மற்றும் தெருவிளக்குகள் பொருத்துதல் மேற்கொள்ள பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் – தொடர்பாக. |
| **71** | வருவாய் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி – ஆவின்பாலகம் கடை நடத்த அனுமதி கோருவது - மாமன்ற ஒப்புதல் வேண்டுதல் - தொடர்பாக. |

**நன்றியுரை**

**அ)** **திருக்குறள்**

யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற.

**(குறள் - 300)**

**விளக்கம்**

ஆராய்ந்து பார்க்கும்போது, நிலையான பயனைத் தருவதில் வாய்மையைப் போன்ற சிறந்த குணம் வேறில்லை.

**திருவள்ளுவர்**

---

**ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

## சிறப்புத் தீர்மானம் 1

தொழிலாளர் நலத்திற்காகவும், மாநில மக்களின் நலனிற்காகவும் மாநிலத்தின் மின்சார பாதுகாப்பிற்காகவும் இந்திய அரசாங்கத்துடன் பயனுள்ள பேச்சுவார்த்தைகளை நடத்தி, மத்திய அரசிற்குச் சொந்தமான லாபகரமாக இயங்கிவரும் நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் (NLC) 5 சதவீத பங்குளை தனியாருக்கு விற்கும் மத்திய அரசின் முடிவை திரும்பப்பெற செய்தும், அந்த 5 சதவீத பங்குகளை தமிழ்நாடு அரசே வாங்குவதற்கு முடிவெடுத்து செயல்படுத்தி இந்திய வரலாற்றிலேயே எந்த மாநிலத்தின் முதலமைச்சரும் சாதிக்காத ஒரு செயலை தன்னுடைய திறமையால் தமிழக மக்களின் நலனிற்காக சாதித்துக் காட்டியுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு இம்மாமன்றம் இதயமார்ந்த தனது நன்றிகளை காணிக்கையாக்குகிறது என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதியுடன் 44 வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.ரா. வெண்தாமரை பாலு அவர்களால் முன்மொழியப்பட்டு சுகாதாரக்குழு தலைவர் திருமதி எஸ். தாமரைச்செல்வி அவர்களால் வழிமொழியப்பட்டது.

**<u>சிறப்புத் தீர்மானம் 1 நாள் 24.07.2013</u>**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## சிறப்புத் தீர்மானம் 2

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிற ‘‘அம்மா திட்டத்’’தினால் சமுதாயத்தின் பலதரப்பினரும் பயன்பெற்று வருகிறார்கள். கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் புதியதாக இணைந்துள்ள உள்ளாட்சிகள் உள்ளடக்கிய 40 வார்டுகளிலும் அம்மா திட்டம் என்ற பெயரில் ஏற்படுத்தி, அதில் சொத்துவரி, குடிநீர் வரி புத்தகங்கள் மற்றும் பொதுமக்கள் தொடர்புடைய மாநகராட்சி ஆவணங்களிலுள்ள குறைபாடுகளை சரிப்படுத்திக்கொள்ள ஒரு வாய்ப்பாக அமைத்து செயல்படுத்த வேண்டும் என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதியுடன் நியமனக்குழு உறுப்பினர் திரு ம. ராஜேந்திரன் அவர்களால் முன்மொழியப்பட்டு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவர் திரு. ஆர். பிரபாகரன் அவர்களால் வழிமொழியப்பட்டது.

**<u>சிறப்புத் தீர்மானம் 2 நாள் 24.07.2013</u>**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## சிறப்புத் தீர்மானம் 3

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் உள்ள திருமண மண்டபங்கள் மற்றும் இடநெருக்கடியான பகுதிகளில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பட்டாசுக் கடைகள் வைத்து நடத்தப்படுவதால் கூட்ட நெரிசலும், போக்குவரத்திற்கு இடையூறும் ஏற்படுகிறது. மேலும் தீவிபத்து ஏற்படும் அபாயமும் உள்ளது.

எனவே, இதனை தவிர்க்கும் பொருட்டு சென்னை மாநகராட்சியில் தீவுத்திடலில் பட்டாசுக் கடைகள் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளதைப்போல், கோவை மாநகராட்சி பகுதியில் வ.உ.சி. பூங்கா மைதானத்தில் சட்டவிதிமுறைகளுக்கு உட்பட்டு பட்டாசுக்கடைகள் வைத்து நடத்திக்கொள்ள அனுமதிக்கலாம். மேலும் மாநகராட்சியின் ஐந்து மண்டலங்களில் எந்தெந்த இடங்களில் இதுபோன்று கடைகள் வைத்து நடத்திக்கொள்ள அனுமதிக்கலாம் என்பதை முடிவு செய்யும் அதிகாரத்தை மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு அளிக்கலாம் என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதியுடன் 44-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. ரா. வெண்தாமரை பாலு அவர்களால் முன்மொழியப்பட்டு 62வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு எஸ். பாலன் அவர்களால் வழிமொழியப்பட்டது.

**<u>சிறப்புத் தீர்மானம் 3 நாள் 24.07.2013</u>**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## பொருள் எண் 1

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளன. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 25.04.2013 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1294/13/ எம்.டி.4 | வார்டு எண்.95ல் திருமறை நகர் பகுதியில் தார்தளம் அமைத்தல் | 75.00 | 15-04-2013 இரண்டாவது அழைப்பு | 1.திரு. ஆர். தனபால் கோயம்புத்தூர் 0.002% குறைவு<br>2. திரு. ஆர். கிருஷ்ணசாமி கோயம்புத்தூர் 11.72% அதிகம் | திரு. ஆர். தனபால் கோயம்புத்தூர் 0.002% குறைவு |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண் : 1294/13/ எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 77 நாள் 24.07.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 2

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 25-04-2013 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 478/13/ எம்.டி.3 | வார்டு எண்.59 கிழக்கு மண்டலம் - மகாத்மா காந்தி ரோடு தார்சாலை அமைத்தல் பணிக்கு | 72.10 | 15-04-2013 இரண்டவது அழைப்பு | 1.திரு. ஆர் . தனபால், கோயம்புத்தூர் 0.52% அதிகம்<br>2.திரு.ஆர். கிருஷ்ணசாமி, கோயம்புத்தூர் 0.01% குறைவு | திரு.ஆர். கிருஷ்ணசாமி, கோயம்புத்தூர் 0.01% குறைவு |
| 2 | 12550/12/ எம்.டி.3 | வார்டு எண்.61 கிழக்கு மண்டலம் - குப்பை மாற்று நிலையத்தை சுற்றி சுற்றுச்சுவர் அமைத்தல் | 66.90 | 15-04-2013 இரண்டாவது அழைப்பு | 1.தி/ள் கே.சி.பி. இன்ஜினியர்ஸ். கோயம்புத்தூர் 2.32 % அதிகம்.<br>2. திரு. கே. ராமசாமி, கோயம்புத்தூர் 0.03% குறைவு | திரு. கே. ராமசாமி, கோயம்புத்தூர் 0.03% குறைவு |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம். ந.க.எண் 478/2012 /எம்.டி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 78 நாள் 24.07.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 3

பொருள் கோயம்புத்தூா் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - வாா்டு எண் 38- பீளமேடு மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் புதியதாக ஆய்வுக்கூடம் கட்டுதல் பணிக்கான மதிப்பீடு ரூ.75,00,000-க்கு மாமன்றத்தின் நிா்வாக அனுமதி வேண்டுதல் - சம்பந்தமாக

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி 2013–2014ம் ஆண்டு வரவு செலவு திட்ட அறிக்கையில் மாநகராட்சி பள்ளிகளில் ஆய்வுக்கூடம் அமைத்தல் என்னும் தலைப்பின் கீழ் மாநகராட்சிக்கு சொந்தமான 16 மேல்நிலைப்பள்ளிகளில் மண்டலத்திற்கு ஒரு பள்ளி விகிதம் 5 பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு அறிவியல் அறிவைச் சிறப்பான செயல்பாட்டுடன் கற்பிக்கும் வகையில் அய்வுக்கூடம் அமைப்பதற்கு ரூ.375 லட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதி ஒதுக்கீட்டில் வடக்கு மண்டலத்திற்கு உட்பட்ட வார்டு எண்.38ல் பீளமேடு பயனீர் மில் சாலையில் அமைந்துள்ள மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் புதியதாக அறிவியல் ஆய்வுக்கூடம் அமைத்தல் மதிப்பீடு ரூ.75,00,000/–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண். 05415/2013/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 79 நாள் 24.07.2013</u>**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீா்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 4

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் (விரிவாக்க பகுதிகள் நீங்கலாக) சிறுவாணி மற்றும் பில்லூர் IIவது குடிநீர் திட்டம் ஆகிய இரு குடிநீர் திட்டங்களிலிருந்து தினசரி கிடைக்கப்பெறவுள்ள 200 மில்லியன் லிட்டர் கொள்ளளவு குடிநீரினை கொண்டு, 24 மணி நேரமும் தங்கு தடையின்றி, சீரான குடிநீர் மாநகராட்சி பகுதி மக்களுக்கு வழங்கும் பொருட்டு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின்கீழ் 24x7 குடிநீர் விநியோக திட்டம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தொழில்நுட்ப கலந்தாலோசக நிறுவனமான தி/ள். பிட்சனர் கன்சல்ட்டிங் இன்ஜினியர்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டப்பணியில் கூடுதல் மேல்நிலை தொட்டிகள் பிரதான மற்றும் விநியோக மெயின் குழாய்கள் புதியதாக பதித்தல், வீட்டிணைப்பு குழாய்கள் நவீன அளவுமானியுடன் பொருத்துதல், விநியோக தானியங்கி சுலிஸ் வால்வுகள் கணினி மூலம் செயல்படுத்துதல் பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ. 496.81 கோடி ஆகுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்ட அறிக்கை குறித்தான விபரங்கள் மற்றும் விளக்கத்தினை வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு Power Point Presentation மூலம் கடந்த 18.01.2012 தேதியன்று, திட்ட அறிக்கையினை தயாரித்த கலந்தாலோசக நிறுவனத்தினரால் விரிவாக விளக்கப்பட்டது. இத்திட்டம் அண்டை மாநிலமான கர்நாடக மாநிலம் ஹுப்ளி, தார்வார், பெல்காம் மற்றும் குல்பர்க்கா (Hubli, Dharward, Belgaum & Gulbarga) போன்ற மாநகராட்சிகள் ஒவ்வொன்றிலும் ஒரு பகுதி மட்டும் (Demo Zone) கடந்த 4 வருடங்களுக்கும் மேலாக செயல்படுத்தப்பட்டு நன்கு இயங்கி வருகிறதெனவும் தெரிவித்தனர்.

இவ்வாறு செயல்படுத்தி வரும் திட்டத்தினை நேரில் சென்று எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது என்பதை கண்டு ஆய்வு செய்து வரவேண்டும் என விளக்க கூட்டத்தில் கலந்துகொண்ட மாமன்ற உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர்.

பிற மாநில மாநகராட்சிகளில் (அகமதாபாத், மும்பை, பூனா, புதுடில்லி, வாரங்கல், ஹுப்ளி, தார்வார், பெல்காம், சூரத் மற்றும் குல்பர்க்கா) சிறப்பாக செயல்படுத்தப்படும் திட்டப்பணிகளை வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் மாநகராட்சி அதிகாரிகளுடன் நேரில் சென்று பார்வையிட்டு அவற்றின் சிறந்த செயல்பாடுகளை கோவையில் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. குறிப்பாக திடக்கழிவு மேலாண்மை (Solid Waste), கட்டிடக் கழிவுகள் மேலாண்மை (C & D waste), 24x7 குடிநீர் விநியோகம் (24 x 7 Water Supply) மற்றும் போக்குவரத்து மேலாண்மை (BRTS – Transport) போன்ற திட்டங்களை ஒவ்வொரு திட்டத்திற்கும் தனித்தனி குழுக்களாக அமைத்து மேற்படி திட்டங்களை பார்வையிட்டு கோயம்புத்தூர் மாநகரில் செயல்படுத்துவதற்கு திட்டப் பணிகளை பார்வையிட்டு தெரிந்து வருவதற்கும், அதற்கான செலவினம் சுமார் ரூ. 72,00,000/– தொகையினை மாநகராட்சி நிதியிலிருந்து செலவழிக்கவும் சென்று வருவதற்கான அனுமதியினை அரசிடமிருந்து பெறுவதற்கும் அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u> பிற மாநில மாநகராட்சிகளில் (அகமதாபாத், மும்பை, பூனா, புதுடில்லி, வாரங்கல், ஹுப்ளி, தார்வார், பெல்காம், சூரத் மற்றும் குல்பர்க்கா) சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப்பணிகளை வணக்கத்திற்குரிய மேயர், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் சென்று அனைத்து திட்டப்பணி செயல்பாடுகளை பார்வையிட்டு தெரிந்து வருவதற்கான அனுமதியினை அரசிடமிருந்து பெறவும், அதற்கான செலவினம் சுமார் ரூ. 72,00,000/– தொகையினை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 2896/08/ஜே. என். 5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 80 நாள் 24.07.2013</u>**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 5**

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி – சூன்யா வேஸ்ட் மேனேஜ்மென்ட் (SUNYA - ZERO WASTE MANAGEMENT PROJECT) திட்டத்தின் கீழ் வரும் 22.09.2013 முதல் 28.09.2013 முடிய Brussels, Belgium and Graz, Austria நாட்டில் இத்திட்டம் தொடர்பாக மூன்றாவது கூட்டத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சியின் சார்பில் வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் ஆணையாளர் ஆகியோர் பங்குபெறுதல் – அரசின் அனுமதி கோர மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் தொடர்பாக.

பார்வை 1 அரசாணை எம்.எஸ். எண்.147, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.சி.2) துறை, நாள்.29.09.2011.

2 நிர்வாக செயலாளர் Municipal Association of Nepal அவர்களின் கடித எண்.174/069/70, நாள்.03.07.2013.

---------

பார்வை 1ல் காணும் அரசாணையில் சூன்யா வேஸ்ட் மேனேஜ்மென்ட் திட்டத்தில் (SUNYA - ZERO WASTE MANAGEMENT PROJECT) கோயம்புத்தூர் மாநகராட்சி பங்கேற்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 2ல் காணும் நிர்வாக செயலாளர், Municipal Association of Nepal அவர்களது கடிதத்தில், மேற்படி திட்டத்தின் மூன்றாவது கலந்தாலோசனை கூட்டம் வரும் 22.09.2013 முதல் 28.09.2013 முடிய Brussels, Belgium and Graz, Austria நாட்டில் நடைபெற உள்ளதாகவும் அக்கூட்டத்திற்கு கோயம்புத்தூர் மாநகராட்சியின் சார்பில் 2 அல்லது 3 அலுவலர்களை கலந்துகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி அலுவலர்கள் கூட்டத்தில் கலந்து கொள்வது சம்பந்தமாக பயணத்திற்கு ஆகும் மொத்த செலவினங்களையும் மேற்கூறிய திட்டத்திற்கென ஏற்கனவே இம்மாநகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட மானியத்திலிருந்து மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே சூன்யா வேஸ்ட் மேனேஜ்மென்ட் (SUNYA - ZERO WASTE MANAGEMENT PROJECT) திட்டம் தொடர்பாக மூன்றாவது கூட்டத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு கோயம்புத்தூர் மாநகராட்சியின் சார்பில் வணக்கத்திற்குரிய மேயர், ஆணையாளர் மற்றும் ஒரு அலுவலர் ஆகியோர் கலந்து கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டியும் அரசின் அனுமதி பெற கருத்துரு அனுப்பவும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.109/2011/எம்.சி.6

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 81 நாள் 24.07.2013</u>**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 6

பொருள்– பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – திரு. என்.தியாகராஜன், உதவியாளர் (ஓய்வு) – உயர்நீதிமன்ற தீர்ப்பு எண்.டபிள்யு.பி.19038/2010, நாள்.22.01.2013–ன்படி கருத்தியலான பதவி உயர்வு (Notional Promotion) வழங்க மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

––––––

மனுதாரர், திரு. என். தியாகராஜன், தாராபுரம் நகராட்சியில் 20.11.1968 அன்று இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்து, பின்னர் 25.08.1980 அன்று கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு மாறுதலாகி வந்து, பணியாற்றி 30.04.2005 அன்று உயர்த்தப்பட்ட உதவியாளராக பணி ஓய்வு பெற்றுள்ளார்.

மேற்படியாரின் நியமன நாளான 20.11.1968 முதல் 15.07.1977 வரையுள்ள பணிகாலத்தில், ஏற்பட்ட பணிமுறிவு காலங்களை அனைத்துக் காரியங்களுக்காகவும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென, உயர்நீதி மன்றத் தீர்ப்பு டபிள்யு.பி.எண்.11642/97, நாள்.20.12.1999–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனைக் கருத்தில்கொண்டு மேற்படி அவ்வப்போது ஏற்பட்ட பணிமுறிவு காலத்தை பொருட்படுத்தாதுவிட்டு (condoned), 20.11.1968 முதலான பணிக்காலத்தை ஊதிய நிர்ணயம் முதலானவற்றிற்கு கணக்கில் கொள்ளுமாறும் அரசாணை எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.16.05.2002–ல் ஆணை பிறப்பித்தது.

மேற்படி அரசாணைப்படி, மேற்படியார் பணியில் சேர்ந்த நாளான 20.11.1968 முதல் 15.07.1977 வரை வரன்முறைப்படுத்தியும் (Regularised), 09.04.1973–ந் தேதியில் தகுதிகாண் பருவம் (Probation Declaration) முடித்தமைக்கும், ஊதிய நிர்ணயம், தேர்வு நிலை, சிறப்பு நிலை, உதவியாளர் பதவியில் தேர்வு நிலை ஆகியவைகளை திருத்தி அமைத்தும் கிழக்கு மண்டல உதவி ஆணையரது உத்திரவு ந.க.எண்.15687/2002/கிசி, நாள்.17.04.2003 உத்திரவின்படி மேற்படியாளருக்கு அனைத்து பணப்பலன்களும் வழங்கப்பட்டது.

மேற்காண் உயர்நீதிமன்றத் தீர்ப்பு மற்றும் உதவி ஆணையரின் உத்திரவு ஆகியவைகளின்படி இளநிலை உதவியாளராக சேர்ந்த 20.11.1968–ஐ அடிப்படையாகக் கொண்டு பதவி உயர்வு வழங்குமாறு கோரியதைத் தொடர்ந்து, உயர்மன்றத்தீர்ப்பிலும், அரசாணையிலும் தனியருக்கு பணிமூப்பு வழங்குமாறு குறிப்பிடவில்லையாதலாலும், மேற்படியார் பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்டதாலும், கருத்தியல் பதவி உயர்வு வழங்க பணி விதிகளில் வழிவகை இல்லை எனவும், மேற்படியாரது கோரிக்கையை ஏற்க இயலாதெனவும், ஆணையரின் உத்திரவு எண்.752/2007/எம்சி2, நாள்.12.05.2010ன்படி இவ்வலுவலக கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.

மேற்காணும் இவ்வலுவலக கடிதத்தை எதிர்த்து திரு. என்.தியாகராஜன், சென்னை உயர்நீதிமன்றத்தில் மீண்டும் வழக்கு தொடர்ந்ததின் பேரில் உயர்நீதிமன்ற ஆணை எண்.டபிள்யு.பி. 19038/2010, நாள். 22.01.2013–ல் ''இவ்விசயத்தை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு இளையவருக்கு இணையாக மனுதாரருக்கு 20.11.1968 –ந் தேதிய ஆரம்ப நியமனத்தைக் கொண்டு கருத்தியலாக பதவி உயர்வு வழங்க வேண்டும்'' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தீர்ப்பின்படியும் தனக்கு அடுத்த இளையவர்களில் பதவி உயர்வு பெற்றவர்களின் பணிமூப்புப் பட்டியல்களையும் பதவி உயர்வுக்குத் தகுதியானவர்களின் (Panel) பட்டியலையும் இணைத்து, அதன்படி 03.05.1989–ந் தேதி உதவியாளராகவும், 14.12.2000–ந் தேதி கண்காணிப்பாளராகவும் மற்றும் 15.12.2003–ந் தேதி கணக்கு அலுவலராகவும் தனக்கு கருத்தியல் பதவி உயர்வுகளை முன் தேதியிட்டு வழங்குமாறும், இதன்படி சம்பள நிர்ணயம், ஊதியக் குழு பரிந்துரைகளின்படியான ஊதிய விகித மாற்றங்கள் தேர்வு நிலை, ஓய்வு காலப் பயன்கள் போன்றவைகளை திருத்தியமைக்குமாறும், மற்றும் அதற்கான பணப்பலன்களை தனக்கு வழங்குமாறும் மேற்படியார் 25.02.2013 மற்றும் 11.03.2013–ந்தேதிய கடிதங்களில் கோரியுள்ளார்.

உயர்நீதிமன்றத் தீர்ப்புப்படி, திரு. என்.தியாகராஜன் அவர்களது கோரிக்கை பரிசீலனை செய்வதற்காக, அலுவலகத்திலுள்ள கீழ்காணும் ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டது.

உத்திரவு எண்.116286/1986/சி3, நாள்.10.12.1987–ல் அனைத்து இளநிலை உதவியாளர்களின் பணி நியமன நாள் மற்றும் கணக்குத்தேர்வில் தேர்ச்சி பெற்ற நாள் ஆகிய விபரங்கள் உள்ளன. அவற்றில் திரு. என்.தியாகராஜன் அவர்களுக்கு இளையவர்களில் முதலில் பதவி உயர்வு பெற்றவர்களின் விபரங்களை கீழே பட்டியலிடப்பட்டு உள்ளது.

| வ. எண் | 01.12.1986ன் பணிமூப்பு பட்டியலின் வரிசை எண் | இளநிலை உதவியாளரின் பெயர் | நியமன தேதி | பணி பதிவேட்டின் பதிவு செய்யப்பட்ட பக்கம் எண் | கணக்குத் தேர்வில் தேர்ச்சி பெற்ற தேதி | பணி பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட பக்கம் எண் |
|---|---|---|---|---|---|---|
| 1. | 94 | கே. சரோஜினி | 25.02.1969 | - | 13.05.1977 | - |
| 2. | 149 | பி.தங்கராஜ் | 15.03.1974 | பக்கம் எண் 4 Vol. I | 17.05.1980 | பக்கம் எண் 3 Vol. I |
| 3. | 175 | என். தியாகராஜன் | 20.11.1968 (ஆரம்ப நியமனம்) | பக்கம் எண் 4 Vol. I | 16.11.1979 | பக்கம் எண் 4 Vol. II |

அ) மேற்படி பட்டியலில் உள்ளவர்களின் பணிப்பதிவேடுகள் ஆய்வு செய்யப்பட்டது.

உதவியாளர் பதவி

திரு. என்.தியாகராஜன், அவர்கள் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்ட **20.11.1968–ந்** தேதிக்கு அடுத்து இளையவராக **24.02.1969–ந்** தேதியில் நியமனம் செய்யப்பட்ட திருமதி. கே.சரோஜினி அவர்களது பணிப்பதிவேடு ஆய்வு செய்யப்பட்டடதில் மேற்படியார் **03.05.1989–ந்** தேதி உதவியாளராக பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே, திரு. என்.தியாகராஜன் அவர்களுக்கு முன் தேதியிட்டு **03.05.1989–ந்** தேதியன்று அடிப்படைச் சம்பளம் விகிதம் **1200–30–1560–40–240** –ல் உதவியாளராக கருத்தியல் பதவி உயர்வு அளிக்கலாம்.

ஆ) கண்காணிப்பாளர்/கணக்கு அலுவலர் பதவி

திரு. என்.தியாகராஜன் அவர்களுக்கு இளையவராக **15.03.1974–ல்** இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்ட திரு. பி.தங்கராஜ் அவர்களது பணிப்பதிவேடு ஆய்வு செய்ததில், பக்கம் எண்.**6**/Vol-V–ல் **14.12.2000–ந்** தேதியில் கண்காணிப்பாளராகவும், பக்கம் எண். **10**/Vol-V-ல் **15.12.2003** –ந் தேதி கணக்கு அலுவலராகவும், பதவி உயர்வுகள் அளிக்கப்பட்டுள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

எனவே, திரு. என்.தியாகராஜன், அவர்களுக்கு **14.12.2000–ந்** தேதிமுதல் முன் தேதியிட்டு ஊதிய விகிதம் **5300–150–8000–ல்** கண்காணிப்பாளராகவும், **15.12.2003–ந்** தேதியன்று முன் தேதியிட்டு சம்பள விகிதம் **6500–200–10500–ல்** கணக்கு அலுவலராகவும் பதவி உயர்வுகள் அளிக்கலாம்.

இ) மேலும், திரு. என்.தியாகராஜன், அவர்களுக்கு உதவியாளர் பதவியில் தேர்வுநிலையை, சம்பள விகிதம் **1320–30–1560–40–2040**, நாள்.**03.05.1992–ந்** தேதி முதல் வழங்கலாம்.

ஈ) மேற்காணும் விவரங்களின்படி, உயர்நீதிமன்றத் தீர்ப்புகளுக்கிணங்க, ஓய்வு பெற்ற திரு. என்.தியாகராஜன், அவர்களுக்கு வரிசை எண்கள் அ), ஆ), இ) ஆகியவைகளில் குறிப்பிட்டுள்ள விபரங்களின்படி,

1. 03.05.1989 -ந்தேதி உதவியாளராகவும்,
2. 14.12.2000 -ந்தேதி கண்காணிப்பாளராகவும்,
3. 15.12.2003 -ந்தேதி கணக்கு அலுவலராகவும்
4. 03.05.1992 -ந்தேதிமுதல் முன்தேதியிட்டு உதவியாளர் பதவியில் தேர்வு நிலையாளராகவும், கருத்தியல் பதவி உயர்வுகள் வழங்குவதற்கும் மற்றும் இதனைத் தொடர்ந்து 03.05.1989 முதல் 30.04.2005 முடிய உள்ள காலங்களுக்கு அளிக்கப்பட வேண்டிய அனைத்துப் பணப்பயன்களை வழங்கவும், நியமனக்குழு மற்றும் மாமன்றம் ஆகியவகைளின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

தமிழ்நாடு மாநகராட்சிகள் பொதுப்பணி விதிகளின்படியும் அரசாணை (நிலை) எண்.**237**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.**26.09.1996–ன்படி** கணக்கு அலுவலர் பணியிடம் வகுப்பு II பணியிடமாகும். எனவே, மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பிறகு கணக்கு அலுவலராக கருத்தியலான பதவி உயர்வு வழங்கி அரசிற்கு செயற்குறிப்பு அனுப்பி உறுதியாக்கம் பெறப்பட வேண்டும்.

உ) உயர் நீதிமன்றத் தீர்ப்பில், விரைவாக பரிசீலனை செய்யுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பொருள் தொடர்பாக கண்காணிப்பாளராக கருத்தியலான பதவி உயர்வுக்கு நியமனம் மற்றும் மேல்முறையீட்டுக் குழு தீர்மான எண்.**45**, நாள்.**05.06.2013ன்படி** ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. வகுப்பு II பணியிடமான கணக்கு அலுவலர் பதவிக்கு கருத்தியலாக பதவி உயர்வு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம். ந.க.எண்.752/2007/எம்சி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 82 நாள் 24.07.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 7

| | |
|---|---|
| பார்வை : | 1. மாமன்ற தீர்மான எண் 26 நாள் 27.04.2012<br>2. சென்னை உயர் நீதிமன்ற வழக்கு எண் W.P. No.14911/2012 & 149916/2012<br>3. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள் 30.04.2013<br>4. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 26 நாள் 21.06.2013 |

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்கு உட்பட்ட துடியலூர் வணிக வளாகத்தில் உள்ள 46 கடைகளுக்கு பார்வை 1-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின்படி 01.04.2012 முதல் வெளிச்சந்தை மதிப்பில் வாடகை உயர்வு செய்யப்பட்டது. இதனை ஆட்சேபனை செய்து மேற்படி வணிக வளாக கடைதாரர்களில் 24 பேர் இக்கடைகளுக்கு 01.04.2010 முதல் 31.03.2013 வரையிலான மூன்றாண்டுகளுக்கு துடியலூர் பேரூராட்சி மூலம் வாடகை உயர்வு செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் இக்கடைகளை 2007ம் ஆண்டிலிருந்து ஒதுக்கீடு பெற்றுள்ளதால் அரசாணையில் தெரிவித்துள்ளபடி ஒன்பது ஆண்டுகள் முடிவுற்று 2016ல் தான் வெளிச்சந்தை மதிப்பில் வாடகை உயர்வு செய்யப்பட வேண்டும் என்ற காரணத்தினால் மாநகராட்சி உயர்வு செய்யப்பட்ட உயர்வினை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

மேற்படி துடியலூர் வணிக வளாக கடைகள் தொடர்பாக துடியலூர் பேரூராட்சி கோப்புகளை ஆய்வு செய்யப்பட்டதில் இக்கடைகளுக்கு 2007-2008ம் ஆண்டு பொது ஏலம் விடப்பட்டு கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் இக்கடைகளுக்கு 9 வருடங்கள் முடிவடைந்து 2016ல் தான் வெளிச்சந்தை மதிப்பில் வாடகை உயர்வு செய்யப்பட வேண்டும். மேலும் இக்கடைகளுக்கு துடியலூர் பேரூராட்சி மூலம் 01.04.2010 மூலம் 31.03.2013 முடிய வரையிலான மூன்றாண்டுகளுக்கு 15% வாடகை உயர்வு செய்யப்பட்டு உரிமம் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே மாமன்ற தீர்மான எண் 26 நாள் 27.04.2012-ம் தேதிய தீர்மானத்தில் 01.04.2012 முதல் 31.03.2015 வரை வாடகை உயர்வு செய்யப்பட்டுள்ளதை ரத்து செய்து அரசாணையின்படி ஏற்கனவே பேரூராட்சி மூலம் உரிமம் உயர்வு செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவடையப்பட்ட 01.04.2013 முதல் 31.03.2016 வரையிலான மூன்று ஆண்டுகளுக்கு 15% வாடகை உயர்வு செய்வதற்கு வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது.

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மானம் எண் 26 நாள் 21.06.2013-ல் அலுவலகக்குறிப்பினை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1780/2012/அ1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 83 நாள் 24.07.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 26 நாள் 21.06.2013 ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 8

பொருள் : வடக்கு மண்டலம் - கோயம்புத்தூர் மாநகராட்சி - வார்டு எண் 41க்கு உட்பட்ட கணபதி சத்தி சாலை பகுதியில் உள்ள மராமத்து பணிகள் முடிவுற்ற நவீன கட்டண கழிப்பிடத்தின் உரிமம் ஒப்படை செய்வதற்கு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவது - தொடர்பாக

.

பார்வை :
1. உதவி நிர்வாக பொறியாளர் அவர்களின் குறிப்பு நாள் 13.06.2013
2. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 45 நாள் 21.06.2013

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 41க்கு உட்பட்ட கணபதி சத்தி சாலை பகுதியில் உள்ள நவீன கட்டண கழிப்பிடம் மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளது எனவும், தற்பொழுது மேற்படி கழிப்பிடம் பொதுமக்கள் உபயோகத்திற்கு ஏற்ற நிலையில் உள்ளதாக பார்வையில் காணும் உதவி பொறியாளர் அவர்களின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி கட்டண கழிப்பிடத்தை 2013-2016ம் ஆண்டிற்கு மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒப்படை செய்வதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 45 நாள் 21.06.2013ல் அனுமதி அளித்துள்ளது. இப்பொருள் மாமன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 6280/2013/அ1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 84 நாள் 24.07.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 45 நாள் 21.06.2013 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 9

பொருள் : வடக்கு மண்டலம் - கோயம்புத்தூர் மாநகராட்சி - வார்டு எண் 31க்கு உட்பட்ட சரவணம்பட்டி அம்மன் நகர் குட்டை பகுதியில் சரவணம்பட்டி பேரூராட்சி மூலம் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் இயங்கி வரும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு நியாயவிலை கடைக்கு வாடகை நிர்ணயம் செய்வது – தொடர்பாக

பார்வை : 1. உதவி பொறியாளர் அவர்களின் குறிப்பு நாள் 17.06.2013
2. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 51 நாள் 21.06.2013

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 31க்கு உட்பட்ட சரவணம்பட்டி அம்மன் நகர் குட்டை பகுதியில் சரவணம்பட்டி பேரூராட்சி மூலம் (17'9'' x 21' 9'') 392 சதுரடி அளவில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு நியாயவிலை கடை எண் 131 செயல்பட்டு வருகிறது. இக்கடைக்கு சதுரடி 1க்கு ரூ.9.50/- என்ற அடிப்படையில் மாதம் ஒன்றுக்கு ரூ.3724/- என்ற அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யலாம் எனவும் பார்வை 1ல் காணும் உதவி பொறியாளர் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி தொடக்க வேளாண்மை கூட்டுறவு நியாய விலைக் கடைக்கு உதவி பொறியாளர் அவர்களின் குறிப்பின்படி வாடகை நிர்ணயம் செய்வதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்பட்டது.

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மானம் எண் 51 நாள் 21.06.2013ல் மேற்படி கடைக்கு மாதவாடகையாக ரூ.4000- நிர்ணயம் செய்து இப்பொருளினை மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின்மீது மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 6497/2013/அ1

### <u>மாநகர மன்ற தீர்மானம் எண் 85 நாள் 24.07.2013</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 51 நாள் 21.06.2013 ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 10

பொருள் : வடக்கு மண்டலம் - கோயம்புத்தூர் மாநகராட்சி - வார்டு எண் 31க்கு உட்பட்ட சரவணம்பட்டி விநாயகா நகர் பகுதியில் சரவணம்பட்டி பேரூராட்சி மூலம் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் இயங்கி வரும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு நியாயவிலை கடைக்கு வாடகை நிர்ணயம் செய்வது – தொடர்பாக

பார்வை : 1. உதவி பொறியாளர் அவர்களின் குறிப்பு நாள் 17.06.2013
2. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 52 நாள் 21.06.2013

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 31க்கு உட்பட்ட சரவணம்பட்டி விநாயகா நகர் குட்டை பகுதியில் சரவணம்பட்டி பேரூராட்சி மூலம் (11'6'' x 21' 6'') 250 சதுரடி அளவில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு நியாயவிலை கடை எண் 146 செயல்பட்டு வருகிறது. இக்கடைக்கு சதுரடி 1க்கு ரூ.21.12/- என்ற அடிப்படையில் மாதம் ஒன்றுக்கு ரூ.5280/- என்ற அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யலாம் எனவும் பார்வை 1ல் காணும் உதவி பொறியாளர் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி தொடக்க வேளாண்மை கூட்டுறவு நியாய விலைக் கடைக்கு உதவி பொறியாளர் அவர்களின் குறிப்பின்படி வாடகை நிர்ணயம் செய்வதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்பட்டது.

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மானம் எண் 52 நாள் 21.06.2013ல் மேற்படி கடைக்கு மாதவாடகையாக ரூ.5500- நிர்ணயம் செய்து இப்பொருளினை மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின்மீது மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 6498/2013/அ1

### <u>மாநகர மன்ற தீர்மானம் எண் 86 நாள் 24.07.2013</u>

வார்டு எண் 31 என்பதற்குப் பதிலாக வார்டு எண் 30 என திருத்தம் செய்து, வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 52 நாள் 21.06.2013 ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 11

பொருள் கோயம்புத்தூா் மாநகராட்சி- கிழக்கு மண்டலம்- வாா்டு எண் 57-ற்குட்பட்ட சின்னசாமி லே அவுட் பகுதியில் - நான்கு வணிக வளாகக் கடைகள் வாடகை நிா்ணயம் செய்வது –தொடா்பாக

--------------------

கோயம்புத்தூா் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வாா்டு எண் 57-ற்குட்பட்ட சின்னசாமி லே அவுட் பகுதியில் மாநகராட்சியால் நான்கு வணிக வளாகக்கடைகள் தலா (5.22 X 3.58= 18.69 sq.mtr அல்லது) 201.18 சதுர அடி அளவில் கட்டப்பட்டு, ஏலம் விட தயாா் நிலையில் உள்ளது. மேற்படி கடைகளுக்கு பொதுப்பணித்துறை மதிப்பீட்டின்படி சதுரடிக்கு ரூ.37.10 என தொகை கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி கடை ஒன்றிற்கு ரூ 7464/- என நிா்ணயம் செய்ததை முழுமையாக மாதாந்திர வாடகை ரூ7500/- என முடிவு செய்யவும் , இக்கடைகளை ஒப்படை செய்ய மின் ஏலம், ஒப்பந்தப்புள்ளி கோரவும் இதனை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும், ஏலத்தில் கலந்து கொள்ள கீழ்க்கண்டவாறு தொகைகளை நிா்ணயம் செய்ததில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீா்மான எண் 18 நாள். 21.06.2013-ன் மூலம் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீா்மானம் நிறைவேற்றியுள்ளது.

| வைப்புத் தொகை ரூபாயில் | காப்புத் தொகை ரூபாயில் | வங்கி உறுதிச்சான்று | வங்கி உறுதிச்சான்று அல்லது செலுத்த வேண்டிய தொகை ரூபாயில் |
|---|---|---|---|
| 50,000 | 50,000 | 1,00,000 | 25,000 |

எனவே, வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீா்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 4964/2013/கிஅ11

### மாநகர மன்ற தீா்மானம் எண் 87 நாள் 24.07.2013

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மானம் எண் 18 நாள் 21.06.2013 ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீா்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 12

| | |
|---|---|
| பொருள் | கோயமுத்தூா் மாநகராட்சி - மேற்கு மண்டலம்- ரங்கே கவுடா் வீதி நவீன மலா் அங்காடியில் உள்ள 6 மாதத்திற்கு மேல் நிலுவையில் உள்ள கடைகளை பூட்டி சீல் வைத்தது – மறுபொதுமின் ஏலம் கோருதல் - தொடா்பாக |
| பாா்வை | 1. மாநகராட்சி வழக்கறிஞரது கருத்துரை தேதி.24.6.2013<br>2. ஆணையாா் அவா்களின் உத்திரவு நாள்.26.6.2013<br>3. வணக்கத்திற்குரிய மேயா் அவா்களின் முன்அனுமதி நாள்.29.6.2013. |

பாா்வை 1-ல் காண் மாநகராட்சி வழக்கறிஞரது கருத்துரையில், ரங்கே கவுடா் வீதி நவீன மலா் அங்காடி வணிக வளாகத்தில் நிலுவைத்தொகை செலுத்தாத கடைகள் பிளாக் எண்.I-ல் கடை எண். 3,4,5,6,7,8,11,12,13,14,15,17,18, பிளாக் எண்.II-ல் கடை எண். 19,23,26,27,28,29,30,31,32,37,41,42,45 உள்ள பூட்டப்பட்ட கடைகளின் உரிமதாரா்கள் கோவை உரிமையில் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்குகளில் இடைகால தடை உத்திரவு ஏதும் இல்லாத காரணத்தினாலும், ஏற்கனவே மேற்படி கடைகள் மாநகராட்சி பொறுப்பில் உள்ளதாலும் மாநகராட்சி இதன் மீது மேல் நடவடிக்கை தொடரலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாா்வை 2-ல் காணும் ஆணையாளா் அவா்களின் உத்திரவின்படி மாநகராட்சி வழக்கறிஞா் நீதிமன்ற வழக்குகள் நிலுவையில் இருப்பினும் தற்போது மேற்கண்ட பூமாா்க்கெட்டில் உள்ள பூட்டப்பட்ட கடைகளை மறுஏலம் கொண்டுவரலாம் என கருத்து தெரிவித்துள்ளாா். எனவே மறுஏலம் விடலாம் என தெரிவித்துள்ளதால் மேற்படி கடைகளை மறுஏலம் கொண்டுவர அவசர அவசியத்தை முன்னிட்டும் வருவாய் இழப்பினை தவிா்க்கும் பொருட்டும் பாா்வை 3-ல் காண் வணக்கத்திற்குரிய மேயா் அவா்களின் முன் அனுமதி பெற்று பொது ஏலம் நடத்த ஒப்புதல் பெற்றதை மாமன்றத்தின் பின்னேற்பிற்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 9451/11/ அ1 (மே)

### மாநகர மன்ற தீா்மானம் எண் 88 நாள் 24.07.2013

அலுவலகக் குறிப்பை அனுமதித்தும் மேலும் புதிய அங்காடியில் உள்ள கடைகளுக்கு ஒதுக்கீடு பெற்றும் அங்கு செல்ல மறுத்து வேண்டுமென்றே பிரச்சனையை ஏற்படுத்துகிறவா்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 13

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - வார்டு எண்.10, மேட்டுப்பாளையம் ரோட்டில் உள்ள நவீன பேருந்து நிலையத்தில் பொருட்கள் பாதுகாப்பு அறை கட்டணம் வசூலிக்கும் இனம் - வார்டு எண்.24, ரங்கே கவுடர் வீதி நவீன மலர்அங்காடி வணிக வளாகத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் இருசக்கர வாகனம் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் இனம் - வார்டு எண்.24, ரங்கேகவுடர் வீதி நவீன மலர்அங்காடி வணிக வளாகம் கடை எண்.1-A வரிவிதிப்பு எண்.2420596 பூவியாபார அறை - அம்மா உணவகம் திட்டத்திற்கு பயன்படுத்தபட்டு வருவதால் - மேற்படி இனங்களை 2013-14-ம் ஆண்டிற்கு குத்தகை இனத்திலிருந்து நீக்கம் செய்வது - தொடர்பாக.

பார்வை - ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.7.6.2013

-----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண்.10, மேட்டுப்பாளையம் ரோட்டில் அம்மா உணவகம் திட்டம் துவங்கப்பட்டு உள்ளதால் மேட்டுப்பாளையம் ரோட்டில் உள்ள நவீன பேருந்து நிலையத்தில் பொருள்கள் பாதுகாப்பு அறையை இருப்பறையாக மேற்படி திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்டு வருவதால் மேட்டுப்பாளையம் ரோட்டில் உள்ள நவீன பேருந்து நிலையத்தில் உள்ள பொருள்கள் பாதுகாப்பு அறையினை 2013-2014-ம் ஆண்டில் குத்தகை இனத்திலிருந்து நீக்கம் செய்யவும், வார்டு எண்.24, ரங்கேகவுடர் வீதியில் அம்மா உணவகம் திட்டம் துவங்கப்பட்டு ரங்கேகவுடர் வீதி நவீன மலர்அங்காடி வணிக வளாகம் கடை எண்.1-A பூவியாபார அறையை மேற்படி திட்டத்திற்காக உணவக கூடமாக பயன்படுத்தப்பட்டு வருவதால் மேற்படி பூ வியாபார அறையை (வரிவிதிப்பு எண்.2420596) 2013-2014-ம் ஆண்டில் குத்தகை இனத்திலிருந்து நீக்கம் செய்யவும், மேலும் அம்மா உணவகத்திற்கு வரும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கழிப்பிடம் மற்றும் இருசக்கர வாகனம் நிறுத்தும் இடம் இலவசமாக அமைக்கப்பட வேண்டியுள்ளதால், ரங்கே கவுடர் வீதி நவீன மலர்அங்காடி வணிக வளாகத்தில் உள்ள கட்டண கழிப்பிடத்தினையும், இருசக்கர வாகனம் நிறுத்தும் இடத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இலவசமாக பயன்படுத்தப்படவும், மேலும் 2013-2014-ம் ஆண்டில் குத்தகை இனத்திலிருந்து மேற்கண்ட இனங்களை நீக்கம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிவேண்டப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.47 நாள்.21.06.2013-ன்படி அலுவலகக்குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.12794 / 2012 / A1(w)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 89 நாள் 24.07.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 47 நாள் 21.06.2013 ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 14

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் 2013-16-க்கான குத்தகை உரிம இனங்கள் மற்றும் வணிக வளாகங்களுக்கு - பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 15.5.2013-ல் நடைபெற்றது - ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது - தொடர்பாக.

பார்வை: பொது மின்ஏல நடைபெற்ற நாள்.15.5.2013

****

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் குத்தகை இனங்கள் மற்றும் வணிக வளாகங்களுக்கு 2013-2016 மூன்றாண்டுகளுக்கு ஒப்படைக்க பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 15.5.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் கீழ்க்காணும் ஏலதாரர்கள் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளனர்.

ஏலம் நடைபெற்ற தேதி - 15.5.2013

அ)

| வ. எண் | வணிக வளாகம் | கடந்த வருட ஏலத் தொகை யில் 5% நிர்ணயம் செய்யப் பட்ட தொகை | ஏலதாரர் பெயர் | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை (ரூ.) | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.22 மேட்டுப்பாளையம் சாலை அண்ணா மார்க்கெட்டில் 20' x 10' = 200 சதுரடி அளவுள்ள கடை | ரூ.50150 | எஸ்.சூசைராஜ்<br>எம்.செல்வம் | 56150<br>- | 63100<br>22700 | 63100 |

ஆ)

| வ. எண் | குத்தகை இனம் | கடந்த வருட ஏலத் தொகையில் 5% நிர்ணயம் செய்யப் பட்ட தொகை | 2013-14-ம் ஆண்டு நடைபெற்ற 7 ஏலத்தில் உயர்ந்தபட்ச ஏலத் தொகைகளின் விபரம் | | ஏலதாரர் பெயர் | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை (ரூ.) | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | தேதி | தொகை (ரூ.) | | | | |
| 2. | மேட்டுப்பாளையம் ரோடு புதிய பேருந்து நிலையத்தில் இருசக்கரவாகனம் மற்றும் நான்கு சக்கரவாகனம் நிறுத்துமிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2121210 | 26.12.12<br>23.01.13<br>13.02.13<br>28.02.13<br>13.03.13<br>27.03.13<br>17.04.13 | Nil<br>Nil<br>Nil<br>6,06,600<br>6,10,000<br>6,15,000<br>7,50,699 | V. மணிவண்ணன் | - | 8,18,010 | 8,18,010 |

**அ. வணிகவளாகம்**

வரிசை எண்.1-ல் உள்ள வார்டு எண்.22 மேட்டுப்பாளையம் சாலை அண்ணா மார்க்கெட்டில் 20’ x 10’ = 200’ சதுரடி அளவுள்ள வணிகவளாகத்திற்கு அரசு நிர்ணயத்தொகையை ரூ.50,150/- (Base value) விட உயர்ந்தபட்ச தொகை ரூ.63100/-ற்கு திரு.S.சூசைராஜ் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே உர்ந்தபட்ச ஏலத்தொகை கோரிய திரு. S.சூசைராஜ் என்பவருக்கு ஒப்படைப்பு செய்யலாம்.

**ஆ. குத்தகை இனம்**

வரிசை எண். 2-ல் உள்ள இனத்திற்கு 2012-13-ம் ஆண்டில் 11 முறை ஏலம் விடப்பட்டது. 2013-14-ம் ஆண்டு இதுவரை 7 முறை (26.12.2012, 23.1.2013, 13.2.2013, 28.2.2013, 13.3.2013, 27.3.2013,17.4.2013) ஏலம் விடப்பட்டுள்ளது. 8-வது முறை அரசு நிர்ணயத்தொகை ரூ.21,21,210/- (Base value) விட குறைவாக ரூ.8,18,010/-ற்கு திரு.V.மணிவண்ணன் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

01.04.2012 முதல் துறை வாரியான வசூல் மேற்கொள்ளப்பட்டதில் மேற்படி வாகனம் நிறுத்தும் இடத்திற்கு ஒரு நாளுக்கு சராசரியாக ரூ.2240/- வீதம் (ரூ.2240x365 நாட்கள்=ரூ.8,17,600/-) வசூலிக்கப்பட்டு வருகிறது. மேலும் துறைவாரியாக வசூலிக்கப்படும்பொழுது மூன்று நபர்கள் சூழற்சி முறையில் பணிநியமனம் செய்து நபர் ஒன்றுக்கு மாதம் ரூ.15,000/- வீதம் மூன்று நபர்களுக்கு ரூ.45,000/- வீதம் ஆண்டிற்கு ரூ.5,40,000/- ஊதியம் வழங்கப்பட்டுவருகிறது.

தற்பொழுது உயர்ந்தபட்சமாக ஏலத்தொகை ரூ.8,18,010/-ற்கு வருமான வரி ரூ.18,487/-, சேவை வரி ரூ.1,01,106/- மொத்தம் = ரூ.9,37,603/- ஏலதாரர் செலுத்தவேண்டியுள்ளது.

எனவே துறைவாரியான வசூல் பணி மேற்கொள்ளும் பொழுது பணியாளர்கள் பற்றாக்குறை ஏற்படுவதாலும், மேற்படி பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதிய செலவினத்தொகையினை கருத்தில் கொண்டும், வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு எட்டு முறை ஏலம் விடப்பட்டு தற்பொழுது உயர்ந்தபட்ச ஏலத்தொகையாக ரூ.8,18,010/-ற்கு ஏலம் கோரிய திரு.V.மணிவண்ணன் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்வது குறித்து வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முடிவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.48 நாள்.21.06.2013-ன்படி அ. வரிசை எண்.1-ல் உள்ள இனத்திற்கு அலுவலகக்குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது. ஆ. வரிசை எண் 2-ல் உள்ள இனத்திற்கு மாமன்றத்தின் முடிவிற்கு அனுப்பலாம் என பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டு மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அ. அனுமதிக்கலாம்
ஆ. மாமன்றத்தின் முடிவிற்கு

ந.க.எண்.12794 / 2012 / A1(w)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 90 நாள் 24.07.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 48 நாள் 21.06.2013 ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பு ‘அ’-வை அனுமதித்தும் ‘ஆ’-விற்கு உரிமம் ஒப்படை செய்ய அனுமதித்தும் தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 15

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - வருடாந்திர உரிமையாணை ரங்கேகவுடர் வீதி, நவீன மலர்அங்காடி, வணிக வளாகத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும உரிமம் மற்றும் இருசக்கர வாகனம் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 2012-13-ம் ஆண்டிற்கு குத்தகை தொகை செலுத்தாததால் உரிமத்தை ரத்து செய்வது, பூ வியாபார அறை, வணிக வளாக கடைகளின் உரிமத்தை ரத்து செய்வது மற்றும் திரு.S.செல்வகுமார் பெயரை கருப்பு பெயர் பட்டியலில் பெயர் சேர்ப்பது - தொடர்பாக.

பார்வை - 1. மாமன்ற தீர்மான எண்.212 நாள்.05.1.2011
2. மாமன்ற தீர்மான எண்.50 நாள்.30.5.2012
3. இவ்வலுவலக அறிவிப்பு நாள்.4.6.2012, 28.6.2012, 31.10.2012 & 23.2.2013
4. குத்தகைதாரர் திரு.எஸ்.செல்வகுமார் அவர்களின் கடித நாள்.11.3.2013
5. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.29.3.2013

------

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண்.24 வருடாந்திர குத்தகை இனமான ரங்கேகவுடர் வீதி நவீன மலர்அங்காடி வணிக வளாகத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் இருசக்கர வாகனம் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் பூவியாபார அறை 2011-12-ம் ஆண்டில் பார்வை 1-ல் காணும் மாமன்ற தீர்மான எண்.212 நாள்.05.1.2011-ன்படி எஸ்.செல்வகுமார் என்பவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

பார்வை 2-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின்படி குத்தகைதாரர் ரங்கேகவுடர் வீதி நவீன மலர்அங்காடி வணிக வளாக கடைகள் எதும் ஏலத்தில் விடப்படவில்லை எனவும், ரங்கேகவுடர் வீதி நவீன மலர்அங்காடி வணிக வளாகத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் மற்றும் இரு சக்கர வாகன நிறுத்துமிடத்திற்கும் 7.7.2011-ம் தேதி முதல் மின்இணைப்பு வழங்கப்பட்டது. மேற்படி இனத்திற்கு மின் இணைப்பு வழங்கப்பட்ட தேதியிலிருந்து சுங்கம் வசூல் செய்யலாம் எனவும், 1.1.2011 முதல் 31.12.2011 வரையில் செலுத்தப்பட்டுள்ள ஒருவருட குத்தகைத்தொகை ரூ.11,10,100/-த்தில் 1.1.2011 மதல் 30.6.2011 வரை உள்ள தொகையை தள்ளுபடி செய்யவும் (6மாதம்), குத்தகைத்தொகையை ஏற்றுக்கொள்ளவும் மீதியுள்ள தொகையை 2012-2013-ம் வருடத்திற்கு 5 சதவீதம் உயர்வு செய்த குத்தகைதொகைக்கு சரிசெய்தும் மீதமுள்ள தொகையை வசூல் செய்யவும் மாமன்றத்தில் அனுமதி அளிக்கப்பட்டது.

பார்வை 3-ல் காணும் இவ்வலுவலக அறிவிப்பின்படி ரங்கேகவுடர் வீதி நவீன மலர்அங்காடி வணிக வளாகத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் இருசக்கர வாகனம் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் நிலுவைத்தொகை 2012-13-ம் ஆண்டிற்கு ரூ.5,69,340/-, ரங்கேகவுடர் வீதி நவீன மலர்அங்காடி வணிக வளாகம் கடை எண்.1-A வரிவிதிப்பு எண்.2420596 பூவியாபார அறைக்கு நிலுவைத்தொகை ரூ.5,15,000/-மற்றும் 18% அபராதம் ஆகிய இனங்களுக்கு நிலுவைத்தொகை நாளது தேதி வரை செலுத்தப்படாததால் குத்தகைதாரரின் உரிம இனங்களை ரத்து செய்யவும், வைப்புத்தொகையினை பறிமுதல் செய்யவும், குத்தகைதாரரின் பெயரினை கருப்பு பெயர் பட்டியலில் ஏன் சேர்க்க கூடாது என்பதற்கான விளக்கம் கோரும் அறிவிப்பு குத்தகைதாரர் திரு.எஸ்.செல்வகுமார் என்பவருக்கு நேரில் சார்வு செய்யப்பட்டது.

பார்வை 4-ல் காணும் கடிதத்தில் குத்தகைதாரர் திரு.எஸ்.செல்வகுமார் நவீன மலர் அங்காடி சம்மந்தமாக வழக்குகள் நிலுவையில் இருப்பதால் மார்க்கெட் இதுநாள்வரை இயங்கவில்லை என்றும், பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் யாரும் அறவே வருவதில்லை என்றும், நவீன கழிப்பிடம் இரண்டு சக்கர வாகனம் நிறுத்துமிடம் மற்றும் ஏல அறை சுத்தமாக பயன்பாட்டில் இல்லை என்றும், நவீன மலர் அங்காடி முழுமையாக செயல்படும் தேதியில் இருந்து மேலே கண்ட இனங்களின் குத்தகை காலத்தை நிர்ணயித்து கொடுக்கும்படி தெரிவித்துள்ளதாகவும், மார்க்கெட் இயங்காத காலத்திற்கு மேற்கண்ட இனங்களுக்கான குத்தகை தொகை தன்னிடம் இருந்து கேட்பது சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றும், நவீன மலர் அங்காடி முழு அளவில் இயங்க ஏற்பாடு செய்து, அது இயங்கும் நாளில் இருந்து மேற்கண்ட இனங்களுக்கு குத்தகை காலத்தை நிர்ணயித்து கொடுக்குமாறும் கடிதத்தில் கோரியுள்ளார்.

| வ. எண். | விபரம் | நிலுவைத் தொகை (ரூ.) |
|---|---|---|
| 1. | ரங்கேகவுடர் வீதி நவீன மலர்அங்காடி வணிக வளாகத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் இருசக்கர வாகனம் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் நிலுவைத்தொகை 2011-2012-ம் ஆண்டிற்கு செலுத்திய குத்தகை தொகையில் 6 மாத தொகையினை 2012-13-ம் நடப்பு ஆண்டிற்கு சரிசெய்தது போக மீதமுள்ள தொகை | 5,69,340/- மற்றும் 18% அபராதம் |
| 2. | ரங்கேகவுடர் வீதி நவீன மலர்அங்காடி வணிக வளாகம் கடை எண்.1-A வரிவிதிப்பு எண்.2420596 பூவியாபார அறைக்கு ஆகஸ்ட் 2011 முதல் மார்ச் 2013 வரை | 6,06,000/- மற்றும் 18% அபராதம் |

எனவே, விளக்கம் கோரும் கடிதத்தின் பதிலை பரிசீலனை செய்யப்பட்டதில் திரு.எஸ்.செல்வகுமார் அவர்களின் பெயரில் உள்ள மேற்படி இனத்தின் உரிமத்தினை ரத்து செய்தும், செலுத்தப்பட்ட வைப்புத்தொகையினை பறிமுதல் செய்தும், குத்தகைதாரர் திரு.S.செல்வகுமார் பெயரினை கருப்பு பெயர் பட்டியலில் பெயர் சேர்க்கவும், மேற்கண்ட இனங்களை மறு ஏலத்திற்கு கொண்டு வரவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.25 நாள்.21.06.2013-ன்படி அலுவலகக்குறிப்பை ஏற்று மாமன்றத்தின் முடிவிற்கு அனுப்பலாம் என தீர்மானிக்கப்பட்டது. எனவே மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - மாமன்றத்தின் முடிவிற்கு ந.க.எண்.497/ 2012 / ஏ1(மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 91 நாள் 24.07.2013</u>**

திரு.எஸ்.செல்வகுமார் என்பவர் பெயரில் உள்ள வ.எண் 1 மற்றும் 2-ல் உள்ள இனங்களின் உரிமத்தினை ரத்து செய்தும், அவைகளுக்கு செலுத்தப்பட்ட வைப்புத்தொகைகளை பறிமுதல் செய்தும், குத்தகைதாரர் திரு. எஸ். செல்வகுமார் பெயரினை கருப்புப் பட்டியலில் சேர்த்தும், வ.எண் 1 மற்றும் 2-ல் உள்ள இனங்களை மறுஏலத்திற்கு கொண்டு வரவும் அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 16

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வருடாந்திர குத்தகை இனங்களுக்கு **2013-2016** ஆண்டுக்கான மறு பொது ஏலம்/மின் ஏலம் **12.06.2013** அன்று நடைபெற்றது. இதில் கீழ்க்கண்ட குத்தனை இனத்திற்கு அதன் எதிரே கண்டுள்ளவாறு உயர்ந்தபட்ச குத்தகை தொகை கோரப்பட்டது.

| வ. எண் | இனம் | அரசாங்க மதிப்பு | ஏலதாரர் பெயர் | ஏலதாரர் உயர்ந்தப்பட்ட ஏலத்தொகை | மின் ஏலம் ஒப்பந்தபுள்ளி |
|---|---|---|---|---|---|
| 1. | வார்டு எண் 79 கடை எண் 2 லாலிரோடு ஸ்கீம் ரோடு | 7,430/– | அ. சபாபதி<br>எஸ். ஜெயபிரகாஷ்<br>**சி.பாலகிருஷ்ணன்** | 3650<br>3250<br>5100 | –<br>–<br>7850 |

1 வரிசை எண் திரு. **சி.பாலகிருஷ்ணன்** என்பவர் அரசாங்க மதிப்பு ரூ. **7430–**ஐ விட ரூ. **7850–**க்கு ஏலம் கோரியுள்ளார். எனவே இவருக்கு ஒதுக்கீடு செய்வது குறித்து வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 64 நாள் 21.06.2013-ன்படி மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். **698/2012/**அ1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 92 நாள் 24.07.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 64 நாள் 21.06.2013 ன் தீர்மானத்திற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 17

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி - மத்திய மண்டலத்திற்குட்பட்ட 2013-2016-ம் ஆண்டுக்கான குத்தகை இனங்களுக்கு உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கை ஏற்று – ஒப்படைத்தல் - தொடர்பாக

பார்வை வ.வி.ம.நி.குழு தீர்மான எண்.70 நாள்.21.06.2013.

----------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் சார்ந்த கீழ்க்கண்ட குத்தகை இனங்களுக்கு 2013-2016 வரையிலான ஆண்டிற்கு 27.12.2012, 23.01.2013, 13.02.2013, 28.02.2013, 13.03.2013, 27.03.2013, 17.04.2013 மற்றும் 15.05.2013 ஆகிய நாட்களில் (எட்டு முறை) ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது மின் ஏலம் நடைபெற்றது. மீண்டும் 12.06.2013 அன்று மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கீழ் கண்ட குத்தகை இனங்களுக்கு பெறப்பட்ட ஏலத் தொகை விபரங்கள்

| வ. எண் | குத்தகை இனம் | ஏலதாரர் பெயர் | 15.05.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. | 12.06.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம். அரசுநிர்ணய மதிப்பீடு ரூ4,82,900/- | திரு வி. மணிவண்ணன் | 4,14,000/- (ஒப்பந்தப்புள்ளி) | - |
| 2 | உக்கடம் பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம் அரசுநிர்ணய மதிப்பீடு ரூ10,59,300/- | திரு.V.M.அப்துல்சுக்கூர்<br>திரு.எம்.ஏ.சபேர் அலி | 7,50,000/- (ஒப்பந்தப்புள்ளி)<br>- | -<br>6,50,000/- (ஒப்பந்தப்புள்ளி) |
| 3 | நவீன கட்டணக் கழிப்பிடம் டவுன்ஹால அரசுநிர்ணய மதிப்பீடு ரூ15,20,200/- | திரு.M.முத்துப்பாண்டி | 10,10,000/- (ஒப்பந்தப்புள்ளி) | 10,15,000/- (ஒப்பந்தப்புள்ளி) |
| 4 | நவீன கட்டணக் கழிப்பிடம் லிங்கப்ப செட்டி வீதி அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.3,35,900/- | திரு.எ.அன்வர் பாஷா | 2,25,000/- (ஒப்பந்தப்புள்ளி) | 2,25,000/- (ஒப்பந்தப்புள்ளி) |
| 5 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சிப் பெட்டி அமைத்து விளம்பரம் செய்யும் உரிமம் . அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.1,38,700/- | திரு.எஸ்.வேலுச்சாமி | - | 1,07,100/- (ஒப்பந்தப்புள்ளி) |

வரிசை எண்.1-க்கு ஏழு முறை ஏலம் நடைபெற்றது. எட்டாவது முறையாக 15.05.2013 அன்று நடைபெற்ற ஏலத்தில் திரு வி. மணிவண்ணன் என்பவரிடமிருந்து 4,14,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. தற்போது 12.06.2013- அன்று நடைபெற்ற ஏலத்தில் திரு வி. மணிவண்ணன் என்பவர் ஏலத்தில் பதிவு செய்தும் கலந்துகொள்ளவில்லை. மேற்படி இனத்திற்கு மே மாதம் துறை மூலம் வசூல் ரூ.34,600/- (34600x12=415200) பெறப்பட்டுள்ளது. அதற்கு இரண்டு பணியாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். மூன்றாண்டு சராசரி தொகை ரூ.4,60,300/- அரசுநிர்ணய மதிப்பீடு ரூ4,82,900/- மேற்படி இனத்திற்கு 12.36 சதவீதம் சேவை வரி செலுத்தப்படவேண்டும்.

வரிசை எண்.2-க்கு ஏழு முறை ஏலம் நடைபெற்றது. எட்டாவது முறையாக 15.05.2013 நடைபெற்ற ஏலத்தில் திரு.V.M.அப்துல்சுக்கூர் என்பவரிடமிருந்து ரூ.7,50,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. தற்போது 12.06.2013 அன்று நடைபெற்ற ஏலத்தில் திரு.எம்.ஏ.சபேர் அலி என்பவரிடமிருந்து ரூ.6,50,000/- க்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்படி இனத்திற்கு மே மாதம் துறை மூலம் வசூல் ரூ.37,814/- (37814x12=453768) பெறப்பட்டுள்ளது. அதற்கு இரண்டு பணியாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். மூன்றாண்டு சராசரி தொகை ரூ.9,61,3513/- அரசுநிர்ணய மதிப்பீடு ரூ10,59,300/- மேற்படி இனத்திற்கு 12.36சதவீதம் சேவை வரி செலுத்தப்படவேண்டும்.

வரிசை எண்.3-க்கு ஏழாவது முறையாக 17.04.2013 அன்று நடைபெற்ற எலத்தில் திரு.அன்வர் பாஷா அவர்களிடமிருந்து ரூ,12,00,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. எட்டாவது முறையாக 15.05.2013 நடைபெற்ற ஏலத்தில் திரு.முத்துப்பாண்டி அவர்களிடமிருந்து ரூ.10,10,000/-யும் 12.06.2013-அன்று நடைபெற்ற ஏலத்தில் ரூ.10,15,000/- யும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்படி இனத்திற்கு மே மாதம் துறை மூலம் வசூல் ரூ.31,783/- (31783x12=381396) பெறப்பட்டுள்ளது. அதற்கு ஒரு பணியாளர் அமர்த்தப்பட்டுள்ளது. மூன்றாண்டு சராசரி தொகை ரூ.13,79,883/- அரசுநிர்ணய மதிப்பீடு ரூ15,20,200/-.

வரிசை எண்.4-க்கு ஏழாவது முறையாக 17.04.2013 அன்று நடைபெற்ற எலத்தில் திரு.பி.முகமது ர∴பிக் அவர்களிடமிருந்து ரூ,2,61,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. எட்டாவது மற்றும் ஒன்பதாவது முறையாக (15.05.2013 & 12.06.2013) நடைபெற்ற ஏலத்தில் திரு.அன்வர் பாஷா அவர்களிடமிருந்து ரூ.2,25,000/- என இரண்டு முறையும் ஒரே தொகையாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்படி இனத்திற்கு மே மாதம் துறை மூலம் வசூல் ரூ.13,569/- (13569x12=162828) பெறப்பட்டுள்ளது அதற்கு ஒரு பணியாளர் அமர்த்தப்பட்டுள்ளது. மூன்றாண்டு சராசரி தொகை ரூ.3,04,899/- அரசுநிர்ணய மதிப்பீடு ரூ3,35,900/-.

வரிசை எண்.5-க்கு ஏழு முறை ஏலம் நடைபெற்றது. தற்போது 12.06.2013- அன்று நடைபெற்ற ஏலத்தில் திரு.எஸ்.வேலுச்சாமி என்பவரிடமிருந்து ரூ,1,07,100/-க்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மூன்றாண்டு சராசரி தொகை ரூ.1,32,002/- அரசுநிர்ணய மதிப்பீடு ரூ1,38,700/- மேற்படி இனத்திற்கு 12.36சதவீதம் சேவை வரி செலுத்தப்படவேண்டும்.

வரிசை எண்.1 முதல் 5-வரை உள்ள ஏல இனங்களுக்கு பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஏலக் கோரிக்கையை ஏற்று ஒப்படைசெய்வது குறித்து வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண்.70 நாள்.21.06.2013-ல் “இவ்வினங்களுக்கு தொடர்ந்து 7 முறை பொது ஏலம் நடத்தப்பட்டுள்ளது. இருப்பினும் அரசு நிர்ணயம் செய்யப்பட்ட அடிப்படை மதிப்பிற்கும் குறைவாகவே ஏலக்கோரிக்கை பெறப்பட்டுள்ளது. துறை மூலம் வசூல் செய்வதற்கு போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினாலும் இவ்வினங்களை ஒப்படை செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து கீழ்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

| | |
|---|---|
| 1. | வரிசை எண்.1-ல் உள்ள இனத்திற்கு கடந்த 15.05.2013 அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத்தொகை ரூ.4,14,000/-யை ஏற்று திரு.மணிவண்ணன் என்பவருக்கு உரிமம் ஒதுக்கீடு செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது. |
| 2. | வரிசை எண்.2-ல் உள்ள இனத்திற்கு கடந்த 15.05.2013 அன்று நடைபெற்ற ஏலத்தில் உயர்ந்தபட்ச ஏலத் தொகை ரூ.7,50,000/-யை ஏற்று திரு.அப்துல்சுக்கூர் என்பவருக்கு உரிமம் ஒதுக்கீடு செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரைசெய்து தீர்மானிக்கப்பட்டது |
| 3. | வரிசை எண்.3-ல் உள்ள இனத்திற்கு கடந்த 17.04.2013 அன்று நடைபெற்ற ஏலத்தில் உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.12,00,000/-யை ஏற்று திரு.அன்வர் பாஷா என்பவருக்கு உரிமம் ஒதுக்கீடு செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது |
| 4. | வரிசை எண்.4-ல் உள்ள இனத்திற்கு கடந்த 17.04.2013 அன்று நடைபெற்ற ஏலத்தில் உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.2,61,000/-யை ஏற்று திரு.பி.முகமது ரபீக் என்பவருக்கு உரிமம் ஒதுக்கீடு செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது |
| 5. | வரிசை எண்.5-ல் உள்ள இனத்திற்கு கடந்த 12.06.2013 அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.1,07,100/-யை ஏற்று திரு.வேலுச்சாமி என்பவருக்கு உரிமம் ஒதுக்கீடு செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது |

மேற்குறிப்பிட்ட இனங்களுக்கு அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - மாமன்றத்தின் பரிசிலனைக்கு ந.க.எண். 11130/12/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 93 நாள் 24.07.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 70 நாள் 21.06.2013 ன் பரிந்துரையை ஏற்று அட்டவணை வ.எண் 1 முதல் 5 இனங்களுக்கான உரிமம் ஒப்படை செய்ய அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 18

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.70-ல் புலியகுளம் சாலை சிறுகாளியம்மன் வீதியில் தரை தளத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள இரண்டு கடைகளை மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்வது - தொடர்பாக.

பார்வை : வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.19 நாள்.21.06.2013.

***********

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.70-ல் புலியகுளம் சாலை சிறுகாளியம்மன் வீதியில் தரை தளத்தில் இரண்டு கடைகள் புதியதாக கட்டப்பட்டுள்ளது.

மேற்படி கடைகளை மின் ஏலம் மற்றும் ஒப்பந்ததபுள்ளிகள் மூலம் ஒதுக்கீடு செய்ய ஏலம் கோரப்படவேண்டும். பொதுப்பணித் துறை வாடகை மதிப்பின்படி வாடகை நிர்ணயம் செய்திட பொறியாளரின் அறிக்கை கோரப்பட்டு கீழ்கண்டவாறு பொதுப்பணித்துறை வாடகை மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வணிக வளாகம் அமைந்துள்ள இடம் | கடை எண் | கடை ஒன்றிக்கு மொத்த சதுரடி | ஒரு சதுரடிக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ | மாத வாடகை ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.70-ல் புலியகுளம் சாலை சிறுகாளியம்மன் வீதியில் தரை தளத்தில் இரண்டு கடைகள் | 1<br>2 | 12x11.5 =138<br>12x11.5 =138 | 40.15<br>40.15 | 5,600/-<br>5,600/- |

மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்ய கீழ்கண்டவாறு காப்புத் தொகை, வைப்புத்தொகை,சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் மற்றும் சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லாமல் அதற்கு செலுத்த வேண்டிய தொகை நிர்ணயம் செய்யவும் அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.19 நாள் 21.06.2013-ல் அலுவலகக்குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| வைப்புத்தொகை | - ரூ. 50,000/- |
| காப்புத்தொகை | - ரூ. 25,000/- |
| சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் | - ரூ.1,50,000/- |
| சொத்து மதிப்பீடு சான்றிதழுக்கு பதிலாக செலுத்த வேண்டிய தொகை | - ரூ. 75,000/- |

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.9659/2012/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 94 நாள் 24.07.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 19 நாள் 21.06.2013 ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 19

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.81-ல் வெரைட்டிஹால் சாலையில் திருமால் வீதியில் உள்ள மாநகராட்சி இடத்தில் சட்டமன்ற உறுப்பினா் தொகுதி மேம்பாடு நிதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள கடையை மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்வது - தொடர்பாக.

பார்வை
1. மாமன்ற தீர்மான எண்.403, நாள்.18.03.2013.
2. வ.வி.ம.நி.கு.தீ.எண்.20 நாள்.21.06.2013.

**********

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.81-ல் வெரைட்டிஹால் சாலையில் திருமால் வீதியில் உள்ள மாநகராட்சி இடத்தில் சட்டமன்ற உறுப்பினா் தொகுதி மேம்பாடு நிதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள கடையை பார்வை 1-ல் காணும் மாமன்ற தீா்மானத்தின் படி மாத வாடகை ரூ7,500/-க்கு தி/ள்.தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. தி/ள்.தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மேற்படி கடையை பொறுப்பு ஏற்காததால் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்த உரிமத்தை ரத்து செய்து மீண்டும் மின் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளிகள் மூலம் ஒதுக்கீடு செய்ய ஏலம் கோரப்படவேண்டும்.

பொதுப் பணிதுறை வாடகை மதிப்பின் படி வாடகை நிா்ணயம் செய்திட பொறியாளரின் அறிக்கை கோரப்பட்டு கீழ்கண்டவாறு பொதுப்பணித்துறை வாடகை மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வணிக வளாகம் அமைந்துள்ள இடம் | கடை எண் | கடை ஒன்றிக்கு மொத்த சதுரடி | ஒரு சதுரடிக்கு நிா்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ | மாத வாடகை ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.81-ல் வெரைட்டிஹால் சாலையில் திருமால் வீதியில் உள்ள மாநகராட்சி இடத்தில் சட்டமன்ற உறுப்பினா் தொகுதி மேம்பாடு நிதியில் கட்டப்பட்ட கடை | 1 | 264 | 38 | 10,020/- |

மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்ய கீழ்கண்டவாறு காப்புத் தொகை, வைப்புத்தொகை,சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் மற்றும் சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லாமல் அதற்கு செலுத்த வேண்டிய தொகை நிா்ணயம் செய்யவும் அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.20 நாள் 21.06.2013-ல் அலுவலகக்குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| வைப்புத்தொகை | - ரூ.1,00,000/- |
| காப்புத்தொகை | - ரூ. 50,000/- |
| சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் | - ரூ.1,25,000/- |
| சொத்து மதிப்பீடு சான்றிதழுக்கு பதிலாக செலுத்த வேண்டிய தொகை | - ரூ. 75,000/- |

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.9659/2012/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 95 நாள் 24.07.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 20 நாள் 21.06.2013 ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 20

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.72-ல் வ.உ.சி பூங்கா அருகில் தரைத்தளத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள எட்டு கடைகளை மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்வது - தொடர்பாக.

பார்வை : வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.24 நாள்.21.06.2013.

**********

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.72-ல் வ.உ.சி பூங்கா அருகில் உள்ள மாநகராட்சி இடத்தில் தரைத்தளத்தில் புதியதாக எட்டு கடைகள் கட்டப்பட்டுள்ளன. மேற்படி கடைகளை மின் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி மூலம் ஒதுக்கீடு செய்ய ஏலம் கோரப்படவேண்டும். பொதுப் பணித்துறை வாடகை மதிப்பின் படி வாடகை நிா்ணயம் செய்திட பொறியாளரின் அறிக்கை கோரப்பட்டு கீழ்கண்டவாறு பொதுப்பணித்துறை வாடகை மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வணிக வளாகம் அமைந்துள்ள இடம் | மொத்த கடைகள் | கடை ஒன்றிக்கு மொத்த சதுரடி | ஒரு சதுரடிக்கு நிா்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ | மாத வாடகை ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | வாா்டு எண்.72-ல் வ.உ.சி பூங்கா அருகில் உள்ள மாநகராட்சி இடத்தில் தரைத்தளம் எட்டு கடைகள் | 8 | 16x10=160 (கடைஒன்றுக்கு) | 64.13 (கடைஒன்றுக்கு) | 10,500/- (கடை ஒன்றுக்கு) |

மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்ய கீழ்கண்டவாறு காப்புத் தொகை, வைப்புத்தொகை,சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் மற்றும் சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லாமல் அதற்கு செலுத்த வேண்டிய தொகை நிா்ணயம் செய்யவும் அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண்.24 நாள் 21.06.2013-ல் அலுவலகக்குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| வைப்புத்தொகை | - ரூ.1,50,000/- |
| காப்புத்தொகை | - ரூ. 75,000/- |
| சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் | - ரூ.3,00,000/- |
| சொத்து மதிப்பீடு சான்றிதழுக்கு பதிலாக செலுத்த வேண்டிய தொகை | - ரூ.1,50,000/- |

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்4363/2013/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 96 நாள் 24.07.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மானம் எண் 24 நாள் 21.06.2013 ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீா்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 21

பொருள் : கோயம்புத்தூா் மாநகராட்சி - மத்திய மண்டலத்திற்குட்பட்ட வாா்டு எண்.50-ல் - மாநகராட்சி வணிக வளாக கடைகள் - ராஜீ ரோடு (கிழக்கு) ராஜீ ரோடு (மேற்கு) தரைதளம் மற்றும் ராஜீ ரோடு (மேற்கு) முதல் தளம் - புதியதாக கட்டப்பட்டுள்ள கடைகளை மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்வது - தொடா்பாக.

பாா்வை: வ.வி.ம.நி.கு.தீ.எண்.23 நாள்.21.06.2013.

**********

கோயம்புத்தூா் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வாா்டு எண்.72-ல் மாநகராட்சி வணிக வளாக கடைகள் - ராஜீ ரோடு (கிழக்கு) பகுதியில் புதியதாக ஏழு கடைகள் ராஜீ ரோடு (மேற்கு) தரைதளம் பகுதியில் நான்கு கடைகள் மற்றும் ராஜீ ரோடு (மேற்கு) முதல் தளம் பகுதியில் மூன்று கடைகள் புதியதாக கட்டப்பட்டுள்ளது.

மேற்படி புதியதாக கட்டப்பட்டுள்ள கடைகளை மின் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி மூலம் ஒதுக்கீடு செய்ய ஏலம் கோரப்படவேண்டும். பொதுப் பணித்துறை வாடகை மதிப்பின் படி வாடகை நிா்ணயம் செய்திட பொறியாளரின் அறிக்கை கோரப்பட்டு கீழ்கண்டவாறு பொதுப்பணித்துறை வாடகை மதிப்பு நிா்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வணிக வளாகம் அமைந்துள்ள இடம் | மொத்த கடைகள் | கடை ஒன்றிக்கு மொத்த சதுரடி | ஒரு சதுரடிக்கு நிா்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ | மாத வாடகை ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | வாா்டு எண்.50-ல் ராஜீ ரோடு (கிழக்கு) பகுதியில் புதியதாக ஏழு கடைகள் | 7 | 161.46 (கடைஒன்றுக்கு) | 28.55 (கடைஒன்றுக்கு) | 4,610/- (கடை ஒன்றுக்கு) |
| 2 | வாா்டு எண்.50-ல் ராஜீ ரோடு (மேற்கு) பகுதியில் தரை தளத்தில் புதியதாக நான்கு கடைகள் | 4 | 161.46 (கடைஒன்றுக்கு) | 28.55 (கடைஒன்றுக்கு) | 4,610/- (கடை ஒன்றுக்கு) |
| 3 | வாா்டு எண்.50-ல் ராஜீ ரோடு (மேற்கு) பகுதியில் தரை தளத்தி புதியதாக மூன்று கடைகள் | 3 | 161.46 (கடைஒன்றுக்கு) | 28.45 (கடைஒன்றுக்கு) | 4,594/- (கடை ஒன்றுக்கு) |

மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்ய கீழ்கண்டவாறு காப்புத் தொகை, வைப்புத்தொகை,சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் மற்றும் சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லாமல் அதற்கு செலுத்த வேண்டிய தொகை நிா்ணயம் செய்யவும் அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண்.24 நாள் 21.06.2013-ல் அலுவலகக்குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| வைப்புத்தொகை | - ரூ.1,50,000/- |
| காப்புத்தொகை | - ரூ. 50,000/- |
| சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் | - ரூ.1,50,000/- |
| சொத்து மதிப்பீடு சான்றிதழுக்கு பதிலாக செலுத்த வேண்டிய தொகை | - ரூ. 75,000/- |

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்4363/2013/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 97 நாள் 24.07.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 23 நாள் 21.06.2013 ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 22

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வருடாந்திர குத்தகை இனங்களுக்கு **2013-2016** ஆண்டுக்கான பொது ஏலம்/மின் ஏலம் **12.06.2013** அன்று நடைபெற்றது. இதில் கீழ்க்கண்ட வணிக வளாக கடைகளுக்கு அதன் எதிரே கண்டுள்ளவாறு உயர்ந்தபட்ச குத்தகை தொகை கோரப்பட்டது.

| வ. எண் | இனம் | அரசாங்க மதிப்பு ரூ. | ஏலதாரர் பெயர் | ஏலதாரர் உயர்ந்தப்பட்ட ஏலத்தொகை ரூ. | மின் ஏலம் ஒப்பந்தபுள்ளி |
|---|---|---|---|---|---|
| 1. | சுந்தராபுரம் தக்காளி மார்கெட் ஏலமேடை | 13,50,000/– | எம்.அன்புராஜ் | 6,21,000/– | – |
| | | | கே.நடராஜன் | 6,10,000/– | |
| 2. | சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் கட்டண கழிப்பிடம் | 2,80,000/– | எம்.அன்புராஜ் | 2,00,006/– | – |

1. வரிசை எண். **1**ல் திரு.எம்.அன்புராஜ் என்பவர் அரசாங்க மதிப்பு ரூ.**13,50,000/–** விட குறைவாக ரூ**6,21,000/–** ஏலம் கோரியுள்ளார். இவ்வினத்திற்கு ஆறாவது முறையாக ஏலம் கோரப்பட்டது. தற்போது இங்கு துறை ரீதியாக சராசரியாக தினசரி ரூ. **750/–** மட்டுமே வசூலிக்கப்பட்டு வருவதால் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. எனவே இவருக்கு ஒதுக்கீடு செய்வது குறித்து வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 65 நாள் 21.06.2013-ன்படி மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

2. வரிசை எண். **2**ல் திரு. எம்.அன்புராஜ் என்பவர் அரசாங்க மதிப்பு ரூ.**2,80,000/–** விட குறைவாக ரூ.**2,00,006/–** ஏலம் கோரியுள்ளார். தக்காளி மார்க்கெட் பகுதியில் உள்ள இந்த கழிப்பிடம் காலை நேரம் மட்டுமே பொதுமக்களும் வியாபாரிகளும் வருவதால் அதிக பயன்பாட்டிற்கு வருகிறது. மற்ற நேரங்களில் வியாபாரிகளும், பொதுமக்களும் அதிகம் வருவதில்லை. எனவே இவருக்கு ஒதுக்கீடு செய்வது குறித்து வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 65 நாள் 21.06.2013-ன்படி மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். **698/2012/அ1**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 98 நாள் 24.07.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 65 நாள் 21.06.2013 ன் தீர்மானத்தை ஏற்று வரிசை எண் 1 மற்றும் 2-க்கான உரிமம் ஒப்படை செய்ய அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 23

| | |
|---|---|
| பொருள் : | வடக்கு மண்டலம் - கோயம்புத்தூர் மாநகராட்சி - வார்டு எண் 1க்கு உட்பட்ட துடியலூர் பகுதியில் மாநகராட்சி மூலம் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவது – தொடர்பாக |
| பார்வை : | 1. உதவி நிர்வாக பொறியாளர் அவர்களின் குறிப்பு நாள் 13.06.2013<br>2. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 46 நாள் 21.06.2013 |

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 1ல் துடியலூர் வெள்ளக்கிணறு சாலையில் மாநகராட்சி மூலம் ரூ.49.80 இலட்சம் மதிப்பீட்டில் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு புதிய வணிக வளாகம் கட்டப்பட்டுள்ளது. இதில் தரை தளத்தில் 12(பன்னிரண்டு) கடைகள் உள்ளன. இக்கடைகளுக்கு சதுரடி 1க்கு ரூ.28.10/- என்ற அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யலாம் எனவும் பார்வை 1ல் காணும் உதவி நிர்வாக பொறியாளர் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரைதளம்

| கடை எண் | அளவு | சதுரடி | மாத வாடகை |
|---|---|---|---|
| 1 முதல் 12 வரை | 10 X 16 | 160 | ரூ.6000/- |

வைப்பு தொகைகள்

| வைப்பு தொகை | காப்பு தொகை | சால்வென்சி தொகை | சால்வென்சிக்கு பதிலாக செலுத்தப்படும் தொகை |
|---|---|---|---|
| ரூ.1,00,000 | ரூ. 50,000 | ரூ.2,00,000 | ரூ.50,000 |

எனவே மாநகராட்சியால் மேற்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வாடகை தொகையின் அடிப்படையில் கடைகளுக்கு பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கு மேற்குறிப்பிட்டுள்ளவாறு ஏல வைப்பு தொகைகள் நிர்ணயம் செய்யவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்பட்டது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மானம் எண் 46 நாள் 21.06.2013ல் இப்பொருளினை மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின்மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 6303/2013/அ1

## மாநகர மன்ற தீர்மானம் எண் 99 நாள் 24.07.2013

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 46 நாள் 21.06.2013 ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 24

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - மாதாந்திர வாடகை கடை – பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்த பட்ச ஏலக் கோரிக்கையை ஏற்று - ஒப்படை செய்வது - தொடர்பாக.

பார்வை
1. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.66 நாள்.21.06.2013
2. வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி நாள்09.07.2013.

--------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் சார்ந்த கீழ்க்கண்ட மாதாந்திர வாடகை இனத்திற்கு 12.06.2013-ம் தேதியில் நடைபெற்ற மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் அதன் எதிரே குறிப்பிட்டுள்ளவாறு உயர்ந்த பட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

வரிசை எண்.1

| இனம் | 15.05.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் | 12.06.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் |
|---|---|---|
| வார்டு எண் 71 புலியகுளம் ரோட்டில் மயான புறம்போக்கு இடம் கடை எண் 2 ( 204சதுரடி) (அரசு மதிப்பு ரூ.10,322/-) | ரூ.7,001/- திரு.ஏ.இ.ராஜன் (ஒப்பந்தப்புள்ளி) | ரூ.7,011/- திரு.ஏ.இ.ராஜன் (ஒப்பந்தப்புள்ளி) |

மேற்படி இனத்திற்கு மூன்றாவது முறையாக நடைபெற்ற ஏலத்தில் அரசு மதிப்பு ரூ.10322/-ஐ காட்டிலும் குறைவாக ரூ.7,011/-க்கு திரு.ஏ.இ.ராஜன் அவர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

வரிசை எண்.2

| இனம் | 15.05.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் | 12.06.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் |
|---|---|---|
| வார்டு எண்.83 முத்து விநாயகர் கோயில் வீதி வணிகவளாக கடைகள் கடை எண்.3 (120 சதுரடி) (அரசு மதிப்பு ரூ.6,300/-) | - | ரூ.7,400/- திரு.கே.மோகன்ராஜ் (ஒப்பந்தப்புள்ளி) |
| வார்டு எண்.83 முத்து விநாயகர் கோயில் வீதி வணிகவளாக கடைகள் கடை எண்.4 (120 சதுரடி) (அரசு மதிப்பு ரூ.6,300/-) | - | ரூ.7,300/- திரு.பி.ராஜ்குமார் (ஒப்பந்தப்புள்ளி) |

மேற்படி இனத்திற்கு 12.06.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் அரசு மதிப்பு ரூ.6,300/-ஐ காட்டிலும் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

வரிசை எண்.3

| இனம் | 12.06.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் |
|---|---|
| சீனிவாசபுரம் தினசரி மார்க்கெட் காய்கறி கடைகள் கடை எண் 46 மற்றும் 47 (அரசுமதிப்பு ரூ.975/- (ஒவ்வொரு கடைக்கும்) | ரூ.800/- திரு.கே.தனராஜ் (ஒப்பந்தப்புள்ளி) (ஒவ்வொரு கடைக்கும்) |

மேற்படி இனத்திற்கு 12.06.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் அரசு மதிப்பு ரூ.975/-ஐ காட்டிலும் குறைவாக ரூ.800/-க்கு (ஒவ்வொரு கடைக்கும்) ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. வரிசை எண்.1, 2 மற்றும் 3–ல் இனங்களுக்கு பெறப்பட்ட ஏலக் கோரிக்கையை ஏற்று ஒப்படை செய்வது குறித்து முடிவு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டதில் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.66 நாள் 21.06.2013-ல் அலுவலகக்குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது. வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்படை செய்யப்பட்ட மேற்படி கடைகளுக்கு பின்னேற்பு வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.9659/10/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 100 நாள் 24.07.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 66 நாள் 21.06.2013 ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 25

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம், வார்டு எண் 24, ரத்தின சபாபதிபுரம், திவான் பகதூர் சாலையில் கோவை நகரமைப்புத் திட்டம் எண். 4-ல் நகரளவு எண். 1177 மற்றும் 1183 ல் 3.10 ஏக்கர் பரப்பில் பள்ளி மற்றும் விளையாடுமிடம் ஒதுக்கீட்டிலிருந்து வணிக உபயோக வரைவு திட்ட மாற்றம் செய்யப்பட்ட இடத்தில் வணிக வளாகத்துடன் கூடிய பலஅடுக்கு வாகன நிறுத்துமிடம் தனியார் பங்களிப்புடன் அமைக்க அனுமதி பெறுவதற்கு அரசுக்கு கடிதம் அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் 2025/13/எச்.1 (மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 101 நாள் 24.07.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 26

கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட உள்ளாட்சி பகுதிகளான குறிச்சி, குனியமுத்தூர் மற்றும் கவுண்டம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் சாலை புதுப்பித்தல், பழுதடைந்த சாலைகளில் சீரமைப்பு போன்ற பணிகளுக்கு IUDM 2013-2014 திட்டத்தின் கீழ் ரூ.1.76 கோடி நிதி மானியமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக புதிதாக இணைக்கப்பட்ட உள்ளாட்சி பகுதிகளில் பின்வரும் சாலைகளை புதுப்பிக்க தயாரிக்கப்பட்ட ரூ.2.076 கோடி மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டியும், சிப்பங்களாக பிரித்து ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகளை மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | மண்டலம் | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1. | கிழக்கு | 34 | வீரியம் பாளையம் ரோட்டில் நேரு நகர் முதல் இளங்கோ நகர் வரை மறு தார் தளம் அமைத்தல் | 50,00,000 |
| 2. | மேற்கு | 6 | இராஜப்பா நகர் பிரதான சாலையில் மறுதார் தளம் அமைத்தல். | 50,00,000 |
| 3. | வடக்கு | 28 | சுரவணம்பட்டி நமச்சிவாயம் நகரில் மறுதார் தளம் அமைத்தல் | 57,60,000 |
| 4. | தெற்கு | 88 | ஜே.ஜே.நகர் பிரதான சாலை மற்றும் அரசு அலுவலர் காலனி பிரதான சாலைகளில் சாலை மேம்பாடு, மழைநீர் வடிகால் மற்றும் சிறு பாலம் கட்டுதல் | 50,00,000 |
| | | | TOTAL | 2,07,60,000 |

மேலும் மேற்காண் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பகிர்வின் அடிப்படையில் திட்டத்திற்கான மானிய தொகையை IUDM திட்டத்தில் கீழ் பெற்றுக்கொள்ளவும் மீதம் உள்ள தொகை ரூ.31.60 இலட்சம் மாநகராட்சி நிதியிலிருந்து பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

1. மேற்கண்ட நிதிப்பகிர்வின் அடிப்படையில் திட்டத்திற்கான மானியம் தொகையினை IUDM திட்டத்தின் கீழ் நிதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் .

2. மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி மற்றும் சிப்பங்களாக பிரித்து ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

3. மேற்படி திட்டத்திற்கான மாநகராட்சி பங்கு தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்10897/ 2012/ எம்.டி3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 102 நாள் 24.07.2013</u>**

தார்தளம் அமைக்கப்படவுள்ள பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிய பின்பு பணியை மேற்கொள்ளவேண்டும் என்ற நிபந்தனையுடன் அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 27

கோயம்புத்தூர் மாநகராட்சிபிரதான அலுவலக வளாகத்தில் உள்ள 1893 ஆம் ஆண்டு கட்டப்பட்ட விக்டோரியா அரங்கம் தற்சமயம் மாமன்றக் கூட்ட அரங்கமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்டு 100 வார்டுகளைக் கொண்டுள்ளது. மாமன்றக் கூட்டம் நடைபெறும்பொழுது அதில் கலந்துகொள்ளும் மாமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள், பத்திரிக்கையாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் அமர்வதற்கு போதுமான இடவசதி இல்லாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. புதிய மாமன்றக்கூட்ட அரங்கம் கட்டுவதற்கு 2012-13 ஆம் ஆண்டு மாநகராட்சி வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்திலேயே மாற்று இடத்தில் அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய மாமன்றக் கூட்ட அரங்கம் சுமார் 9.7 கோடி மதிப்பீட்டில் மாநகராட்சி நிதியிலிருந்து கட்டுவதற்கு அரசிடம் நிர்வாக அனுமதி கோருவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் 6696/13/எம்.டி.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 103 நாள் 24.07.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 28

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி – ஒருங்கிணைந்த நகர்புர வளர்ச்சி புனரமைப்புத் திட்டம் (IUDM WORKS) - சிப்பம் 2 மற்றும் 5ல் உள்ள சில பணிகள் வேறு சிப்பங்களிலும் மீதமுள்ள பாதாள சாக்கடை பணி முடிவுற்ற பகுதிகளில் உள்ள சாலைகள் கூடுதலாகவும் மாற்று பணியாகவும் மேற்கொள்ளப்பட்டதற்கு உரிய பின்னேற்பு வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்புதல் - தொடர்பாக

--------------------------

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகள் முடிவுற்ற இடங்களில் IUDM திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் துவங்கப்பட்டதால் கீழ்க்காணும் சில சிப்பங்களில் உள்ள சாலைகளில் பாதாள சாக்கடைப் பணிகள் முழுமையாக முடிவடையாமல் உள்ளதால், ஏற்கனவே பணிகள் துவங்கப்பட்டு சில வேலைகள் முடிவுற்று உள்ளதாலும், போக்குவரத்துக்கு மாற்று ஏற்பாடாக, பாதாள சாக்கடை பணிகள் நடைபெற்றுவரும் சாலைகளுக்கு மாற்று போக்குவரத்து சாலையாக பயன்படுத்தப்பட வேண்டியுள்ளதாலும், கீழ்க்காணும் பட்டியலின்படி மாற்று பணிகள் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட பகுதிகளுக்குள்ளேயே செலவினம் வரும் வண்ணம் செயல்படுத்தப்பட்டது.

| சிப்பம் | அனுமதிக்கப்பட்ட சாலைப்பணிகள் | கூடுதல் மற்றும் மாற்று பணியாக எடுத்துக் கொண்ட சாலைப் பணிகள் |
|---|---|---|
| சிப்பம் – 2<br>வரிசை எண்.28 | வார்டு எண்.85 கோவிந்தசாமி லேஅவுட் மற்றும் சாவித்திரி நகர் பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல்.<br><br>மதிப்பீட்டுத் தொகை ரூ.49.30 இலட்சம் | வார்டு எண்.78, கோவிந்தசாமி லேஅவுட், சாவித்திரி நகர் பகுதிகளில் பாதாள சாக்கடை முடிவுற்ற சாலைகள் மற்றும் கூடுதலாக ராஜேஸ்வரி நகர் பகுதிகளில் பாதாள சாக்கடை முடிவுற்ற சாலைகளில் பணி மேற்கொள்ளப்பட்டு ரூ.49.30 இலட்சத்துக்குள் பணிகள் முடிக்கப்பெற்றன. |
| சிப்பம் – 5<br>வரிசை எண். 9 (கிழக்கு) | வார்டு எண்.61 லட்சுமி கார்டன் பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல்.<br>மதிப்பீட்டுத் தொகை ரூ.16.90 இலட்சம் | வார்டு எண்.61ல் லட்சுமி கார்டன் பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகள் முடிக்கப்பெறாததால் அதற்கு மாற்றாக வார்டு எண் 61ல் விவேகானந்தர் நகர் மற்றும் டெக்ஸ்டூல் லே அவுட் பகுதிகளில் பாதாள சாக்கடை முடிக்கப்பெற்ற சாலைகளில் மறு தார்தளம் பணி மேற்கொள்ளப்பட்டு ரூ.16.90 இலட்சத்திற்குள் பணிகள் முடிக்கப்பெற்றன . |

மேற்காணும் அனுமதி பெற்ற பணிகளுக்கு கூடுதலாகவும், அவசியம் கருதி இடமாற்றம் செய்து சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பணி மாற்றங்களுக்கு (Deviation) நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் பின்னேற்பு (Ratification) கோருவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்._10897/2011/எம்.டி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 104 நாள் 24.07.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 29

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளன. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 18.06..2013 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 6893/12 / எம் டி 4 | வார்டு எண் 80 ரங்கே வீதியில் உள்ள மாநகராட்சி கல்யாணி அறக்கட்டளை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் முதல் தளத்தில் வகுப்பறைகள் கட்டுதல் மற்றும் அபிவிருத்திப் பணிகள் செய்தல் | 45.00 | 20.05.2013<br><br>இரண்டாவது அழைப்பு | 1. திருமதி கே.பங்கஜம் கோயம்புத்தூர் 19.15% அதிகம்<br>2. தி /ள். என்.பி.கே. அசோசியேட்ஸ், கோயம்புத்தூர், 4.12 % அதிகம் | தி /ள். என்.பி.கே. அசோசியேட்ஸ், கோயம்புத்தூர், 4.12 % அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மேற்படி பணி குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும், இப்பணி அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைவிட கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 6893/2012/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 105 நாள் 24.07.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 30

| | |
|---|---|
| பொருள் | கோயம்புத்தூர் மாநகராட்சி – தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் குறிச்சி, குனியமுத்தூர், கிணத்துக்கடவு, கவுண்டம்பாளையம் , வடவள்ளி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் தலைமையிடங்கள் மற்றும் நீர் சுத்திகரிக்கப்படும் நிலையங்களில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - விரிவான திட்ட அறிக்கையை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயார் செய்யக் கோருதல் - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக |

கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளான கவுண்டம்பாளையம், வடவள்ளி, குறிச்சி, குனியமுத்தூர் உள்ளாட்சி அமைப்புகளுக்கு கவுண்டம்பாளையம்-வடவள்ளி கூட்டுக் குடிநீர் திட்டம், குறிச்சி குனியமுத்தூர்- கிணத்துக்கடவு கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மூலம் தற்பொழுது நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 70 லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேற்படி திட்டங்களில் அதிகபட்ச நிலையில் குடிநீர் பெற தலைமையிடங்களை அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது. எனவே, குறிச்சி, குனியமுத்தூர், கிணத்துக்கடவு, கவுண்டம்பாளையம், வடவள்ளி கூட்டுக் குடிநீர் திட்டங்களின் தலைமையிடங்கள், சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் நீருந்து நிலையங்களை அபிவிருத்தி செய்து நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 135 லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யும் அளவிற்கு குடிநீர் திட்டப் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யவும், பணி மேற்கொள்ளவும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை கோரவும் அதற்கான செலவினத் தொகையை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தவும் மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 5740/2013/ப.வ.எம்.

**மாநகர மன்ற தீர்மானம் எண் 106 நாள் 24.07.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 31

கோயம்புத்தூர் மாநகராட்சி 2013-2014 ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில், மாநகராட்சிக்குச் சொந்தமான பொது ஒதுக்கீடு இடத்தில் நடைபாதை, சிறுவர் விளையாட்டுத் திடல் மற்றும் புல்வெளிகளுடன் கூடிய பூங்காக்கள் மண்டலத்திற்கு 2 வீதம் அமைக்கவும் அதில் 2 பூங்காக்கள் பிரத்தியேகமாக மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான பூங்காவாக அமைக்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 73 திருச்சி சாலை சுங்கம் பகுதியில் அமைந்துள்ள நேரு பூங்காவினை ரூ.69.39 இலட்சம் மதிப்பீட்டில் பிரத்தியேக மகளிர் பூங்காவாக அமைக்கவும் இப்பூங்காவில் மகளிர்கான உடற்பயிற்சி சாலை அமைக்கவும், திருச்சி சாலையை ஒட்டி தடுப்புச்சுவர் கட்டவும் சிறுவர் விளையாட்டுத் திடல் அமைக்கவும் பூங்காவிற்கு அபிவிருத்திப் பணிகள் செய்யவும் மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 2811/2013/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 107 நாள் 24.07.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 32

பொருள் : உதவித் தொகை – கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தில் உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் – வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்குவது – தொடர்பாக.

*******

கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தில் முதியோர் ஒய்வூதியம் / விதவை உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்களை கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் விசாரனை செய்து 54 பயனாளிகளை கண்டறிந்து இவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் எனவும், இவர்கள் உதவித்தொகை வழங்கவும் வட்டாட்சியர், சமூக பாதுகாப்புத் திட்டம், கோயம்புத்தூர் வடக்கு அவர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எனவே வட்டாட்சியர், சமூக பாதுகாப்புத்திட்டம், கோயம்புத்தூர் வடக்கு அவர்கள் சமர்ப்பித்த விண்ணப்பங்களில், மேற்குறிப்பிட்டுள்ள தகுதியுடைய 54 பயனாளிகளுக்கு வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். எண். 772/13/எம்.இ.6

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 108 நாள் 24.07.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 33

கோயம்புத்தூர் மாநகராட்சியில் சிங்காநல்லூர் பேருந்து நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள கனரக வாகனங்கள், பேருந்துகள், நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் இதர வாகனங்களின் இடைவிடாது செல்லும் தேசிய நெடுஞ்சாலையினை பொதுமக்கள் இடையூறின்றி கடக்கும் வகையில் நடைபாதை மேம்பாலம் அமைக்க மாமன்ற தீர்மானம் எண் 277 நாள் 30.11.2011ன்படி தமிழ்நாடு நகர்புற கட்டமைப்பு நிதி நிறுவனத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு நகர்புற கட்டமைப்பு நிதி நிறுவனத்தின் பரிந்துரையின்படி, வில்பர்ஸ்மித் அசோசியேட்ஸ் நிறுவனத்தினா் மூலம் சிங்காநல்லூா் பேருந்து நிலையம் அருகில் ரூ. 75.00 இலட்சம் மதிப்பீட்டில் நடைபாதை மேம்பாலம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

சிங்காநல்லூா் பேருந்து நிலையம் வரும் பொதுமக்கள் போக்குவரத்து நெரிசலின் இடையூறின்றி பாதுகாப்புடன் சாலையினை கடக்கும் வகையில் சிங்காநல்லூா் பேருந்து நிலையம் அருகில் தேசிய நெடுஞ்சாலைத் துறையினருக்குச் சொந்தமான சாலையில் ரூ. 75.00 இலட்சம் செலவில் நடைபாதை மேம்பாலம் அமைக்க நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 10338/2012/எம்.டி.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 109 நாள் 24.07.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 34

கோயம்புத்தூர் மாநகராட்சியில் தனியார் (Public Private Partnership Mode) பங்களிப்புடன் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென தி/ள் BEIL-UPL (Consortium), மும்பை கூட்டு நிறுவனத்துடன் இம்மாநகராட்சி கடந்த 19-11-2007-ல் அனுகூல ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளது.

இம்மாநகராட்சியின் பணியானது அன்றாடம் சேகரம் செய்யப்படும் குப்பைகளை மேற்படி தனியார் நிறுவனத்தினரால் கட்டி இயக்கி பராமரிக்கப்பட்டு வரும் குப்பை மாற்று நிலையங்களுக்கு கொணா்ந்து சோ்க்கப்பட்டு அவ்வாறு சேகரிக்கப்பட்ட குப்பைகளை அந்நிறுவனத்தினரால் இரண்டாம் கட்டமாக அகற்றப்பட்டு வெள்ளலூர் குப்பைக்கிடங்கு அமைந்துள்ள இடத்தில் அந்நிறுவனத்தினரால் நிறுவப்பட்டுள்ள இயற்கை உரம் தயாரிக்கும் நிலையத்திற்கு கொணா்ந்து சோ்க்கப்பட்டு பல்வேறு நிலைகளில் மக்கும் குப்பை, மக்காத குப்பை மற்றும் எதுவுமே செய்ய இயலாத குப்பைகளென தரம் பிரித்து மக்கும் குப்பைகளை ஏரோபிக் டைஜஷன் (Aerobic Digestion) முறையில் இயற்கை உரமாக மாற்றியமைக்கப்படுகிறது. மக்காத மற்றும் எதுவுமே செய்ய இயலாத குப்பைகளை நல நிலை நிரப்பல் அமைப்பில் கொட்டப்பட்டு சுற்றுச்சூழல் மாசுபடாத வகையில் மூடி கழிவு செய்யப்பட்டு வருகிறது.

தற்சமயம் இம்மாநகராட்சியுடன் 3 நகராட்சிகள், 7 பேரூராட்சிகள் மற்றும் ஒரு ஊராட்சி ஆகியவைகள் இணைக்கப்பட்டுள்ளதால் இம்மாநகராட்சியில் தினசரி சேகரமாகும் திடக்கழிவின் அளவு நாளொன்றிற்கு சுமார் 250.00 மெட்ரிக் டன் எடையாக கூடியுள்ளது. மாநகராட்சி எல்லை விரிவாக்கத்தினால் தற்சமயம் இம்மாநகராட்சி மேற்கூறிய தனியார் நிறுவனத்திற்கு நாளொன்றிற்கு சுமார் 850.00 மெட்ரிக் டன் எடையுள்ள தரம் பிரிக்கப்படாத திடக்கழிவுகளை சுற்றுச்சூழல் மாசுபடாத வகையில் கழிவு செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. அவ்வாறு தரம் பிரிக்கப்படாத திடக்கழிவுகளில் இம்மாநகராட்சி பகுதிகளில் சேகரமாகும் கோழிக்கழிவுகள், ஆட்டிறைச்சி மற்றும் மீன் இறைச்சி கழிவுகள் தரம் பிரிக்கப்படாத நிலையில் ஏனைய திடக்கழிவுகளுடன் கலப்பதால் சுகாதார சீர்கேடு ஏற்படுத்துவதுடன் சுற்றுச்சூழல் பெரிதும் மாசுபடுகிறது.

மேற்படி திட்டத்தில் இம்மாநகராட்சியால் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் முதற்கட்ட குப்பை சேகரிப்பு பணிகளின் ஓர் அங்கமான இம்மாநகராட்சி பகுதிகளின் அனைத்து வார்டுகளில் உள்ள பொது மக்களிடையே திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிக்கு ஆந்திரா மாநிலம் வாரங்கல் மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மை திட்ட மாதிரியினை போல் இம்மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளில் செயல்படுத்துவதன் மூலம் கோவை மாநகரத்தினை குப்பையில்லா மாநகரமாக மாற்றியமைக்கப்படும். மேற்படி திட்டத்தினை இம்மாநகராட்சி பொதுநிதி மூலமோ அல்லது தனியார் (Public Private Partnership Mode) பங்களிப்புடனோ செயல்படுத்த தகுதி வாய்ந்த தன்னார்வ தொண்டு நிறுவனத்தினரை தேர்வு செய்து மேற்படி திட்டத்தினை செயல்படுத்துவதற்கு விருப்பக்கேட்பறிக்கை (Expression of Interest) கோரவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்: 6088/2013/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 110 நாள் 24.07.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 35

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – சுகாதார பிரிவு - மாநகராட்சி பகுதிகளுக்குட்பட்ட தெருக்களில் சுற்றி திரியும் தெரு நாய்களை பிடிப்பதற்கு 2 எண்ணிக்கைகள் தெரு நாய் பிடிக்கும் வாகனங்கள் வாங்குவது – தொடர்பாக.

பார்வை :
1) அரசு ஆணை (D) எண் 181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்:05-04-2013.
2) நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் :43441/2012/J2 நாள்:03-05-2013.
3) மாமன்ற தீர்மான எண்:44, நாள்:21-05-2013.

-------------

பார்வையில் 2ல் கண்ட நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகளில் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு 2 எண்ணிக்கையிலான தெரு நாய் பிடிக்கும் வாகனங்கள் வாங்குவதற்கு ரூ.10.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் மேற்படி வாகனங்களை DGS&D விலையிலோ அல்லது தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998-ல் தெரிவிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளை பின்பற்றி வாங்கி கொள்ளுமாறு தெரிவித்துள்ளார். மேலும் அவ்வாறு புதியதாக வாங்கப்படும் வாகனங்களை மாநகராட்சியில் தகுதி வாய்ந்த பணியாளர்களை கொண்டோ அல்லது டெக்ஸ்கோ பணியாளரை கொண்டோ இயக்குமாறு தெரிவித்துள்ளார். டெக்ஸ்கோ பணியாளர்கள் இல்லாத பட்சத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை நியமித்து இயக்குமாறு தெரிவித்துள்ளார்.

பார்வை 3 ல் கண்ட மாமன்ற தீர்மானத்தின்படி இரண்டு எண்ணிக்கையிலான நாய் பிடிக்கும் வாகனங்களை ரூ.16,00,000/- (வாகன பதிவு செலவு, காப்பீடு தொகை செலவு, சாலை வரி செலுத்துதல் இன்னும் பல) செலவினத்தில் வாங்குவதற்கு அவ்வாறு வாங்கும் பட்சத்தில் ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.6,00,000/- ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளி கோர ஆணையரின் அனுமதி அளித்ததற்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கியுள்ளதனை தொடர்ந்து கடந்த மேற்கூறிய பணிக்கு கடந்த 22-05-2013 (முதல் அழைப்பு) அன்று மின்னணு ஒப்பந்தப்புள்ளி (E-tendering) முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு நிறுவனங்கள் பங்கு பெற்றனர். மேற்படி இரண்டு நிறுவனத்தாரும் தங்களது ஒப்பந்தப்புள்ளிகளை இணையதளத்தில் ஏற்றம் செய்யாததால் மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்பட்டு மறு ஒப்பந்தப்புள்ளி (இரண்டாம் அழைப்பு) 24-06-2013 அன்று மின்னணு ஒப்பந்தப்புள்ளி (E-tendering) முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் தி/ள்.என்.எஸ்.ராமாராவ் பாடி ஓர்க்ஸ், சென்னை அவர்கள் கலந்து கொண்டு தனது ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்தனர்.

மேற்படி பணிக்கு கொடுத்திருந்த ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப பிரேரனையை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு கடந்த 25-06-2013 அன்று கூடி விவாதித்து மேற்படி நிறுவனம் தொழில் நுட்ப ரீதியாக தகுதி பெற்றுள்ளதெனவும் அவரது விலைப்புள்ளிகள் அடங்கிய உறைகளை திறக்கலாமென பரிந்துரை செய்ததற்கு ஆணையர் 26-06-2013ல் அனுமதி வழங்கியுள்ளார். இதனைத் தொடர்ந்து அவர்களது விலைப்புள்ளிகள் அடங்கிய உறை 01-07-2013 அன்று திறக்கப்பட்டதில் தி/ள்.என்.எஸ்.ராமாராவ் பாடி ஒர்க்ஸ், சென்னை அவர்கள் ரூ.14,98,658/-க்கு குறைவாக கொடுத்திருந்தனர். இவ்விலைப்புள்ளி திறனாய்வு குழு 08-07-2013 அன்று மேற்கூறிய நிறுவனம் மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்த ஒப்பந்தப்புள்ளியை கூடி விவாதித்து ஏற்கலாமென பரிந்துரை செய்ததற்கு அதனை மாமன்றத்தின் அனுமதி பெற்று ஏற்கலாமென ஆணையர் 09-07-2013ல் அனுமதி வழங்கியுள்ளார்.

எனவே மாநகராட்சி பகுதிகளுக்குட்பட்ட தெருக்களில் சுற்றி திரியும் தெரு நாய்களை பிடிப்பதற்கு 2 எண்ணிக்கைகள் தெரு நாய் பிடிக்கும் வாகனங்கள் கொள் முதல் செய்யும் பணி குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டியுள்ளதால் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி கொடுத்த தி/ள்.என்.எஸ்.ராமாராவ் பாடி ஒர்க்ஸ், சென்னை நிறுவனம் மதிப்பீட்டை விட குறைவாக ரூ.14,98,658/- க்கு கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்:4369/2013/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 111 நாள் 24.07.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 36**

கோவை மாநகராட்சி பொறியியல் பிரிவில் சில்லறை செலவினப் பணியாளர்களாக (Petty Supervising Charges) பணிபுரிந்து வரும் கீழ்கண்ட நபர்கள் தங்களை தேர்ச்சி திறனற்ற பணியாளர் பணியிடத்தில் பணியமர்த்த ஆவண செய்யுமாறு கோரிவருகின்றனர்.

| வ.எண் | பெயர் | வயது | இனம் | கல்வித் தகுதி | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | P.ஜோதிவிநாயகம் | 49 | BC | BE | 10.03.1997 |
| 2 | V.ஜெகதீஸ்வரி | 37 | MBC | DCE | 15.03.1997 |
| 3 | C.D.சீனிவாசன் | 36 | BC | DCE | 08.10.1997 |
| 4 | M.சக்திவேல் | 38 | BC | DEEE | 12.11.1997 |
| 5 | K.சரவணக்குமார் | 32 | BC | BE | 14.05.1998 |
| 6 | K.கணேசன் | 32 | SC | DCRE | 20.11.1998 |
| 7 | R.வெங்கடேஷ் | 38 | SC | DCE | 23.11.1998 |
| 8 | J.மார்டின் மரிய அந்தோணி | 34 | BC | DCE | 03.06.1999 |
| 9 | G. கமலக்கண்ணன் | 31 | BC | ME | 01.08.2001 |
| 10 | B.அனிதா ஜோஸ்பின் | 43 | BC | DCE | 04.08.2001 |

கோவை மாநகராட்சி, பொறியியல் பிரிவில் திட்டப் பணிகளை உரிய காலத்தில் நிறைவேற்றுவதற்காக சம்மந்தப்பட்ட உதவி பொறியாளர், இளநிலை பொறியாளர்களால் அவ்வப்போது சில பணியாளர்கள் உதவிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்கள் வேலை வாய்ப்பு அலுவலகம் வழியாக நியமனம் செய்யப்படவில்லை, இவர்களுக்கென முன்னுரிமை பட்டியல் எதுவும் பராமரிக்கப்படவில்லை, இவர்கள் தங்களை தேர்ச்சி திறனற்ற பணியாளர் பணியிடத்தில் ஈர்த்துக் கொள்ளக் கோரி விண்ணப்பித்து வருகின்றனர். இவர்களுக்கு ஊதியம் வழங்க வரவு செலவு திட்டங்களில் தனியாக நிதி ஒதுக்கீடு எதுவும் கிடையாது. அவர்கள் எந்த திட்டத்திற்காக பணியில் அமர்த்தப்பட்டார்களோ அந்த பணிக்கான மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்படும் 2.5% சதவீதம் சிறு மேற்பார்வை செலவினங்கள் (Petty Supervising Charges) தொகையிலிருந்து அவர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வந்தது.

மேற்படி நபர்கள் பணியிடங்கள் நிரப்புவதற்கு அரசாணை (நிலை) எண்.211 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள்.29.11.2001ல் பொதுவான தடையாணை வெளியிடப்பட்ட தேதிக்கு முன்பிருந்தே பணிதொகையில் சில்லரை செலவின கூலி பெறும் பணியாளர்களாக(Petty Supervision Charges) பணிபுரிந்து வருகிறார்கள். இந்நிலையில் மேற்குறிப்பிட்டுள்ள நபர்களை போல் தினக்கூலி அடிப்படையில் சில்லரை செலவின பணியாளர்களாக பணிபுரிந்து வந்தவர்களை கீழக்கண்ட அரசாணைகளின் கீழ் நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் பணி வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளனர்.

- ந.நி.ம.கு.வ.துறையின் அரசாணை எண்.73 நாள் 25.05.09ல் மூன்றாம் நிலை நகராட்சிகளில் 25 பேர்கள்.
- ந.நி.ம.கு.வ.துறையின் அரசாணை எண். 183 நாள் 19.09.08ல் பேரூராட்சிகளில் 190 பேர்கள்
- ந.நி.ம.கு.வ.துறையின் அரசாணை எண். 242 நாள் 10.12.09ல் பேரூராட்சிகளில் 18 பேர்கள்

மேற்காண் அட்டவணையில் உள்ள 10 பணியாளர்களில் பெரும்பாலனவர்கள் அரசு பணியில் நியமனம் செய்வதற்கான அதிகபட்ச வயதினை கடத்துள்ளனர். மேற்கண்ட நபர்கள் நீண்ட காலமாக இம்மாநகராட்சி பொறியியல் பிரிவுகளில் பணிபுரிந்து வருவதையும், மாநகராட்சி எல்லைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ள நிலையில், தற்போது பொறியியல் பிரிவுகளில் உள்ள காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதையும், கருணை அடிப்படையிலும், மாநகராட்சி பொறியியல் பிரிவு பணிகள் குறித்து அனுபவம் பெற்றிருப்பதாலும், மேற்க்குறிப்பிட்டுள்ள அரசாணைகளை முன்உதாரணமாகக் கொண்டும், காலியாக உள்ள அடிப்படை நுழைவு பணியிடங்களில் பணியமர்த்தும் போது மாநகராட்சி பணியாளர்கள் மற்றும் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்து வரும் பணியாளர்களின் ஊதியம் மற்றும் ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியம் ஆகியவை இம்மாநகராட்சியின் மொத்த வருவாயில் 49% சதவீதத்திற்கு உட்பட்டுள்ளதாலும், மனிதாபிமான அடிப்படையிலும் அவர்களின் கோரிக்கையினை பரிசீலனை செய்து சிறப்பு நேர்வாக இவர்களை மாநகராட்சியில் காலியாக உள்ள அடிப்படை நுழைவு பணியிடமாகிய தேர்ச்சி திறனற்ற பணியாளர் பணியிடங்களில் மேற்கண்ட 10 நபர்களுக்கு வயது வரம்பு விதித் தளர்வும், வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் நியமனம் செய்யப்படாமைக்கு விதித் தளர்வும், இன சுழற்சி முறைக்கு விதித் தளர்வும் அளித்து பணி அமர்த்த அரசிற்கு பரிந்துரை செய்ய அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் : **7072/2013/MD2**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 112 நாள் 24.07.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 37

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி – நகரமைப்பு பிரிவு – கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் உள்ள பூங்காக்கள் பராமரிக்கவும் மற்றும் சாலைகளில் உள்ள மையத்திட்டுகளில் செடிகள் வளர்த்து அதனை பராமரித்தல் – பொது நிறுவனங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் – தொடர்பாக.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீடு இடத்தில் பூங்காக்கள் பராமரிப்பின்றி இருந்து வருகின்றது. அதே போன்று சாலைகளில் உள்ள மையத்திட்டுகளில் செடிகள் வளர்க்கவும் அதனை பராமரிக்கவும் மாவட்ட ஆட்சித் தலைவர், வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் ஆணையாளர் ஆகியோர் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கத்தில் 09.07.2013 அன்று நடைபெற்ற கூட்டத்தில் பல பொது நிறுவனங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மேற்படி பூங்கா மற்றும் சாலை மையத் திட்டுகளை பராமரிக்க முன் வந்துள்ளனர்.

(அ) பொது ஒதுக்கீடு இடத்தில் உள்ள பூங்கா மற்றும் விளையாட்டு இடங்களை பராமரிக்க கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு பொது நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**<u>நிபந்தனைகள்:</u>**

1. பூங்கா மற்றும் விளையாட்டு இடத்தில் மைய அலுவலகத்தில் ஆணையரின் ஆணை பெற்று மாநகராட்சி மண்டல செயற் பொறியாளர் அறிவுரையின்படி அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள வேண்டும்.
2. கட்டிடங்கள் / அறைகள் உள்ளிட்ட வேறு எந்த கட்டுமானமும் கட்டக் கூடாது.
3. மின் இணைப்பு ஆணையர், மாநகராட்சி என்ற பெயரில் இணைப்பு பெற்று அதற்கான கட்டணங்கள் சம்பந்தப்பட்ட நிறுவனமே ஏற்று பராமரிக்கப்பட வேண்டும்.
4. அபிவிருத்தி பணிகள், பராமரிப்பு பணிகள் சம்பந்தப்பட்ட நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற ஒரு விளம்பர பலகை மட்டும் மாநகராட்சியால் குறிப்பிடப்படும் அளவுகளில் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுகிறது.
5. பராமரிப்பு பணிகள் ஒப்பந்த உத்திரவு வழங்கப்பட்ட நாளிலிருந்து 3 வருடத்திற்கு அனுமதிக்கப்படுகிறது.
6. தண்ணீர் வசதி மற்றும் மின்விளக்கு வசதிகள் மாநகராட்சியால் செய்து கொடுக்கப்படும்.
7. பராமரிப்பு பணிகள் தொடர்பாக ஏதேனும் பிரச்சனையோ / வழக்கோ ஏற்பட்டால் மேற்படி ஆணையினை ரத்து செய்து மாநகராட்சியே பராமரிப்பு பணியை மேற்கொள்ளும்.
8. அனுமதி இல்லாமல் வேறு விபரங்கள் ஏதேனும் இருந்தால் அவற்றை மாநகராட்சி மூலம் அப்புறப்படுத்தப்படும்.
9. விதிகள் மீறப்பட்டது தெரியவரின் எந்நேரத்திலும் ஒப்பந்தம் ரத்து செய்யப்படும்.

(ஆ) சாலை மையத்திட்டுகளில் உள்ள பகுதிகளை பசுமையாக பராமரிக்க கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பொது நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

1. சாலை மையத்திட்டுகளில் உள்ள பகுதிகளுக்கு மைய அலுவலகத்தில் ஆணையரின் ஆணை பெற்று மாநகராட்சி மண்டல செயற் பொறியாளர் அறிவுரையின்படி அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள வேண்டும்.
2. சாலை மையத்திட்டு பகுதிகளில் உள்ள இடத்தினை பசுமையாக்க நெடுஞ்சாலை துறை விதிகளின்படி சிறிய அளவில் செடிகள் வைத்து பராமரிக்க வேண்டும்.
3. மையத் திட்டுகளில் சுவர் இடிந்தால் அப்பகுதியை அந்நிறுவனமே புதிதாக கட்டி பராமரிக்க வேண்டும்.
4. மின் விளக்கு பராமரிப்பு மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும்.
5. தண்ணீர் மாநகராட்சியால் வழங்கப்படும். நீர் எடுத்து செல்லும் வசதியனை பராமரிப்பு நிறுவனமே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்,
6. பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட உள்ள நிறுவனம் மாநகராட்சி குறிப்பிடும் அளவில் அந்நிறுவனத்தின் பெயர் வைத்துக் கொள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையில் உத்திரவு வழங்கப்படும்.
7. வேறு விளம்பரங்கள் இருந்தால் அவற்றை எவ்வித முன்னறிவிப்பும் இன்றி மாநகராட்சியால் அப்புறப்படுத்தப்படும்.
8. விதிகள் மீறப்பட்டது தெரியவரின் எந்நேரத்திலும் ஒப்பந்தம் ரத்து செய்யப்படும்.

அலுவலகக் குறிப்பு:- (அ) மற்றும் (ஆ) ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.5706 /2013/எம்.எச்.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 113 நாள் 24.07.2013</u>**

அலுவலகக் குறிப்பு அ மற்றும் ஆ-விற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 38

பொருள் - நிர்வாகம் - கல்வி - கோயம்புத்தூர் மாநகராட்சி –மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் (e-corp) எனப்படும் கணினி வழிக்கல்வி வகுப்புகள் அமைத்திட – நிபுணர் குழு அமைத்தல் செலவினத்தை மேற்கொள்ள - நிர்வாக அனுமதி கோருவது -தொடர்பாக.

---------------------

கோயம்புத்தூர் மாநகராட்சி 2013-2014-ம் ஆண்டிற்கான பயன்பாட்டுக் குறிக்கோளுடன் கூடிய வரவு செலவு திட்ட அறிக்கையில், மாநகராட்சி மணியகாரன்பாளையம் உயர்நிலைப்பள்ளியில் கணினி மூலம் கல்வி பயிலும் வகையில் அமெரிக்கன் இந்தியா ∴பவுண்டேசன் மற்றும் டெல் நிறுவனங்களால் “Dell Connected Class Room” அமைக்கப்பட்டுள்ளது. இதே போன்று 5 மண்டலங்களில் உள்ள உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் மண்டலத்திற்கு ஒரு பள்ளி வீதம் 5 பள்ளிகளில் அமைக்க தீர்மானிக்கப்பட்டது. அதன்படி e-corp (மாநகராட்சி கல்வி) எனப்படும் கணினி வழிக்கல்வி வகுப்புகள் கீழ்க்காண் பள்ளிகளில் அமைக்கப்படவுள்ளது.

| வ. எண் | பள்ளியின் பெயர் | மாணவர்களின் எண்ணிக்கை | | மண்டலம் |
|---|---|---|---|---|
| | | 6 - 10 | 11-12 | |
| 1. | மாநகராட்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளி, செல்வபுரம் | 370 | -- | தெற்கு மண்டலம் |
| 2. | மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி உடையாம்பாளையம் | 367 | 211 | கிழக்கு மண்டலம். |
| 3. | மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி, பாப்பநாயக்கன்புதூர். | 453 | -- | மேற்கு மண்டலம். |
| 4. | மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, ஒப்பணக்கார வீதி | 1063 | 414 | மத்திய மண்டலம். |
| 5. | மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி பீளமேடு | 467 | 225 | வடக்கு மண்டலம். |

மேற்காண் பள்ளிகளில் மாநகராட்சி கல்வி (e-corp) வகுப்புகள் நிறுவிட வகுப்பறைகள் அமைத்தல் மற்றும் கணினிகள் பெற்று பொருத்துதல் கல்வி முறையினை நடைமுறைப்படுத்துதல் போன்றவற்றிக்கு ஆலோசனைகள் பரிந்துரைகள் மற்றும் கருத்துக்கள் வழங்கிட கீழ்க்கண்ட நபர்கள் அடங்கிய நிபுணர்குழு அமைக்கப்படவுள்ளது.

1. ஆணையாளர் அவர்கள்.
2. துணை ஆணையாளர் அவர்கள்.
3. உதவி ஆணையாளர் கணக்குகள்.
4. மாநகர பொறியாளர்.
5. மாநகராட்சி கல்வி அலுவலர்.
6. உதவி திட்ட அலுவலர்.

7. திரு.V.அலெக்சாண்டர், மண்டல ஒருங்கிணைப்பாளர், அமெரிக்கன் இந்தியா ஃபவுண்டேசன் நிறுவனம்.
8. திரு.D.பாஸ்கரன், மாநில திட்ட மேலாளர், அமெரிக்கன் இந்தியா ஃபவுண்டேசன் நிறுவனம்.
9. முதல்வர், கோயம்புத்தூர் இன்ஸ்டியூட் ஆப் டெக்னாலஜி, பீளமேடு.
10. துறைத் தலைவர், கல்வி/கணிப்பொறி அறிவியல், ஸ்ரீ அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம்.
11. துறைத் தலைவர், கணிப்பொறி அறிவியல், அரசினர் தொழிற்நுட்பக்கல்லூரி/ அரசு கலைக்கல்லூரி.
12. தலைமையாசிரியர், சுவாமி சிவானந்தா மேல்நிலைப்பள்ளி, பெரியநாயக்கன்பாளையம்.
13. தலைமையாசிரியர், மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி, இராமலிங்கம் காலனி.
14. கணினி பயிற்றுநர்கள், மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி, ஒக்கிலியர் காலனி.
15. கணினி பயிற்றுநர்கள், மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி, பீளமேடு.

மேற்காண் கணினி வழி கல்வி (e-corp) வகுப்புகள் அமைத்தல் தொடர்பாக பள்ளிகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த பள்ளிக்கு ரூ.20.00 இலட்சம் வீதம் இந்நிதியாண்டில் ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, மேற்காண் நிபுணர் குழு அமைக்கவும், செலவினத்தை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள்வைக்க, கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு அனுமதிக்காக பொருள் வைக்கப்பட்டது.

மாநகராட்சி கல்விக்குழு தீர்மான எண்.22 நாள்.11.07.2013-ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேற்காண் பள்ளிகளில் கணினி வழி கல்வி (e-corp) வகுப்புகள் அமைத்தல் தொடர்பாக நிபுணர்குழு அமைக்கவும், பள்ளிகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த பள்ளிக்கு ரூ.20.00 இலட்சம் வீதம் இந்நிதியாண்டில் ரூ.100.00 இலட்சம் செலவினத்தை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவின் ஒப்புதலுடன் மாமன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- ஒப்புதல் அளிக்கலாம். எண். 2805/2013/ கே 9

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 114 நாள் 24.07.2013</u>**

கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு தீர்மானம் எண் 22 நாள் 11.07.2013-ன்படி அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 39

பொருள் - நிர்வாகம் - கல்வி - கோயம்புத்தூர் மாநகராட்சி – மாநகராட்சி பள்ளிகளில் 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு பயிலும் மாணவ,மாணவியர் பொதுத்தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற ஆலோசனை வழங்க – குழு அமைத்தல் - அனுமதி கோருதல் - தொடர்பாக.

---

கோயம்புத்தூர் மாநகராட்சி 2013-2014-ம் ஆண்டிற்கான பயன்பாட்டுக் குறிக்கோளுடன் கூடிய வரவு செலவு திட்ட அறிக்கையில், மாணாக்கர்களின் வாழ்வில் பெரும் திருப்புமுனையாக அமைவது அவர்களின் 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகளாகும். இம்மாநகராட்சிப் பள்ளிகளில் 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவியர் பொதுத்தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெறவும், பொதுத்தேர்வுகளை மனவலிமையுடன் எதிர்கொள்ளவும், மாணவ, மாணவியரின் பெற்றோரின் பங்களிப்பு இன்றியமையாததாகும்.

இதனைக் கருத்திற் கொண்டு மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கும் அவர்தம் பெற்றோர்களுக்கும் கல்வியாண்டில் துவக்கம் முதல் தொடர்ந்து காலமுறையில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் ஆலோசனைகள் வழங்கப்படும். இந்த ஆலோசனையில் மாணாக்கர்களது படிப்பின் மீதான ஈடுபாடு தொடர் முன்னேற்றம் மற்றும் அனைத்து செயல்பாடுகள் குறித்தும் பகிர்ந்து கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேற்கண்ட வரவு செலவு திட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கும் அவர்தம் பெற்றோர்களுக்கும் கல்வியாண்டின் துவக்கம் முதல் தொடர்நது காலமுறையில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் ஆலோசனைகள் வழங்கிட தன்னார்வு தொண்டு நிறுவனங்களை அணுகி மாணாக்கர்களது படிப்பின் மீதான ஈடுபாடு தொடர் முன்னேற்றம் மற்றும் அனைத்து செயல்பாடுகளை மேம்படுத்த தன்னார்வ தொண்டு நிறுவனங்களோடு இணைந்து செயலாற்றிட கீழ்கண்ட நபர்கள் அடங்கிய குழு ஒன்றினை அமைத்திடவும்,

1. வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள்
2. ஆணையாளர் அவர்கள்.
3. மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்

4. துணை ஆணையாளர் அவர்கள்.
5. மாநகராட்சி கல்வி அலுவலர்.
6. மாநகராட்சி நகர்நல அலுவலர்.
7. மாநகராட்சி உதவி நகர்நல அலுவலர்.
8. பிரதிநிதி, அறம் ஃபவுண்டேஷன், கோவை.
9. துறைத் தலைவர்,உளவியல் துறை, அரசு கலைக்கல்லூரி, கோவை .
10. துறைத் தலைவர்,உளவியல் துறை, மகளிர் கல்வியியல் கல்லூரி, கோவை.
11. துறைத் தலைவர்,உளவியல் துறை, அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம், கோவை
12. மருத்துவர் , மாநகராட்சி மகப்பேறு மருத்துவமனை,உப்பிலிபாளையம்,கோவை.
13. மருத்துவர் , மாநகராட்சி மகப்பேறு மருத்துவமனை,ஜெயில் ரோடு, கோவை.
14. முதல்வர், கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை , கோவை.
15. தலைமை ஆசிரியர், மாநகராட்சி இருபாலர் மேல்நிலைப்பள்ளி, இர.ச.புரம்.
16. தலைமை ஆசிரியர், மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, செல்வபுரம்.
17. திருமதி.எம்.நிர்மலாதேவி, முதுகலை ஆசிரியர், மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி, செல்வபுரம்.
18. திரு.எல்.ஜெயச்சந்திரன், முதுகலை ஆசிரியர், மாநகராட்சி பா.கமலநாதன் நினைவு மேல்நிலைப்பள்ளி, வெங்கிட்டாபுரம்.

மாமன்றத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்க கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டுமைதானங்கள் குழுவிற்கு அனுமதிக்காக பொருள் வைக்கப்பட்டது. கல்விக்குழு தீர்மான எண் 19 நாள் 11.07.2013ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கும் அவர்தம் பெற்றோர்களுக்கும் கல்வியாண்டில் துவக்கம் முதல் தொடர்நது காலமுறையில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் ஆலோசனைகள் வழங்கிட தன்னார்வு தொண்டு நிறுவனங்களை அணுகி மாணாக்கர்களது படிப்பின் மீதான ஈடுபாடு தொடர் முன்னேற்றம் மற்றும் அனைத்து செயல்பாடுகளை மேம்படுத்த தன்னார்வ தொண்டு நிறுவனங்களோடு இணைந்து செயலாற்றிட கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவின் ஒப்புதலுடன் மாமன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- ஒப்புதல் அளிக்கலாம். எண். 3543/2013/ கே 7

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 115 நாள் 24.07.2013</u>**

கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு தீர்மானம் எண் 19 நாள் 11.07.2013-ன்படி அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 40

பொருள் - நிர்வாகம் - கல்வி - கோயம்புத்தூர் மாநகராட்சி – மாநகராட்சி பள்ளிகளில் தற்பொது 10 முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ,மாணவிகளுக்கு உகந்த மற்றும் வேலை வாய்ப்புத் தரக்கூடிய சரியான மேற்கல்வியினை தேர்ந்தெடுக்க தனியார் நிறுவன ஆலோசகர் மற்றும் தமிழக அரசின் வேலை வாய்ப்புத் துறை உதவியுடன் சிறப்பு முகாம்கள் நடத்த – குழு அமைத்தல் இதற்கென ரூ.5.00 இலட்சம் செலவிட நிர்வாக அனுமதி வேண்டுவது – தொடர்பாக.

---------------------

கோயம்புத்தூர் மாநகராட்சி 2013-2014-ம் ஆண்டிற்கான பயன்பாட்டுக் குறிக்கோளுடன் கூடிய வரவு செலவு திட்ட அறிக்கையில், இந்தக் கல்வி ஆண்டு முதல் தற்பொழுது 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு முடிக்கும் மாணவ, மாணவியர்கள் தங்களுக்கு உகந்த மற்றும் வேலை வாய்ப்புத் தரக்கூடிய சரியான மேற்கல்வியினை தேர்ந்தெடுக்க தனியார் நிறுவன ஆலோசகர் மற்றும் தமிழக அரசின் வேலை வாய்ப்புத் துறை உதவியுடன் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட வரவு செலவு திட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு தற்பொழுது 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு முடிக்கும் மாணவ, மாணவியர்கள் தங்களுக்கு உகந்த மற்றும் வேலை வாய்ப்புத் தரக்கூடிய சரியான மேற்கல்வியினை தேர்ந்தெடுக்க தனியார் நிறுவன ஆலோசகர் மற்றும் தமிழக அரசின் வேலை வாய்ப்புத் துறை உதவியுடன் சிறப்பு முகாம்கள் நடத்த கீழ்கண்ட நபர்கள் அடங்கிய குழு ஒன்றினை அமைத்திடவும்

1. வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள்
2. ஆணையாளர் அவர்கள்.
3. மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்
4. துணை ஆணையாளர் அவர்கள்.
5. மாநகராட்சி கல்வி அலுவலர்.
6. விரிவுரையாளர், அரசுக் கலைக்கல்லூரி, கோவை.
7. மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர், வேலை வாய்ப்பு அலுவலகம், கோவை.
8. கமான்டிங் ஆபீசர், 110 T.A. பட்டாலியன் (M.R.C), ரெட்பீல்டு, கோவை-18.
9. காவல்துறை கண்காணிப்பாளர், காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம், ஒசூர் ரோடு, கோவை -18.
10. இயக்குநர், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், மருதமலை ரோடு, கோவை.
11. இயக்குநர், வனத்துறை அலுவலகம், கௌலிபிரவுன் ரோடு, கோவை.
12. இயக்குநர், தீயணைப்புத்துறை அலுவலகம், கோவை – 18.
13. இயக்குநர், தொழில்நுட்ப கல்லூரி, மேட்டுப்பாளையம் ரோடு, கோவை
14. Lead Bank Manager, கோவை.

15. ஷிரமிக் வித்யா பீடம், அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம், கோவை.
16. மாநகர நல அலுவலர், கோவை.
17. துறைத்தலைவர், மகளிர் கல்வியியல் கல்லூரி, கோவை.

இதற்கென ரூ.5.00 இலட்சம் செலவினத்தை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மாமன்றத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்க கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவிற்கு அனுமதிக்காக பொருள் வைக்கப்பட்டது. கல்விக்குழு தீர்மான எண் 20 நாள் 11.07.2013ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு முடிக்கும் மாணவ, மாணவியர்கள் தங்களுக்கு உகந்த மற்றும் வேலை வாய்ப்புத் தரக்கூடிய சரியான மேற்கல்வியினை தேர்ந்தெடுக்க தனியார் நிறுவன ஆலோசகர் மற்றும் தமிழக அரசின் வேலை வாய்ப்புத் துறை உதவியுடன் சிறப்பு முகாம்கள் நடத்த கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவின் ஒப்புதலுடன் மாமன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- ஒப்புதல் அளிக்கலாம். எண். 3544/2013/ கே 7

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 116 நாள் 24.07.2013</u>**

கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு தீர்மானம் எண் 20 நாள் 11.07.2013-ன்படி அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 41

பொருள் - நிர்வாகம் - கல்வி - கோயம்புத்தூர் மாநகராட்சி – மாநகராட்சி பள்ளிகளின் கல்வித்தரத்தினை மேம்படுத்த - தனியார் பள்ளிகளின் கல்வித்தரத்திற்கும் மேலாக உயர்த்தும் வகையில் ஆலோசனை வழங்க குழு அமைத்தல் - இதற்காக ரூ.25.00 இலட்சம் செலவிட நிர்வாக அனுமதி வேண்டுவது – தொடர்பாக.

---

கோயம்புத்தூர் மாநகராட்சி 2013-2014-ம் ஆண்டிற்கான பயன்பாட்டுக் குறிக்கோளுடன் கூடிய வரவு செலவு திட்ட அறிக்கையில், மாநகராட்சிப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள், உட்கட்டமைப்பு, கல்விதரம் அனைத்தும் தனியார்ப்பள்ளிகளுக்கு இணையாக அமைக்கப்பட்டு மாநகராட்சிப் பள்ளிகளில் மாணாக்கர்கள் பயன்பெற்று வருகின்றனர். இதுவரை 15 பள்ளிகளுக்கு ISO தரச்சான்றிதழ் பெறப்பட்டு சிறப்பான முறையில் மாணாக்கர்களுக்கு கல்வி வழங்கப்பட்டு வருகின்றது. அதன் தொடர்ச்சியாக நமது பள்ளிகளில் தரத்தினை தனியார் பள்ளிகளுக்கும் கூடுதலாக உருவாக்கிட நிபுணர்குழு அமைக்கப்படும். இக்குழு அரசின் பொதுக் கல்வி முறைத்திட்டத்தினை எவ்விதத்திலும் பாதிக்காத வண்ணம் அரசுப்பாட அட்டவணை திட்டத்திற்கு உட்பட்டு மாநகராட்சிப் பள்ளிகள் கல்வித்தரத்தினை தனியார் பள்ளிகளின் கல்வித்தரத்திற்கும் மேலாக உயர்த்தும் வகையில் ஆலோசனைகள் வழங்கும்.

மேற்படி குழுவானது கோயம்புத்தூர் மாநகரின் சிறந்த பள்ளிகளையும் தமிழகத்தின் சிறந்த பள்ளி ஒன்றினையும், பிற மாநிலங்களில் சிறந்த பள்ளி ஒன்றினையும் மற்றும் அயல்நாட்டின் சிறந்த பள்ளி ஒன்றினையும் பார்வையிட்டு அதன் அடிப்படையில் மாநகராட்சிப் பள்ளிகளின் தர மேம்பாட்டிற்காக பொதுவான ஒரு சிறந்த திட்டத்தினைத் தயார் செய்யும். அதன்பேரில் மாநகராட்சிப் பள்ளிகளின் தரத்தினை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.25.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட வரவு செலவு திட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு பள்ளிகளில் தரத்தினை தனியார் பள்ளிகளுக்கும் கூடுதலாக உருவாக்கிடவும், அரசின் பொதுக் கல்வி முறைத்திட்டத்தினை எவ்விதத்திலும் பாதிக்காத வண்ணம் அரசுப்பாட அட்டவணை திட்டத்திற்கு உட்பட்டு மாநகராட்சிப் பள்ளிகள் கல்வித்தரத்தினை தனியார் பள்ளிகளின் கல்வித் தரத்திற்கும் மேலாக உயர்த்தும் வகையில் ஆலோசனைகள் வழங்கவும் கீழ்காண் நபர்கள் அடங்கிய நிபுணர் குழு ஒன்று அமைத்திடவும்

1. வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள்
2. ஆணையாளர் அவர்கள்.
3. மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்
4. துணை ஆணையாளர் அவர்கள்.
5. மாநகராட்சி கல்வி அலுவலர்.
6. தலைவர் கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு கோயம்புத்தூர் மாநகராட்சி.
7. தலைமையாசிரியர், மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி, சித்தாபுதூர்.
8. தலைமையாசிரியர், மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி, இராமலிங்கம் காலனி.
9. தலைமையாசிரியர் , மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, கிருஷ்ணாபுரம்.
10. தலைமையாசிரியர் , மாநகராட்சி ஆரம்பப்பள்ளி, செல்வபுரம் வடக்கு.

இதற்கென ரூ.25.00 இலட்சம் செலவினத்தை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மாமன்றத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்க கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டுமைதானங்கள் குழுவிற்கு அனுமதிக்காக பொருள் வைக்கப்பட்டது. கல்விக்குழு தீர்மான எண் 18 நாள் 11.07.2013ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சி பள்ளிகளின் தரத்தினை தனியார் பள்ளிகளுக்கும் கூடுதலாக உருவாக்கிடவும், அரசின் பொதுக் கல்வி முறைத் திட்டத்தினை எவ்விதத்திலும் பாதிக்காத வண்ணம் அரசுப்பாட அட்டவணை திட்டத்திற்கு உட்பட்டு மாநகராட்சி பள்ளிகளின் கல்வித்தரத்தினை தனியார் பள்ளிகளின் கல்வித் தரத்திற்கும் மேலாக உயர்த்தும் வகையில் ரூ. 25.00 இலட்சம் செலவினத்தை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவின் ஒப்புதலுடன் மாமன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- ஒப்புதல் அளிக்கலாம். எண். 3542/2013/ கே 7

**மாநகர மன்ற தீர்மானம் எண் 117 நாள் 24.07.2013**

கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு தீர்மானம் எண் 18 நாள் 11.07.2013-ன்படி அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 42

பொருள் - நிர்வாகம் - கல்வி – கோயம்புத்தூர் மாநகராட்சி - புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டம் - மாநகராட்சி பள்ளிகளில் சமையல் செய்யும் பழைய பாத்திரங்களுக்கு பதிலாக புதிய பாத்திரங்களை பள்ளி சத்துணவு மையங்களுக்கு வாங்கி வழங்கிட மாநகராட்சி நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளவும் - நிர்வாக அனுமதி கோருவது - தொடர்பாக.

---------------------

கோயம்புத்தூர் மாநகராட்சி 2013-2014-ம் ஆண்டிற்கான பயன்பாட்டுக் குறிக்கோளுடன் கூடிய வரவு செலவு திட்ட அறிக்கையில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டத்தின்கீழ் இயங்கும் மாநகராட்சி பள்ளி சத்துணவு மையங்களுக்கு LPG சிலிண்டர் மற்றும் அடுப்புகள் நிறுவுவதற்கும் மற்றும் பள்ளிகளில் சமையல் செய்யும் பழைய பாத்திரங்களுக்கு பதிலாக புதிய பாத்திரங்களை பள்ளி சத்துணவு மையங்களுக்கு வாங்கி வழங்கிடவும் இந்நிதியாண்டில் ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதி ஒதுக்கீட்டின் கீழ் மாநகராட்சியின் கீழ் இயங்கும் 77 பள்ளி சத்துணவு மையங்களுக்கும் மாணவ/மாணவியரின் எண்ணிக்கைக்கு ஏற்ப வெவ்வேறு அளவுகளில் சமையல் செய்யும் பாத்திரங்கள் ஒரு மையத்திற்கு 5 வீதம் 77 மையங்களுக்கு 385 பாத்திரங்களை பெற்று வழங்கிடவும், மேற்காண் செலவினத்தை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், அனுமதி வேண்டி மாமன்ற பொருள் வைக்க, கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது. மாநகராட்சி கல்விக்குழு தீர்மான எண்.21 நாள்.11.07.2013–ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே மாநகராட்சி 77 பள்ளி சத்துணவு மையங்களுக்கும் மாணவ/மாணவியரின் எண்ணிக்கைக்கு ஏற்ப வெவ்வேறு அளவுகளில் சமையல் செய்யும் பாத்திரங்கள் ஒரு மையத்திற்கு 5 வீதம் 77 மையங்களுக்கு 385 பாத்திரங்களை பெற்று வழங்கிட ஏற்படும் செலவினத் தொகையை மாநகரட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவின் ஒப்புதலுடன் மாமன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-அனுமதிக்கலாம். எண். 3601/2013/ கே 8

**மாநகர மன்ற தீர்மானம் எண் 118 நாள் 24.07.2013**

கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு தீர்மானம் எண் 21 நாள் 11.07.2013-ன்படி அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 43

பொருள் - நிர்வாகம் - கல்வி - கோயம்புத்தூர் மாநகராட்சி - புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டம் - மாநகராட்சி பள்ளிகளில் எல்.பி.ஜி. சிலிண்டர் மற்றும் அடுப்புகள் நிறுவுவதற்கும் - எரிவாயு சிலிண்டர் தொடர்ந்து வாங்கி பள்ளி சத்துணவு மையங்களுக்கு வழங்கி தொடர் செலவினம் மேற்கொள்ள அனுமதி வேண்டுவது- தொடர்பாக.

---------------

கோயம்புத்தூர் மாநகராட்சி 2013-14-ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கையில் இம்மாநகராட்சி அனைத்துப் பள்ளிகளில் செயல்பட்டு வரும் சத்துணவு மையங்களுக்கு எல்.பி.ஜி.சிலிண்டர் மற்றும் அடுப்புகள் நிறுவுவதற்கும், புதிய பாத்திரங்கள் வாங்கி வழங்குவதற்கும் இந்நிதியாண்டில் ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டத்தின்கீழ் இம்மாநகராட்சியில் 77 பள்ளி சத்துணவு மையங்கள் இயங்கி வருகின்றன.

தற்பொழுது எரிவாயு இணைப்பு வசதிகள் வழங்கப்பட்டுள்ள 50 பள்ளிகளில் ஒரு மாதத்திற்கு தேவைப்படும்

| | |
|---|---|
| எரிவாயு சிலிண்டர் எண்ணிக்கை | 175 |
| தற்பொழுது எரிவாயு சிலிண்டரின் விலை | ரூ.1289 |
| எரிபொருளுக்குண்டான அரசு மானியம் நீங்கலாக ஒரு மாதத்திற்கு எரிவாயு சிலிண்டர் வழங்க தேவைப்படும் அதிகப்படியான தொகை | ரூ.1,92,671 |
| மீதமுள்ள 27 பள்ளி சத்துணவு மையங்களுக்கும் எரிவாயு இணைப்பு நிறுவினால் ஒரு மாதத்திற்கு எரிவாயு சிலிண்டர் வழங்க தேவைப்படும் அதிகப்படியான தொகை | ரூ.56,830 |
| ஒரு ஆண்டில் 11 மாதங்களுக்கு எரிவாயு சிலிண்டர் வழங்க ஏற்படும் உத்தேச செலவினம் | ரூ.27,44,511 |

மேற்கண்ட கூடுதல் செலவினத் தொகையினை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மாமன்றத்திற்கு அனுமதி வேண்டி பொருள் வைக்க கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது. மாநகராட்சி கல்விக்குழு தீர்மான எண். 17 நாள் 08.05.2013-ன் படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே மாநகராட்சி பள்ளி சத்துணவு மையங்களில் LPG சிலிண்டர், அடுப்புகள் நிறுவுவதற்கும் மற்றும் ஒரு ஆண்டில் 11 மாதங்களுக்கு எரிவாயு சிலிண்டர் வாங்கி வழங்க ஏற்படும் தொடர் உத்தேச செலவினமாக ரூ.27,44,511/-ஐ மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவின் ஒப்புதலுடன் மாமன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம்.

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் குறிப்பு - அ) ஏற்கலாம். ஆ) மீதம் இருக்கும் 27 பள்ளிகளுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கலாம்.

எண். 2543/2007/கே8

**மாநகர மன்ற தீர்மானம் எண் 119 நாள் 24.07.2013**

கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு தீர்மானம் எண் 17 நாள் 11.07.2013-ன்படி அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்தும் மேலும் மீதம் இருக்கும் 27 பள்ளிகளுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கவும் அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 44

பொருள் - நிர்வாகம் - கல்வி - கோயம்புத்தூர் மாநகராட்சி – மாநகராட்சி நடுநிலை மற்றும் ஆரம்பப்பள்ளிகளில் உள்ள விளையாட்டு மைதானங்களை சீரமைத்து புதிதாக விளையாட்டு உபகரணங்களை கொள்முதல் செய்து நிறுவவும் அதற்கென ரூ.60.00 இலட்சம் செலவிட நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக.

---------------------

கோயம்புத்தூர் மாநகராட்சி 2013-2014-ம் ஆண்டிற்கான பயன்பாட்டுக் குறிக்கோளுடன் கூடிய வரவு செலவு திட்ட அறிக்கையில், மாநகராட்சி நடுநிலை மற்றும் ஆரம்பப்பள்ளி மாணவ/மாணவியரின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் பொருட்டும், அவர்களின் உடல் நலனைச் செம்மையுறப் பேணி காக்கும் பொருட்டும், மாநகராட்சி நடுநிலை மற்றும் ஆரம்பப்பள்ளிகளில் உள்ள விளையாட்டு மைதானங்களைச் சீரமைத்து புதிதாக விளையாட்டு உபகரணங்களை கொள்முதல் செய்து நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கென 20 பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு ஒரு பள்ளிக்கு ரூ.3.00 இலட்சம் வீதம் இந்நிதியாண்டில் ரூ.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட வரவு செலவு திட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு நடுநிலை மற்றும் ஆரம்பப்பள்ளிகளில் உள்ள விளையாட்டு மைதானங்களைச் சீரமைத்து புதிதாக விளையாட்டு உபகரணங்களை கொள்முதல் செய்து நிறுவ வேண்டிய பள்ளிகளின் பெயர் பட்டியல் கீழே வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பள்ளியின் பெயர் | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, கோட்டை | 77 |
| 2 | மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, இராமசாமி நகர் | 204 |
| 3 | மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, டாடாபாத் | 99 |
| 4 | மாநகராட்சி ஆரம்பப்பள்ளி, செல்வபுரம் மெயின் | 237 |
| 5 | மாநகராட்சி ஆரம்பப்பள்ளி, செல்வபுரம் வடக்கு, | 336 |
| 6 | மாநகராட்சி ஆரம்பப்பள்ளி, இராமலிங்கம் காலனி | 27 |
| 7 | மாநகராட்சி ஆரம்பப்பள்ளி, சித்தாபுதூர் | 148 |

| | | |
|---|---|---|
| 8 | மாநகராட்சி ஆரம்பப்பள்ளி, புலியகுளம் | 45 |
| 9 | மாநகராட்சி ஆரம்பப்பள்ளி, இராமநாதபுரம் | 178 |
| 10 | மாநகராட்சி ஆரம்பப்பள்ளி, கணேசபுரம் | 169 |
| 11 | மாநகராட்சி ஆரம்பப்பள்ளி, திருச்சி ரோடு | 25 |
| 12 | மாநகராட்சி ஆரம்பப்பள்ளி, ஒண்டிப்புதூர் வடக்கு | 149 |
| 13 | மாநகராட்சி ஆரம்பப்பள்ளி, பீளமேடு | 82 |
| 14 | மாநகராட்சி ஆரம்பப்பள்ளி, குப்பக்கோணாம்புதூர் | 246 |
| 15 | மாநகராட்சி ஆரம்பப்பள்ளி, உடையாம்பாளையம் | 197 |
| 16 | மாநகராட்சி ஆரம்பப்பள்ளி, மருதூர் இராமகிருஷ்ணாபுரம் | 109 |
| 17 | மாநகராட்சி ஆரம்பப்பள்ளி, விவசாயக்கல்லூரி வளாகம் | 67 |
| 18 | மாநகராட்சி ஆரம்பப்பள்ளி, பாலரங்கநாதபுரம் | 80 |
| 19 | மாநகராட்சி ஆரம்பப்பள்ளி, வரதராஜபுரம் | 121 |
| 20 | மாநகராட்சி ஆரம்பப்பள்ளி, நெசவாளர் காலனி | 102 |

இதற்கென ரூ.60.00 இலட்சம் செலவினத்தை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மாமன்றத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்க கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவிற்கு அனுமதிக்காக பொருள் வைக்கப்பட்டது.

மாநகராட்சி கல்விக்குழு தீர்மான எண்.14 நாள்.08.05.2013-ன்படி மேலும், மாநகராட்சி பீளமேடு மற்றும் பாலரங்கநாதபுரம் ஆரம்பப்பள்ளிகளில் போதிய இடவசதி இல்லாத காரணத்தால் வி.ஜி.ராவ் (கிருஷ்ணராயபுரம்) மற்றும் கணபதி ஆரம்பப்பள்ளிகளில் விளையாட்டு மைதானங்களை சீரமைத்து, விளையாட்டு உபகரணங்களை நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். மேலும் மண்டல வாரியாக பள்ளிகளின் விபரத்தை உதவி ஆணையாளர்களுக்கு அனுப்பி மதிப்பீட்டுடன் மன்றத்திற்கு பொருள்வைக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

மாநகராட்சி 5 மண்டலங்களில் உள்ள பள்ளிகளில் தேர்ந்தெடுக்கப்படும் 20 பள்ளிகளுள் விளையாட்டு மைதானங்களை சீரமைத்து, விளையாட்டு உபகரணங்களை ரூ.60.00 லட்சம் மதிப்பிற்கு நிறுவவும் உதவி ஆணையரிடம் மதீப்பீடு பெற்று செலவினங்களை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து தொகை செலவிடவும் கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டுமைதானங்கள் குழு தீர்மானத்தின்படி மண்டல வாரியாக பணிகள் மேற்கொள்ளவும் மாமன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-ஒப்புதல் அளிக்கலாம். எண். 3523/2013/ கே 11

**மாநகர மன்ற தீர்மானம் எண் 120 நாள் 24.07.2013**

கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு தீர்மானம் எண் 14 நாள் 11.07.2013-ன்படி அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 45

| | |
|---|---|
| பொருள்: | கோயம்புத்தூர் மாநகராட்சி சுவர்ண ஜெயந்தி திட்டம் - நகர்புற இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டம் **2012-12** தேர்வு செய்யப்பட்ட தகுதியுடைய பயனாளிகளின் பெயரை வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் சேர்ப்பது –தொடர்பாக. |

நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் உத்தரவின் படி **2012 - 2013**-ம் ஆண்டிற்கு STEP-UP பயிற்சி அளித்தல் தொடர்பாக **25.3.2012**, **26.3.2012** மற்றும் 20.4.2013 ,21.4.2013, 22.4.2013 ஆகிய நாட்களில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள பயனாளிகளை தேர்வு செய்வது தொடர்பாக அனைத்து மண்டல அலுவலகங்களிலும் முகாம்கள் நடத்தப்பட்டது.

இந்த முகாம்கள் மூலமாகவும், கோயம்புத்தூர் மாநகராட்சி சமுதாய அமைப்பாளர்கள் மூலமாகவும் பயனாளிகளை கண்டறிந்து விண்ணப்பங்கள் சேகரித்த வகையில் மொத்தம் **4036** விண்ணப்பங்கள் பெறப்பட்டதில் **720** நபர்கள் மட்டும் BPL பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். மீதமுள்ள **3316** விண்ணப்பதாரர்கள் BPL பட்டியலில் இடம் பெறவில்லை.

நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் **18.06.2013** -ம் நாளைய உத்தரவிற்கேற்ப வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் இடம் பெறாத இந்த பயனாளிகளை மாநகராட்சி சமுதாய அமைப்பாளர்கள் ஆய்வு செய்து, இவர்களை வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் சேர்த்து **2012-13**-ம் ஆண்டிற்கான STEP-UP பயிற்சி வழங்குவதற்கு பட்டியல் சமர்ப்பித்துள்ளனர். சமுதாய அமைப்பாளர்களின் அறிக்கையினை ஏற்று இந்த 2277 நபர்களை பயிற்சிக்கு அனுப்புவதற்கு ஏதுவாக BPL பட்டியலில் சேர்க்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். எண்.**6100/2012**/எம்.இ.**6**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 121 நாள் 24.07.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 46

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கவும் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்யவும் பிளம்பர்கள் உரிமம் வழங்குவது –தகுதிகளில் திருத்தம் செய்தது – மாமன்றத்தின் அனுமதி கோருதல் - சம்பந்தமாக.

------

குழாய் பொருத்துனா் (பிளம்பா்) உரிமம் வழங்க மாமன்ற தீா்மான எண் 278 நாள் 29.11.2012 படி கீழ்கண்டவாறு தீா்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை இணைப்புகள் கோரும் விண்ணப்பங்களுக்கு குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்க மாநகராட்சி உரிமம் பெற்ற பிளம்பர்கள் மூலமாக வழங்கப்பட்டு வந்தன. இந்நிலையில் அரசாணை (நிலை) எண்.287 நாள்.5.11.96ல் குடிநீர் இணைப்பு வேண்டுவோர் குடிநீர் இணைப்பு பெற ஆறு நடைமுறைகளை தெரிவித்து இந்த நடைமுறைகளை பரிட்சார்த்த முறையில் ஒருவருட காலத்திற்கு சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் அமல்படுத்தலாம் என அரசாணை வெளியிடப்பட்டது.

இந்த அரசாணைக்கு எதிராக தமிழ்நாடு பிளம்பர்கள் அசோசியேசன் உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண் று.ஞ.18855/96–ல் வழக்கு தொடர்ந்தனர். இதனால் அரசு வழக்கறிஞரிடம் கருத்து பெறப்பட்டு ஒவ்வொரு வருடமும் நிபந்தனைகளின் அடிப்படையில் 2005–06 மற்றும் 2006–07ம் ஆண்டு வரையில் பிளம்பர் உரிமம் (குடிநீர் இணைப்பு மற்றும் பாதாள சாக்கடை இணைப்பு பணிகள் செய்ய 56 நபர்களுக்கும் மற்றும் குடிநீர் இணைப்பு பணிகள் மட்டும் செய்ய 17 நபர்களுக்கும்) வழங்கப்பட்டன.

உயர்நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த வழக்கில் இந்த அரசாணை வெளியிடப்பட்டு ஓராண்டிற்கு மட்டுமே செல்லுபடியாகத்தக்கதாலும் இந்த அரசாணை பரிட்சார்த்த அடிப்படையில் வெளியிடப்பட்டதாலும் மேலும் பலகாரணங்களினாலும் இவ்வழக்கு உயர்நீதிமன்றத்தில் முடிவு பெற்றது.

இத்தீர்ப்பு நகல் கோவை மாநகராட்சிக்கு 28.06.07ல் கிடைக்கப்பெற்ற பின்னர் 2006–07ம் ஆண்டிற்கு பிளம்பர் உரிமம் வழங்க பரிசீலிக்கப்பட்டு அரசாணை எண்.523 நாள்.19.9.95ஐ அமல்படுத்துவது தொடர்பாக மாநகராட்சி வழக்கறிஞரிடம் கருத்து கேட்கப்பட்டு பின்னர் புதிதாக பிளம்பர் உரிமம் வழங்குவது பற்றி முடிவு எடுக்க, புதிதாக பிளம்பர் உரிமம் வழங்க அரசால் அரசாணை ஏதேனும் வெளியிடப்பட்டுள்ளதா எனவும் பிளம்பர் உரிமம் வழங்குவதற்கு தெளிவுரை வேண்டியும் நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு தொடர்ச்சியாக கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில் மாநகராட்சி உரிமம் பெற்ற பிளம்பர்கள் சங்கத்தின் 28.11.2011ம் தேதியிட்ட கடிதத்தில் தங்களுக்கு உரிமத்தினை வழங்குமாறும் இது சம்மந்தமாக உயர்நீதிமன்றம் 20.06.2011ல் வழங்கியுள்ள தீர்ப்பின் நகலுடன் விண்ணப்பங்கள் வந்துள்ளன. இந்த தீர்ப்பின்படி அரசாணை எண்.287/96ல் வெளியிடப்பட்டு ஒரு வருட காலத்திற்கு பரிட்சார்த்த முறையில் மட்டுமே இருந்ததால் இவ்வழக்கினை முடித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

மாநகராட்சியில் பிளம்பர் உரிமம் வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளனர். தற்போது இம்மாநகராட்சி 72 வார்டிலிருந்து 100 வார்டுகளாக விரிவாக்கம் செய்யப்பட்டு மாநகராட்சியின் பரப்பளவு 257.04 ச.கி.மீ ஆக உயர்ந்துள்ளது. தற்பொழுது பணியாற்றும் பணியாளர்களின் எண்ணிக்கையும் மிகக் குறைவாகவே உள்ளது.

மேலும் மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்டதில் தற்போது புதிதாக இணைக்கப்பட்ட மாநகராட்சிப் பகுதியில் (நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில்),

1. குடிநீர் இணைப்பு சட்டத்திற்கு புறம்பாக அதாவது முறையான அனுமதி பெறாமல் உள்ளது கண்டறியப்பட்டது.
2. மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் வழங்கப்பட்ட குடிநீர் இணைப்புகளுக்கு குடிநீர் அளவுமானி பொருத்தப்படவில்லை.
3. குடிநீர் இணைப்பு அனுமதி பெறாத கட்டிங்களுக்கும் மற்றும் காலி மனையிடங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.
4. குடிநீர் இணைப்பு பகிர்மான குழாயிலிருந்து தாழ்வாக பதிக்கப்பட்டுள்ளதால் குடிநீரில் கழிவு நீர் கலந்து வருவது கண்டறியப்பட்டுள்ளது.
5. குடிநீர் இணைப்பு வழங்க உத்தரவு வழங்கப்பட்டும் இணைப்பு வழங்காமல் நிலுவையில் உள்ளது.

ஏற்கனவே, இம்மாநகராட்சியின் பழைய 72 வார்டு பகுதிகளில் இதுவரை வழங்கப்பட்ட அனைத்து குடிநீர் இணைப்புகளும் மாநகராட்சி நிர்வாகத்திற்கு கட்டுப்பட்டு குழாய் இணைப்புகள் பிளம்பர்கள் மூலம் கொடுக்கப்பட்டு வந்தது. அனைத்து இணைப்புகளுக்கும் முறையான உத்தரவு மற்றும் உரிய கட்டணங்கள் செலுத்தப்பட்ட பின்னரே குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கோயம்புத்தூர் மாநகராட்சியில் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை இணைப்பு பணிகள் மற்றும் பழுது நீக்கும் பணிகளுக்கு மாநகராட்சியால் உரிமம் பெறப்பட்ட பிளம்பர்களுக்கு உரிமம் புதுப்பிக்கப்படவில்லை என தெரிவித்து திரு.சி.எம்.முருகேசன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.23103/12 எண்ணில் வழக்கு தொடரப் பட்டுள்ளது. இது குறித்து உயர்நீதிமன்ற வழக்கறிஞர் தெரிவித்த கருத்துக்கள் பின்வருமாறு

1. கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் பிரிவு 197ன் கீழ் மாநகராட்சியிடம் உரிமம் பெற்ற நபர்களை தவிர மற்றவர் யாரும் குடிநீர் செல்லும் குழாய்கள் மற்றும் அதனை ஒட்டியுள்ள இடங்களில் பிரவேசிக்க கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் குடிநீர் இணைப்பு மற்றும் விநியோகப் பணிகளை செய்வதற்கான பிளம்பர்களுக்கு உரிய அனுமதி வழங்கவேண்டியுள்ளது.
2. மேலும் மாநகராட்சி உபவிதிகளிலும் சில மாறுதல்களும் கூடுதல் சேர்க்கைகளையும் மேற்கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

<u>மாநகராட்சி வரைவு உபவிதிகளில் கீழ்கண்டவாறு மாறுதல்கள்:–</u>

1. பக்கம் 1ல் 1.''ஆ''வில், குடிநீர் இணைப்பு பெறுவதற்காக 1981 ஆம் வருடத்திய கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் பிரிவு, 200 (1)இன் படி ஒவ்வொரு குழாய் இணைப்பிற்கான விண்ணபத்தினை கட்டிட உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் வீட்டு உரிமையாளரின் அனுமதியுடன், அதற்கான படிவ கட்டணம் மற்றும் மதிப்பீட்டு கட்டணம் ரூ.125 (ரூபாய் நூற்று இருபத்திஐந்து மட்டும்) செலுத்தி படிவம் 'அ' பெற்று ஆணையாளருக்கு அனுப்ப வேண்டும். பதிவு கட்டணம் செலுத்தி பதிவு செய்த நாள் கணக்கீடு முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு அதனடிப்படையில் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்படும். மேலும் குறிப்பிடப்படும் வைப்புத் தொகை மற்றும் மதிப்பீடு கட்டணங்களை மாநகராட்சியில் செலுத்தி உத்தரவு பெற்று குழாய் இணைப்பிற்கான பணிகள் தொடங்கப்பட வேண்டும். என உள்ளதில், குடிநீர் குழாய் இணைப்பு ''மாநகராட்சியின் உரிமம் பெற்ற பிளம்பர்கள் மூலமாக''வழங்கப்படும். எனவும்

2. 1.''இ''ல் மனுதாரர் குடிநீர் பெறுவதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் மேற்படி வேலைகளை மேற்பார்வையிடுவதற்கான கட்டணமாக 10ரூ பணியீட்டுத் தொகையாக மனுதாரர் செலுத்த வேண்டும். இத்துடன் சாலை சீரமைப்பு கட்டணம் மற்றும் அனுமதியற்ற கட்டிடங்களுக்கு நிர்ணயம் செய்யும் அபராத கட்டணமும் செலுத்த வேண்டும். என உள்ளதில்,
   மனுதாரர் குடிநீர் பெறுவதற்காக என உள்ளதை ''மனுதாரருக்கு குடிநீர் இணைப்பு தருவதற்காக'' எனவும்

3. 1.''ஈ''ல் அரசு கட்டிடங்களுக்கு குடிநீர் இணைப்பு பெறுவதற்கு வைப்புத் தொகை மற்றும் இதர கட்டணங்களை முன்பணமாக மாநகராட்சிக்கு செலுத்த வேண்டியது இல்லை. இணைப்பு உத்தரவு பெற்று பிறகு உரிய தொகையினை மாநகராட்சிக்கு செலுத்திய பின்னரே குடிநீர் இணைப்பு வழங்கப்படும். என உள்ளதில்,
   ''இதர கட்டணங்கள் இதனை ''இதர கட்டணங்களை'' எனவும், மேலும் ''ஆனால்'' இணைப்பு உத்தரவு பெற்றபிறகு ''மதிப்பீட்டு'' தொகையினை எனவும்

4. 1.''ஊ''வில் குடிநீர் குழாய் இணைப்பு கோரி விண்ணப்பிக்கும் முன்னரே விண்ணப்பதாரர் நிலுவையிலுள்ள சொத்து வரிகள் அனைத்து மாநகராட்சியில் செலுத்தியிருக்க வேண்டும். என உள்ளதில் விண்ணப்பதாரர் ''அந்தக் கட்டிடத்திற்கு'' நிலுவையில் உள்ள எனவும்

5. 2.ல் வீட்டு உபயோகத்திற்கோ அல்லது வீட்டு உபயோகம் அல்லாத உபயோகத்திற்கோ வழங்கப்படும் குடிநீர் இணைப்புகளுக்கு அளவுமானிகள் பொருத்தப்பட்டு அளவுமானி முறையில் பொருத்தப்படாமல் (Tap rate) உள்ள குடிநீர் குழாய் இணைப்புகள் (Tap rate) அறிவிப்பு பெறப்பட்ட 60 நாட்களுக்குள் அளவுமானி குடிநீர் இணைப்பாக மாற்றப்பட வேண்டும். அவ்வாறு மாற்றப்படாமல் இருப்பின் மறு அறிவிப்பின்றி குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படும். என உள்ளதில்
   (Tap rate) உள்ள குடிநீர் குழாய் இணைப்புகள் ''இந்த உபவிதிகள் அமுலுக்கு வரும் நாளிலிருந்து'' 60 நாட்களுக்குள் எனவும்.

6. ‘‘3.அ’’வில் வழங்கப்படும் குடிநீர் வீட்டு உபயோகங்களுக்கானது (Domestic) அல்லது வீட்டு உபயோகமல்லாத (Non Domestic) பயன்பாட்டிற்கு என்பதை கோயம்புத்தூர் மாநகராட்சிகள் சட்டம் 1981, 200 வது பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளபடி ஒவ்வொரு தருணத்திலும் பயன்பாட்டின் அடிப்படையில் முடிவு செய்யப்படும். என உள்ளதில் வழங்கப்படும் குடிநீர் வீட்டு உபயோகங்களுக்கானதா (Domestic) அல்லது வீட்டு உபயோகமல்லாத (Non Domestic) பயன்பாட்டிற்கானதா என்பதை கோயம்புத்தூர் மாநகராட்சிகள் சட்டம் 1981, பிரிவு 200ன் கீழ் எனவும் மாற்றம் செய்யலாம்

**<u>5 என எண்ணிட்டு :–</u>**

**மாநகராட்சி உரிமம் பெற்ற பிளம்பர்கள் :–**

(அ) மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வகையான குடிநீர் இணைப்புகளும் மாநகராட்சியில் உரிமம் பெற்ற பிளம்பர்கள்மூலமாகவே செய்யப்பட வேண்டும்.

**(ஆ) தகுதிகள் :–**

மாநகராட்சியிடம் உரிமம் கோரி விண்ணப்பிக்கும் பிளம்பர்கள் கீழ்கண்ட தகுதிகள் பெற்றிருக்க வேண்டும்.
1. பத்தாம் வகுப்பு படித்தவராக இருக்க வேண்டும். (தேறிய/தவறிய)
2. ITI குழாய் வேலை செய்யும் பிரிவில் Plumber Trade (National Council for Vocational Training) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
3. குழாய் பொருத்தும் பணிகளில் குறைந்த பட்சம் முன்றாண்டுகள் முன் அனுபவம் உள்ளதற்கான சான்றிதழ்கள் ஒப்படைக்க வேண்டும்.
4. முந்தைய பணி காலத்தில் பணிபுரிந்த நிறுவனத்திடமிருந்து தரமான வேலைகளை செய்வதற்கான நன்னடத்தை சான்றிதழ் பெற்று ஒப்படைக்க வேண்டும்.
5. மேலும் வயது 21 முதல் 45 வரையில் புதிய பிளம்பர் உரிமம் வழங்கப்படும், 60 வயது வரையில் உரிமம் நீட்டிப்பு செய்யப்படும்.

மேலும் அரசாணை எண்.523 நாள் : 19.09.1995–ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி

6. ரூ. 5,00,000 ற்கான கடன் தீர்வை சான்றிதழ் (Solvency Certificate) ஒப்படைக்க வேண்டும்.
7. காப்பீட்டு தொகையாக ரூ. 2 இலட்சம் செலுத்த வேண்டும்.
8. தகுதியுடையவர்களுக்கு வருடாந்திர உரிமம் புதுப்பித்தல் கட்டணமாக ரூ. 500. செலுத்த வேண்டும்.
9. மாநகராட்சி விதிகளுக்கு புறம்பாக பணிகள் மேற்கொள்ளப்பட்டால் பிளம்பர் உரிமம் ரத்து செய்யப்படும்.

எனவே, மாநகராட்சியில் குடிநீர் இணைப்பு வழங்குவது குறித்து மாநகராட்சி வரைவு விதி (By Law) மற்றும் துணை விதிகளில் உரிமம் பெற்ற பிளம்பர்கள் குறித்து இல்லாத காரணத்தால் இனி வரும் காலங்களில் மாநகராட்சியில் உரிமம் பெற்ற பிளம்பர்கள் மூலமாக வழங்கலாம் என்பதை மாநகராட்சி குடிநீர் விநியோக வரைவு துணை விதிகளில் மேற்காண் திருத்தங்கள் செய்யவும் மற்றும் துணை விதிகள் அமலுக்கு வரும் காலம் வரை உள்ள காலத்திற்கு தற்காலிகமாக பிளம்பர் உரிமம் வழங்குவது குறித்து மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**மேற்படி தகுதிகளில்,**

**வரிசை எண் 1ல்**

பத்தாம் வகுப்பு படித்தவராக இருக்க வேண்டும். (தேறிய/தவறிய) பதிலாக எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**வரிசை எண் 2ல்**

தமிழக அரசின் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறை ஆணையர் அலுவலகத்தால் வழங்கப்படும் (Provisional National Trade Certificate) பிளம்பர் சான்று பெற்றிருத்தல் வேண்டும்.

**வரிசை எண் 3ல்**

முன் அனுபவம் மூன்றாண்டுகளுக்கு பதிலாக இரண்டாண்டு முன் அனுபவச் சான்று பெற்றிருத்தல் வேண்டும்.

**வரிசை எண் 6ல்**

ரூ.5,00,000/- ற்கான கடன் தீர்வை சான்றிதழ் (Solvency Certificate) ஒப்படைக்க வேண்டும் என மாமன்றம் நிர்ணையம் செய்துள்ள தொகை மிக அதிகமாக உள்ளது என ஆட்சேபித்தும் கட்டணத்தை குறைத்து நிர்ணையம் செய்து தருமாறு மாநகராட்சி அதிகாரிகளிடம் நேரில் பிளம்பர் உரிமம் வேண்டுவோர் கோரி வருகின்றனர். எனவே, கடன் தீர்வை சான்றிதழ் ரூ. 5,00,000/-லிருந்து ரூ.1,00,000/- ஆக குறைத்து நிர்ணயம் செய்யவும்

**வரிசை எண் 7ல்**

வைப்புத்தொகை 2 இலட்சம் என்பதற்கு பதிலாக ரூ.1இலட்சமாக குறைத்து நிரணயம் செய்யவும்,

மேற் காண் திருத்தங்களை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம்** **ந.க.எண் : 3851/07/எம்.டி.2.**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 122 நாள் 24.07.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 47

| பொருள் | கோயம்புத்தூர் மாநகராட்சி – பொறியியல் பிரிவு - நகர்ப்புற பகுதியில் திறந்த வெளியில் மனித கழிவு கழிக்கும் நிலை இல்லாத நடவடிக்கை – 19 இடங்களில் '' **நம்ம கழிப்பிடங்கள்'' கட்டுதல்** - நிர்வாக அனுமதி வேண்டி – பொருள் வைத்தல் - தொடர்பாக. |
|---|---|

கோயம்புத்தூர் மாநகராட்சி ஐந்து மண்டல பகுதியில் நகர்ப்புற திறந்த வெளியில் மனித கழிவு கழிக்கும் நிலை இல்லாத நடவடிக்கை எடுக்கும் பொருட்டு கீழ்க்கண்ட பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள 19 இடங்களில் ''**நம்ம கழிப்பிடங்கள்''** புதிய தொழில் நுட்ப முறையில் நவீன வசதிகளுடன் கூடிய கழிப்பிடங்கள் கட்டுவதற்கு மாநில அரசால் **''இடைநிரப்பு மற்றும் உட்கட்டமைப்பு''** நிதியிலிருந்து ரூ. 370.00 லட்சத்திற்கு ஓதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | வார்டு எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (லட்சத்தில்) |
|---|---|---|---|
| | | **கிழக்கு மண்டலம்** | |
| 1. | 36 | சித்ரா – அவிநாசி சாலை | 21.00 |
| 2. | 64 | கக்கன் நகர் -சௌரி பாளையம் | 23.00 |
| 3. | 34 | காளப்பட்டி பிரதான சாலை | 24.50 |
| 4. | 64 | முத்து மேடு - பெண்கள் | 14.00 |
| 5. | 33 | காட்டூர் - காளப்பட்டி | 14.00 |
| 6. | 34 | நேரு நகர் பேருந்து நிறுத்தம் | 24.50 |
| | | **வடக்கு மண்டலம்** | |
| 7. | 43 | வெள்ளக்கிணறு – உருமாண்டாம் பாளையம் | 14.00 |
| 8. | 31 | விளாங்குறிச்சி சாலை – சரவணம் பட்டி | 24.50 |
| | | **மேற்கு மண்டலம்** | |
| 9. | 21 | பூசாரி பாளையம் சாலை மேற்கு (பெண்கள்) | 28.00 |
| 10. | 16 | வடவள்ளி பேருந்து நிலையம் அருகில் | 24.50 |
| 11. | 20 | மனோஜ் நகர் - வீரகேரளம் | 24.50 |
| 12. | 5 | கவுண்டம் பாளையம் மயானம் | 24.50 |
| | | **தெற்கு மண்டலம்** | |
| 13. | 99 | கோணவாய்க்கால் பாளையம் - பெண்கள் | 21.00 |
| 14. | 100 | பொள்ளாச்சி பிரதான சாலை - ஈச்சனாரி - பெண்கள் | 11.00 |
| 15. | 100 | அன்னபுரம் | 14.00 |
| 16. | 89 | என்.டி.பி. வீதி. சுண்டக்கா முத்தூர் | 21.00 |
| 17. | 99 | வெள்ளலூர் குப்பைக் கிடங்கு | 14.00 |
| | | **மத்திய மண்டலம்** | |
| 18. | 82 | உக்கடம் பேருந்து நிலையம் | 14.00 |
| 19. | 72 | வ.உ.சி. மைதானம் | 14.00 |
| | | **மொத்தம்** | **370.00** |

மேலும் பணிகள் மேற்கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளி கோரவும் மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம்

**வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் குறிப்பு** - மேற்கண்ட 19 இடங்களுடன் கூடுதலாக

1. மத்திய பேருந்து நிலையம் (நகர்) 2. சிங்காநல்லூர் பேருந்து நிலையம் சேர்த்துக் கொள்ளலாம்.

ந.க.எண் 5393/2011/MD5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 123 நாள் 24.07.2013**

பொருளில் குறிப்பிட்டுள்ள அட்டவணை வரிசை எண் 6ல் உள்ள வார்டு எண் 34 என்பதற்குப் பதிலாக 35 என திருத்தம் செய்து அலுவலகக் குறிப்பு மற்றும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் குறிப்புக்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது. மேலும் மற்ற வார்டுகளிலும் தேவையான இடத்தில் அமைத்துக்கொள்ள அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 48

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - பொறியியல் பிரிவு - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு எண்கள் 48, 70,71,72,73,74,80,81,82,83,84,25,45,49,50,51,52,53,54 மற்றும் 68 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்தல் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு ஈடுபடுத்துதல் - மதிப்பீடு தயாரிக்கப்பட்டது - நிர்வாக அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை: ஆணையர் (பொ) அவர்களின் உத்திரவு நாள்**:** 02-03-2013.

----------

பார்வையில் கண்ட ஆணையர்(பொ) அவர்களின் உத்திரவின்படி இம்மாநகராட்சியின் மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்கள் 48, 70, 71, 72, 73, 74, 80, 81, 82, 83, 84, 25, 45, 49, 50, 51, 52, 53, 54 மற்றும் 68 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல், குப்பைகளை சேகரம் செய்தல் மற்றும் சுகாதார பணிகளுக்கு தேவைப்படும் 150 எண்ணிக்கைகள் துப்புரவு பணியாளர்களை எதிர்வரும் ஆறு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தலாம் என குறிப்பு வழங்கியுள்ளார்.

எனவே மேற்படி கோயம்புத்தூர் மாநகராட்சியின் மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்கள் 48, 70, 71, 72, 73, 74, 80, 81, 82, 83, 84, 25, 45, 49, 50, 51, 52, 53, 54 மற்றும் 68 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்தல் பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில 150 எண்ணிக்கையிலான துப்புரவு பணியாளர்களை ஈடுபடுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.69,00,000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்:6784/2013/எம்.டி.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 124 நாள் 24.07.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 49

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - பொறியியல் பிரிவு - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் வார்டு எண்கள் 60,61,62,63,64,65,66,67,69 மற்றும் 75 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்தல் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு ஈடுபடுத்துதல் - மதிப்பீடு தயாரிக்கப்பட்டது - நிர்வாக அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை: ஆணையர் (பொ) அவர்களின் உத்திரவு நாள்**:** 02-03-2013.

--------

பார்வையில் கண்ட ஆணையர்(பொ) அவர்களின் உத்திரவின்படி இம்மாநகராட்சியின் கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்கள் 60, 61, 62, 63, 64, 65, 66, 67, 69 மற்றும் 75 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல், குப்பைகளை சேகரம் செய்தல் மற்றும் சுகாதார பணிகளுக்கு தேவைப்படும் 106 எண்ணிக்கைகள் துப்புரவு பணியாளர்களை எதிர்வரும் ஆறு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தலாம் என குறிப்பு வழங்கியுள்ளார்.

எனவே மேற்படி கோயம்புத்தூர் மாநகராட்சியின் கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்கள் 60, 61, 62, 63, 64, 65, 66, 67, 69 மற்றும் 75 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்தல் பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில 106 எண்ணிக்கையிலான துப்புரவு பணியாளர்களை ஈடுபடுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.51,00,000/- க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்:6781/2013/ எம்.டி.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 125 நாள் 24.07.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 50

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - பொறியியல் பிரிவு - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு எண்கள் 32,33,34,35,36,37,56,57,58 மற்றும் 59 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்தல் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு ஈடுபடுத்துதல் - மதிப்பீடு தயாரிக்கப்பட்டது - நிர்வாக அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை: ஆணையர் (பொ) அவர்களின் உத்திரவு நாள்: 02-03-2013.

-----------------

பார்வையில் கண்ட ஆணையர்(பொ) அவர்களின் உத்திரவின்படி இம்மாநகராட்சியின் கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்கள் 32, 33, 34, 35, 36, 37, 56, 57, 58 மற்றும் 59 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல், குப்பைகளை சேகரம் செய்தல் மற்றும் சுகாதார பணிகளுக்கு தேவைப்படும் 107 எண்ணிக்கைகள் துப்புரவு பணியாளர்களை எதிர்வரும் ஆறு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தலாம் என குறிப்பு வழங்கியுள்ளார்.

எனவே மேற்படி கோயம்புத்தூர் மாநகராட்சியின் கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்கள் 32, 33, 34, 35, 36, 37, 56, 57, 58 மற்றும் 59 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்தல் பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில 107 எண்ணிக்கையிலான துப்புரவு பணியாளர்களை ஈடுபடுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.51,40,000/- க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்:6780/2013/ எம்.டி.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 126 நாள் 24.07.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 51

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - பொறியியல் பிரிவு - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு எண்கள் 5,6,7,8 மற்றும் 9 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்தல் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு ஈடுபடுத்துதல் - மதிப்பீடு தயாரிக்கப்பட்டது - நிர்வாக அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை: ஆணையர் (பொ) அவர்களின் உத்திரவு நாள்: 02-03-2013.

--------------

பார்வையில் கண்ட ஆணையர்(பொ) அவர்களின் உத்திரவின்படி இம்மாநகராட்சியின் மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்கள் 5, 6, 7, 8 மற்றும் 9 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல், குப்பைகளை சேகரம் செய்தல் மற்றும் சுகாதார பணிகளுக்கு தேவைப்படும் 152 எண்ணிக்கைகள் துப்புரவு பணியாளர்களை எதிர்வரும் ஆறு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தலாம் என குறிப்பு வழங்கியுள்ளார்.

எனவே மேற்படி கோயம்புத்தூர் மாநகராட்சியின் மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்கள் 5,6,7,8 மற்றும் 9 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்தல் பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில 152 எண்ணிக்கையிலான துப்புரவு பணியாளர்களை ஈடுபடுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.70,00,000/- க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்:6779/2013/ எம்.டி.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 127 நாள் 24.07.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 52

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - பொறியியல் பிரிவு - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு எண்கள் 10,13,14,15,17,18,21 மற்றும் 23 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்தல் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு ஈடுபடுத்துதல் - மதிப்பீடு தயாரிக்கப்பட்டது - நிர்வாக அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை: ஆணையர் (பொ) அவர்களின் உத்திரவு நாள்: 02-03-2013.

-------------

பார்வையில் கண்ட ஆணையர்(பொ) அவர்களின் உத்திரவின்படி இம்மாநகராட்சியின் மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்கள் 10,13,14,15,17,18, 21 மற்றும் 23 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல், குப்பைகளை சேகரம் செய்தல் மற்றும் சுகாதார பணிகளுக்கு தேவைப்படும் 140 எண்ணிக்கைகள் துப்புரவு பணியாளர்களை எதிர்வரும் ஆறு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தலாம் என குறிப்பு வழங்கியுள்ளார்.

எனவே மேற்படி கோயம்புத்தூர் மாநகராட்சியின் மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்கள் 10,13,14,15,17,18, 21 மற்றும் 23 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்தல் பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில 140 எண்ணிக்கையிலான துப்புரவு பணியாளர்களை ஈடுபடுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.65,00,000/- க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்:6782/2013/ எம்.டி.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 128 நாள் 24.07.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 53

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - பொறியியல் பிரிவு - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு எண்கள் 11,12,16,19,20,22 மற்றும் 24 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்தல் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு ஈடுபடுத்துதல் - மதிப்பீடு தயாரிக்கப்பட்டது - நிர்வாக அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை: ஆணையர் (பொ) அவர்களின் உத்திரவு நாள்: 02-03-2013.

-------------

பார்வையில் கண்ட ஆணையர்(பொ) அவர்களின் உத்திரவின்படி இம்மாநகராட்சியின் மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்கள் 11,12,16,19,20,22 மற்றும் 24 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல், குப்பைகளை சேகரம் செய்தல் மற்றும் சுகாதார பணிகளுக்கு தேவைப்படும் 121 எண்ணிக்கைகள் துப்புரவு பணியாளர்களை எதிர்வரும் ஆறு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தலாம் என குறிப்பு வழங்கியுள்ளார்.

எனவே மேற்படி கோயம்புத்தூர் மாநகராட்சியின் மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்கள் 11,12,16,19,20,22 மற்றும் 24 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்தல் பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில 121 எண்ணிக்கையிலான துப்புரவு பணியாளர்களை ஈடுபடுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.56,00,000/- க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்:6778/2013/ எம்.டி.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 129 நாள் 24.07.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 54

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - பொறியியல் பிரிவு - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு எண்கள் 42,43,44,46 மற்றும் 47 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்தல் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு ஈடுபடுத்துதல் - மதிப்பீடு தயாரிக்கப்பட்டது - நிர்வாக அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை: ஆணையர் (பொ) அவர்களின் உத்திரவு நாள்: 02-03-2013.

----------------

பார்வையில் கண்ட ஆணையர்(பொ) அவர்களின் உத்திரவின்படி இம்மாநகராட்சியின் வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்கள் 42,43,44,46 மற்றும் 47 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல், குப்பைகளை சேகரம் செய்தல் மற்றும் சுகாதார பணிகளுக்கு தேவைப்படும் 118 எண்ணிக்கைகள் துப்புரவு பணியாளர்களை எதிர்வரும் ஆறு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தலாம் என குறிப்பு வழங்கியுள்ளார்.

எனவே மேற்படி கோயம்புத்தூர் மாநகராட்சியின் வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்கள் 42,43,44,46 மற்றும் 47 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்தல் பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில 118 எண்ணிக்கையிலான துப்புரவு பணியாளர்களை ஈடுபடுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.54,30,000/- க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்:6786/2013/ எம்.டி.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 130 நாள் 24.07.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 55

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - பொறியியல் பிரிவு - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு எண்கள் 31,38,39,40 மற்றும் 41 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்தல் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு ஈடுபடுத்துதல் - மதிப்பீடு தயாரிக்கப்பட்டது - நிர்வாக அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை: ஆணையர் (பொ) அவர்களின் உத்திரவு நாள்: 02-03-2013.

---------------

பார்வையில் கண்ட ஆணையர்(பொ) அவர்களின் உத்திரவின்படி இம்மாநகராட்சியின் வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்கள் 31,38,39,40 மற்றும் 41 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல், குப்பைகளை சேகரம் செய்தல் மற்றும் சுகாதார பணிகளுக்கு தேவைப்படும் 119 எண்ணிக்கைகள் துப்புரவு பணியாளர்களை எதிர்வரும் ஆறு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தலாம் என குறிப்பு வழங்கியுள்ளார்.

எனவே மேற்படி கோயம்புத்தூர் மாநகராட்சியின் வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்கள் 31,38,39,40 மற்றும் 41 ஆகிய வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்தல் பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில 119 எண்ணிக்கையிலான துப்புரவு பணியாளர்களை ஈடுபடுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.54,90,000/- க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்:6785/2013/ எம்.டி.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 131 நாள் 24.07.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 56

பொருள் : கோயம்புத்தூா் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - பொறியியல் பிரிவு - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வாா்டு எண்கள் 27,28,29,30 மற்றும் 35 ஆகிய வாா்டு பகுதிகளில் மழைநீா் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை சேகரம் செய்தல் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளா்களை ஆறு மாத காலத்திற்கு ஈடுபடுத்துதல் - மதிப்பீடு தயாரிக்கப்பட்டது - நிா்வாக அனுமதி வேண்டுதல் - தொடா்பாக.

பாா்வை: ஆணையா் (பொ) அவா்களின் உத்திரவு நாள்**:** 02-03-2013.

-----------

பாா்வையில் கண்ட ஆணையா்(பொ) அவா்களின் உத்திரவின்படி இம்மாநகராட்சியின் வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வாா்டு எண்கள் 27,28,29,30 மற்றும் 35 ஆகிய வாா்டு பகுதிகளில் மழைநீா் வடிகால்களை சுத்தம் செய்தல், குப்பைகளை சேகரம் செய்தல் மற்றும் சுகாதார பணிகளுக்கு தேவைப்படும் 118 எண்ணிக்கைகள் துப்புரவு பணியாளா்களை எதிா்வரும் ஆறு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தலாம் என குறிப்பு வழங்கியுள்ளாா்.

